பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 27 புதன்கிழமை (10-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:105

## கொல்லப்பட்டார் எனக் கூறப்பட்ட பதுமன் நேற்றிரவு விசேட செவ்வி

கிளிநொச்சி,மார்ச்10

புலிகளின் திருகோணமலை மாவட்டத் தளபதி பதுமன், விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார் என இலங்கை அரச ஊடகம் ஒன்று நேற்று நண்பகல் பரபரப்புச்செய்தி ஒன்றை வெளியிட்டது.

ஆனால், பதுமன் நேற்றிரவு 8.30 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் வைத்து 'உதயன்' செய்தியாளருக்குப் பேட்டியளித்தார். தாம் சிறை வைக்கப்பட்டிருக்கிறார் என வெளியான செய்தியும் முற்றிலும் தவறு என்று மறுத்துரைத்தார் அவர்.

நேற்றைய பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-


மட்டு-அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பதற்றத்தைப் பயன்படுத்தி எமது தலைமைக்குக் களங்கம் விளைவிக்கக்கூடிய ஒரு குழப்பத்தைத்தான் இப்போது ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதன் வெளிப்பாடே இந்தச்செய்திகள்.

தலைவரை நேரில் சந்திப்பதற்காக ஐந்து, ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை நாம் வன்னிக்கு வருவது வழக்கம். அந்தவகையில், தலைவரைச் சந்திப்பதற்காகத்தான் வந்துள்ளேன். திங்களன்று தலைவரைச் சந்தித்து உரையாடினேன்.

*கேள்வி:-* தங்களைத் தலைவரிடம் கருணா தூது அனுப்பினார் என ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதே?

*பதில்:-* அப்படி ஒன்றும் இல்லை. எனது மாவட்டத்துக்கு நான் பொறுப்பாக இருக்கின்றேன். எனது மாவட்ட விடயங்களைக் கதைப்பதற்காகத்தான் வந்தேன். என்னைக்கொலை செய்துவிட்டார்கள் எனவும், சிறைப் பிடித்து வைத்துள்ளார்கள் எனவும்

(16ஆம் பக்கம் பார்க்க)


நேற்றைய உதயன் பத்திரிகையை நேற்றிரவு 8.30 மணிக்கு பதுமன் வாசிக்கிறார்.
(படம்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# கருணாவுடன் தொடர்பு வைக்காதீர்!

# அரசுக்கு அறிவிக்க புலிகள் முடிவு!!

## நோர்வே மூலம் உத்தியோகபூர்வமாக இன்று அல்லது நாளை தெரிவிக்கப்படும்

கிளிநொச்சி,மார்ச்10

**தமது அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள கருணாவுடன் பேச்சுக்களோ, தொடர்புகளோ வைப்பதைத் தவிர்த்துக்கொள்ளும்படி இலங்கை அரசைக் கோருவதற்குத் தீர்மானித்திருக்கின்றார்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.**

**புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று உதயனுக்கு இத்தகவலைத் தெரிவித்தார்.**

கிழக்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல கூறியிருக்கின்றார். கிழக்கில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நிலையில் கருணாவின் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயமாக இந்த முடிவு இருக்குமா? என்று கேட்கப்பட்டபோதே தமிழ்ச்செல்வன் மேற்கண்ட தகவலை வெளியிட்டார். இக்கேள்விக்கு அவர் கூறிய பதில் வருமாறு:-

"எங்களுககும் சில சந்தேகங்கள் இருக்கின்றன. அதிகாரபூர்வமாக அரசோ, அங்குள்ள இராணுவத் தளபதிகளோ கருணாவுடன் எந்தவித இணக்கப்பாட்டுக்கும் வந்ததாகத் தெரியவில்லை. இதை நோர்வே அனு

(2ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலின் பின் பேச்சுக்கு விடுதலைப் புலிகள் தயார்!

### அவர்களைச் சந்தித்தபின் பிரி.தூதுவர் தகவல்

கொழும்பு,மார்ச்10

தேர்தலின் பின்னர் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க புலிகள் தயாராகவுள்ளனர் என இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் எவன்ஸிடம் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் தூதுவர் எவன்ஸ் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது இத்தகவலைத் தெரிவித்தார்.

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் எவன்ஸ், பாதுகாப்பு ஆலோசகர் மார்க்வெல்டன் உட்பட மேலும் சில பிரிட்டிஷ் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்றுக்காலை கிளிநொச்சிக்கு விஜயம் செய்தனர். காலை 11.30

(16ஆம் பக்கம் பார்க்க)


பிரிட்டிஷ் தூதரை வரவேற்கிறார் தமிழ்ச் செல்வன்.

### யாழ்., வன்னிக்கு எரிக் சொல்ஹெய்ம் இன்று விஜயம்

இலங்கை வந்துள்ள நோர்வேயின் விசேட அனுசரணையாளர் எரிக சொல் ஹெய்ம் கொழும்புக்கான இலங்கைத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சகிதம் இன்று யாழ். வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாய

(16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து திரும்பிய ஆயர் கருணாவைச் சந்திக்கச் சென்றார்

கொழும்பு,மார்ச்10

புலிகள் அமைப்பில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையைத் தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் மட்டக்களப்பு - திருகோணமலை ஆயர் வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, கருணாவைச் சந்திப்பதற்காக நேற்று மட்டக்களப்பில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்குச் சென்றிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் வன்னிக்குச் சென்றிருந்த ஆயர் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் உட்பட்ட குழுவினர் அங்கு நிலைமையைச் சீர்செய்யும் பேச்சுக்களில், ஈடுபட்டனர் என்பது தெரிந்ததே.

இந்நிலையில், நேற்று மட்டக்களப்புக்குத் திரும்பிய ஆயர், கருணா குழுவினரைச் சந்திப்பதற்காக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இதேவேளை, மட்டக்களப்புப் பகுதியில் நேற்றும் இயல்பு வாழ்க்கை

(16ஆம் பக்கம் பார்க்க)

### மருத்துவக் கண்காட்சி நாளைவரை நீடிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களின் ஏற்பாட்டில் மருத்துவ பீடத்தில் நடைபெற்று வருகின்ற கண்காட்சி நாளை வியாழக்கிழமை வரை - மேலும் ஒருநாள் - நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமாகிய இக்கண்காட்சி செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைவதாக இருநதது. எனினும், பின்னர் அது இன்று புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டிருந்தது.

பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் விடுத்த வேண்டுகோளை அடுத்து நாளை வியாழக கிழமை வரை கண்காட்சியை நீடிக்க ஏற்பாட்டுக்குழு முடிவுசெய்திருப்பதாக நேற்றுமாலை அறிவிக்கப்பட்டது. எனவே, இன்றும் நாளையும் கண்காட்சியைப் பார்வையிடலாம். (ஐ)

### புலிகள் பிரதேசத்திலிருந்து வரும்

## வாக்காளருக்கு அசௌகரியம் எதுவும் ஏற்படுத்தப்படமாட்டாது!

### வடக்குத்தளபதி உறுதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்10

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து நாடாளுமன்றத்தேர்தலில் வாக்களிக்க இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வரும் பொதுமக்களுக்கு படைத்தரபபினரால் அசௌகரியங்கள் ஏற்படுத்தப்படமாட்டா என்று வடக்குப் பகுதிகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வாக்குறுதியளித்துள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய உப குழுவின் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் இத்தகவலைத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்பிராந்திய உபகுழு உறுப்பினர்களுக்கும் - வடக்குப்பகுதிக்கான கட்டளைத்தளபதிக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்று மாலை மனிதஉரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்றது.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் இதனைக் கூறினார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் படையினர் எவ்விதத்திலும் தொடர்புபடமாட்டார்கள். வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் இடங்களிலிருந்து சுமார் 500 மீற்றர்கள் பின்தள்ளியே படையினர் தமது சோதனைச்சாவடிகளை அமைத்துக் கடமையில் ஈடுபடுவர் என்றும் -

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வாக்களிக்க வரும் மக்கள் தமக்கான வாக்காளர் அட்டையுடன் வரும்பட்சத்தில் சாதாரண மக்கள் மீது மேற்கொள்ளப்படும் சோதனை எதுவும் (16ஆம் பக்கம் பார்க்க)

### பத்திரிகைகளைப் பறித்த இனந்தெரியாத குழு

கொழும்பிலிருந்து நேற்று கிழக்குக்குத் தனியார் பஸ்ஸில் அனுப்பப்பட்ட தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் பிரதிகள் அடங்கிய பொதிகளை வாழைச்சேனையில் வைத்து இனம தெரியாத குழு ஒன்று பலவந்தமாக அபகரித்துச் சென்றுள்ளது. இதன் மூலம் அப்பத்திரிகையின் நேற்றைய விநியோகத்தைத் தடுக்க இக்குழு முயன்றிருக்கிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே இந்த அநாகரிக சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. இந்தச் சம்பவத்தை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் உட்பட பல ஊடக அமைப்புகள் வன்மையாகக கண்டித்துள்ளன. (க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மாணவியோடு குறும்பு செய்யமுயன்றவர் கலாசாரம் பேணுவோரால் விசாரணை

கைதடி,மார்ச்10

பாடசாலை மாணவி ஒருவரோடு குறும்பு செய்ய முயன்றவர் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களால பிடிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டார். இச் சம்பவம் அண்மையில் கைதடி மத்தியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி மாணவி பாடசாலை மற்றும் பிரத்தியேக வகுப்புகளுக்குச் சென்று வரும்போது இளைஞர் கும்பல் ஒன்று அம்மாணவியை நாளாந்தம் ஏளனம்செய்து வந்தது.

இந்நிலையில் அண்மையில் அக் கும்பலில் இருந்த ஒருவர் மோட்டார் சைக்கிளில் வலம் வந்து இம்மாணவியோடு குறும்பு செய்யமுயன்றார்.

இது குறித்து கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு அவர்கள் விரைந்து வந்து சம்பந்தப்பட்ட இளைஞரைப்பிடித்து விசாரணை செய்தனர். பின்னர் அவரைக் கடுமையாக எச்சரித்து அனுப்பினார்கள்.

மேற்படி இளைஞர்கும்பலில் திருமணமாகிய சிலரும் அடங்குவர் என்று கூறப்படுகிறது. (ஒ-75)

# 'அம்மா நலமா?' திரைப்படம் குடாநாட்டில் நேற்று வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச்10

'நிதர்சனம்' வெளியிட்டுள்ள ந.கேசவராஜனின் 'அம்மா நலமா?' முழுநீளத்திரைப்படத்தின் வெளியீட்டு விழா நேற்று யாழ், பல்கலைக்கழகக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிதர்சனத்தைச் சேர்ந்தவரான வீரா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஈகச் சுடரினை மாவீரர் ஈழப்பிரியனின் தந்தை நவரத்தினம் ஏற்றினார். தேசியக் கொடியினை யாழ். மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் அப்பன் ஏற்றினார்.

திரைப்படத்தின் வெளியீட்டுரையினை விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார். திரைப்படத்தின் முதன்மைப் பிரதியை யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி வெளியீட்டுவைக்க முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதியினை சீ.வி.கே.சிவஞானம் பெற்றுக்கொண்டார்.

மதிப்பீட்டுரையை எழுத்தாளர் ஜ.சாந்தன் நிகழ்த்தினார்.நிகழ்வின் இறுதியில் 'அம்மா நலமா'? திரைப்படம் திரையிடப்பட்டது. (ஒ-9-ரி)

# கூட்டமைப்புப் பிரசாரம் கிழக்கில் தொடர்கிறது

கொழும்பு,மார்ச்.10

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தமிழ்த தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக குப் பிரசாரம் செய்து வருகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து மட்டு., அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதியாக விருந்த கேணல் கருணா நீக்கப்பட்ட போதும் இந்தப் பிரசார நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் தமிழ்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்ய இப்பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க)

# தெற்கு மறவன்புலோவில் 11 வீடுகளை உரிமையாளரிடம் கையளிக்க ஏற்பாடு

தென்மராட்சி,மார்ச்10

தென்மராட்சி மறவன்புலோ தெற்கு பகுதியில் 11 வீடுகள் படையினரால் விரைவில் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட உள்ளதாக படைத்தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

மறவன்புலோ, தோப்பு விநாயகர் ஆலயத்தினை அண்டிய பகுதியில் உள்ள 11 வீடுகளே கையளிக்கப்படவுள்ளன என்றும் -

மேலும் சில வீடுகளிலும் மக்களைக் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

விடுவிக்கபடவுள்ள 11 வீடுகளையும் நேற்றமுன்தினம் தென்மராட்சிப் பிரதேச செயலரும், அப்பகுதிக்கான கிராம அலுவலரும் பார்வையிட்டுள்ளனர்.

கடந்த ஐந்தாம் திகதி தொடக்கம் இங்குள்ள தோப்பு விநாயகர் ஆலயத்தில் நித்திய பூஜை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## அரசியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ். மறைமாவட்ட மனிதமுன்னேற்ற நடு நிலையம் நடத்தும் சமகால அரசியல் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள மறைக்கல்வி நடுநிலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் "தேர்தல் 2004" என்ற பொருளில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பால சுந்தரம்பிள்ளை கருத்துரை வழங்குவார். (ஒ-4)

# நிர்வாக சேவை அதிகாரிகள் இன்று ஒருநாள் பணி நிறுத்தம்

காரைதீவு,மார்ச்10

இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் இன்று நாடு தழுவிய ரீதியில் ஒரு நாள் பணிநிறுத்தத்தை மேற்கொள்கின்றனர். தமக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக் குறிப்பு அமுலாவதில் தாமதம் காட்டப்பட்டு வருவதை ஆட்சேபித்தே இப்போராட்டம் இன்று இடம்பெறுகிறது.

இன்றைய போராட்டத்திற்குப் பயன் கிட்டவிட்டால் ஒவ்வொரு புதன் கிழமையும் கடமைப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. சம்பள உயர்வு உள்ளிட்ட இச் சேவைக் குறிப்பு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் அமுலாவதில் தாமதம் காட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இன்று பணிப் பகிஷ்கரிப்பு நடத்துபவர்கள், மாவட்டச் செயலகத்தின் முன் கூடி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துவர் என்றும் கூறப்படுகிறது.

## மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்

# அம்பாறையில் முதலாவது தேர்தல் வன்முறை முறையீடு!

காரைதீவு,மார்ச்10

மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்தியப் பணிமனைக்கு முதலாவது தேர்தல் வன்முறை முறைப்பாடு கடந்த திங்களன்று கிடைத்துள்ளது.

இம்முறைப்பாட்டை ஈ.பி.டி.பியின் அம்பாறை மாவட்ட முதன்மை வேட்பாளர் குணசேகரம் சங்கர் தாக்கல் செய்திருக்கின்றார் என்று மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் இரா.மனோகரன் தெரிவித்தார்.

கடந்த 4 ஆம் திகதி பிற்பகல் 12.45 மணியளவில் கல்முனை நகரில் இடம்பெற்ற கிரனைட் வீச்சுச் சம்பவம் பற்றி இம்முறைப்பாடு அமைந்துள்ளதென மனோகரன் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் பரப்புரைக்காக 51-505 ஆம் இலக்க வானில் கல்முனை சென்ற வேளையில் மோட்டார் சைக்களில் வந்த இருவர் தமது உறுப்பினர் மீது இத்தாக்குதலை நடத்தியுள்ளனர் என்றும், அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் என்றும் வேட்பாளர் சங்கர் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார் என்றும் இணைப்பாளர் இரா.மனோகரன் கூறினார்.

தாக்குதலில் வேட்பாளர் துரைராஜா லால் படுகாயமுற்று அம்பாறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கிழக்கில் நேற்று ஆர்ப்பாட்டங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமைக்கு எதிராக மட்டக்களப்பு - கல்முனை நெடுஞ்சாலையில் இரண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும்,மறியல் போராட்டங்களும் நேற்றுக்காலை முதல் நண்பகல் வரை நடைபெற்றன.

தேத்தாத்தீவு தென்தமிழீழ மக்கள் என்ற அமைப்பினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திலும் மறியல் போராட்டத்திலும் பாடசாலை மாணவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் பங்குகொண்டனர். களுதாவளையில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் செருப்பு மாலை அணிவித்த சில படங்கள் தாங்கிய பதாகைகள்களும் பேரணியில் எடுத்துச் கெசல்லப்பட்டன. (க)

## காரைநகரில் கூட்டமைப்பின் அலுவலகம்

காரைநகர்,மார்ச்10

தமிழ் தேசிய கூட்டமைப்பின் காரைநகர் பிரதேசத்திற்கான அலுவலகம் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

காரைநகர் தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் வே.சிற்சபேசன தலைமையில் அலுவலகத்திறப்பு விழா நடைபெறவுள்ளது. காரைநகர் மேற்கு வீதியில் இந்த அலுவலகம் அமையவுள்ளது. (ஐ-73)

# பொதுத் தேர்தலைக் கண்காணிக்க புத்திஜீவிகள் அடங்கிய அமைப்பு

எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் வன்முறைகள் ஏதுமின்றி நீதியாக நடைபெறுவதைக் கண்காணிப்பதற்குப் பல்கலைக்கழகக் கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகள் அடங்கிய தேசிய அமைப் பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் தேசிய நிலையம் என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு கண்காணிப்பில் ஈடுபடும். இதற்கான அங்கீகாரத்தைத் தேர்தல் ஆணையாளர் வழங்கியுள்ளார் என்று மேற்படி நிலையத்தின் இணைச செயலாளர் அமரானந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் இம்முறை பல அமைப்புகள ஈடுபடவுள்ளன. அவை தமது கண்காணிப்புகள் குறித்து வெளிநாடுகளுக்குத்தான் பதில் கூறவுள்ளன. ஆனால், எமது அமைப்பு இந்த நாட்டு மக்களுக்குக் கூறவுள்ளது என்று ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுவர்ணலதா பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பின் சார்பில் 700 பேர் வரையில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளனர். இவர்களில் புத்திஜீவிகள் ஓய்வுபெற்ற அரச அதிகாரிகள், மதகுருமார்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர். (ஒ-10)

## யாழ்.மாநகரசபைப்பகுதியில்

# வர்த்தக நிலைய உரிமப்பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்10

மாநகரசபைக்குட்பட்ட இடங்களிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கான உரிமப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை அறிவித்துள்ளது.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட இடங்களிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு இந்த ஆண்டுக்கான உரிமைப்பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் - ஆகவே உரிமப்பத்திரங்களை இம்மாத இறுதிக்குள் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் -

குறித்தகாலத்துக்குள் உரிமப்பத்திரம் பெறாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது.(ஒ-7)

# கருணாவுடன் தொடர்பு வைக்காதீர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரணையாளர்களும், சர்வதேசத் தரப்பும், அரசும் உறுதிப்படுத்தியுள்ளன.

ஆனால், இராணுவத்தின் சில சக்திகளினதும் சில பகுதியினரதும் ஆதரவைக் கருணா பெறுகிறார் எனத் தற்சமயம் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இது சம்பந்தமாகப் படைத்தரப்புக்கும் அரசுக்கும் அறிவிக்கவிருக்கிறோம். கருணாவுடன் பேச்சுக்களோ, தொடர்புகளோ வைப்பதைத் தவிர்த்துக்கொள்ளும்படி நாளை (இன்று புதன் கிழமை) அல்லது நாளைமறுதினம் (நாளை வியாழன்) அரசையும், படைத்தரப்பையும் உத்தியோகபூர்வமாகக் கோரவிருக்கின்றோம்" - என்றார் தமிழ்ச்செல்வன்.

நாளை தங்களைக் கிளிநொச்சியில் சந்திக்கும் நோர்வேயின் விசேட அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் மூலம் இத்தகவலை புலிகள், அரசுக்குத் தெரிவிக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உதயனுக்கு அளித்த செவ்வியின் விவரம் வருமாறு:-

*கேள்வி:* கருணாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப் போகிறீர்கள் என்று வெளிவந்த செய்திகள் குறித்து....?

*பதில்:* கருணா பல தவறுகளைச் செய்துள்ளார். தலைமைப்பீடம் அவற்றை இன்று உறுதிசெய்துள்ளது. கடந்த ஒரு மாதகாலத்துக்கு முன்னர் அவர் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாடுகள் குறித்து விசாரிக்க அவரை வன்னிக்கு அழைக்கத் தலைமைப்பீடம் முயற்சி எடுத்தது. அவரை வன்னிக்கு வரும்படி தேசியத் தலைவர் அழைத்திருந்தார். தனது குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுவிடும் என்ற பயத்தினால்தான் அப்போது கருணா வராமல் இருந்தார்.

இந்தப் பயப்பீதி காரணமாகப் பிரிந்து சென்று தலைமைப்பீடத்துக்குச் சவால்விட முயற்சித்தார். அத்துடன், அங்கிருந்த எமது தளபதிகளும், பொறுப்பாளர்களும் வன்னி வந்து தலைவரைச் சந்திப்பதையும் அவர் தடுத்துக் கொண்டிருந்தார். இந்தச் சூழ்நிலையில் அவர் பிரிந்துபோகிறார் என்ற செய்தியுடன் தளபதிகளும் பொறுப்பாளர்களும் அவரை உதறித தள்ளிவிட்டு போராளிகளிடம் வாக்குறுதிகொடுத்துவிட்டு இங்கு வந்துவிட்டார்கள். அவருக்கு அடுத்த நிலையில் இருந்த சகல தளபதிகளும் இங்கு வந்துவிட்டார்கள்.

கருணாவின் குற்றச்செயல்கள், செயற்பாடுகள் ஆகியவை தொடர்பான விவரங்களைத் தலைமைப்பீடத்திடம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். கருணாவின் தவறுகள் உறுதிசெய்யப்பட்ட நிலையில் எமது தலைமைப் பீடம் அவரை புலிகள் அமைப்பிலிருந்து நீக்கியுள்ளது.

இந்நிலையில்தான், மனிதாபிமான நோக்கோடு நல்லெண்ண நடவடிக்கையாக கருணாவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி, அவர் விலகிச்செல்வதற்கும் பொதுவாழ்க்கையில் ஈடுபடுவதற்கும் உத்தரவாதம் தருவதாகக் கூறியுள்ளோம். எமது தலைவரின் மனிதாபிமான நல்லெண்ண நடவடிக்கையே இதுவாகும்.

*கேள்வி:* கருணாவுக்குப் பொது மன்னிப்பு சர்வதேச உத்தரவாதத்துடன் வழங்குவதாகக் கூறிள்ளீர்கள். அதுகுறித்து...?

*பதில்:* பொதுமன்னிப்புக் குறித்து அவருக்குச் சந்தேகம் இருந்தால் சர்வதேச உத்தரவாதம் கொடுக்கவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். சர்வதேச உத்தரவாதம் தேவை எனக் கோரினால் அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்வோம்.

*கேள்வி:* கிழக்கில் ஹர்த்தால், ஊர்வலங்கள் என்று கருணாவுக்கு ஆதரவாக நடக்கின்றன என்று கூறப்படுகிறது. எனவே அதுபற்றி...?

*பதில்:* கருணாவின் சில அடியாள்கள் மற்றும் அவரது கிராமத்தில் உள்ள உறவினர்கள் போன்றோரை வாகனங்களில் ஏற்றிவந்து அச்சுறுத்தல் விடுத்துக் ஹர்த்தால், ஊர்வலம என்று நடத்துகிறார். பெரிய அளவில் லட்சக் கணக்கான மக்கள் கூடி ஹர்த்தாலையோ ஊர்வலத்தையோ நடத்தவில்லை. குறிப்பிட்ட சிலர்தான் இதில் பங்கேற்கின்றனர்.

மட்டக்களப்பில் இருந்து வன்னிக்கு வந்து எம்மைச் சந்தித்த பேராயர் மற்றும் புத்திஜீவிகள் கருணாவின் செயற்பாடுகளை வெறுத்துத்தான் இருக்கிறார்கள்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களுக்குத் தவறான செய்திகளை, தகவல்களை ஊட்டி, பிரதேசவாத உணர்வுகளைத் திணித்து, உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தி சுயலாபம் பெறக் கருணா முனைந்திருக்கிறார். உண்மைநிலையை அங்கு விளக்கி வருகின்றோம். பிரதேச வாதத்தாலோ, வேறு எதனாலோ கருணா பழிவாங்கப்படவில்லை என்பதை அங்குள்ள மக்கள் உணரத் தொடங்கிவிட்டனர். அவரது அநியாயங்கள், அத்துமீறல்கள், தேசியத் தலைமைக்கும் விடுதலைப போராட்டத்துக்கும் செய்த துரோகங்கள் ஆகியவற்றை மக்கள் உணரத் தொடங்கிவிட்டனர்.

தமிழ்த் தேசியம் ஒன்றுபட்டு பலமடைந்த நிலையில், தமது பலத்தை வெளிக்காட்டிநிற்கும் நிலையில் அவர் வெளிக்காட்டியுள்ள மிகமோசமான செயலை மக்கள் புரிந்துகொண்டு மாறிவருகிறார்கள். இப்போது நிலைமை சீராகிவருகின்றது.

*கேள்வி:* கருணா தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடி குறித்து சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு என்ன?

*பதில்:* சர்வதேச சமூகத்துக்கு விவரமாகத் தெளிவாக விளக்கியுள்ளோம். "இது ஒரு தனிமனிதனுடன் தொடர்புபட்ட பிரச்சினை. எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனிமனிதன் விடும் தவறுகள் மற்றும் குற்றச்சாட்டுகளுக்கு ஏற்ப ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது வழமையான நடைமுறையாகும்.

ஆனால், சமாதானச் சூழலில் நிலவுவதால் ஒருவர்மீது மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கை பெரிய செய்தியாகத் தோற்றமளிக்கிறது. அவ்வளவுதான். இது பாரிய பிரச்சினை இல்லை. எமது தலைவர் நிலைமையைச் சுமுகமாகக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவார்" என்று சர்வதேச சமூகத்துக்குத் தெளிவாகக் கூறியுள்ளோம். ஆகவே, சர்வதேச சமூகம் எம்மீது நம்பிக்கையுடன் இருக கிறது.

*கேள்வி:* புரிந்துணர்வு உடன்படிககையைத் தம்முடனும் செய்து கொளளும்படி கருணா கூறுகிறார். அது பற்றி...?

*பதில்:* ஒரு தனிமனிதனுடன் எப்படிப் புரிந்துணர்வு உடன்படிக்கையைச் செய்துகொள்வது? உலகில் இப்படியான நடைமுறை இருந்ததாக நாம் கேள்விப்படவில்லை. தன்னை அறியாமல் சில செய்திகளை அவர் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். உண்மையில் நகைப்புக்கிடமான விடயம் இது.

*கேள்வி:* பிரிட்டிஷ் தூதருடன் கிழக்குநிலை பற்றிப் பேசுவீர்களா?

*பதில்:* கிழக்குப் பிரச்சினை தொடர்பாக அவருக்கும் கரிசனை இருந்தது. அவருக்கு உண்மை நிலைப்பாட்டைக் கூறித் தெளிவாக்கியுள்ளோம்.

*கேள்வி:* மட்டக்களப்புக்கு 500 பேர் கொண்ட படையணியை அனுப்பியுள்ளீர்கள் என்று வெளிவரும் செய்திகளில் உண்மையுண்டா?

*பதில்:* இல்லை. தேசியத் தலைவர்மீது விசுவாசம் கொண்ட ஆயிரக் கணக்கான போராளிகளின் அணிகள் அங்கேயே இருக்கின்றன. அதனால் இங்கிருந்து அனுப்பவேண்டிய அவசியம் இல்லை.

- இவ்வாறு தமிழ்ச்செல்வன் பதிலளித்தார்.

(ஒ-க-3)

## ஸிம்பாப்வேயின் ஹராரே விமான நிலையத்தில்

# 64 கூலிப்படையினருடன் மர்ம விமானம் சிக்கியது!

### அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டதாம் அது

ஹராரே,மார்ச்10

அறுபத்தி நான்கு கூலிப்படையினருடன் 'போயிங் 727' ரக சரக்கு விமானம் ஒன்று ஸிம்பாப்வேயின் தலைநகர் ஹராரேயில் அந்நாட்டு அதிகாரிகளிடம் சிக்கியிருக்கின்றது.

அந்நாட்டு அரசு அந்த விமானத்தையும் அதில் இருந்தோரையும் தடுத்து வைத்திருக்கின்றது.

"அந்த விமானத்தில் இருந்த பொருள்கள் மற்றும் ஆள்கள் குறித்தும் பொய்யான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டதனாலேயே விமானத்தை தடுத்துவைக்கவேண்டி வந்தது" - என ஸிம்பாப்வேயின் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கிம்போ மொஹாடி தெரிவித்தார்.

விமானத்திலிருந்த கூலிப்படையினர் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் - விமானத்தில் இராணுவத் தளபாடங்கள் இருந்தன என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விமானம் அமெரிக்காவில் பதிவுசெய்யப்பட்டது என்று கூறப்பட்டாலும் இவ்விடயம் குறித்துத் தனக்கு எதுவும் தெரியாது என்று அமெரிக்கா கூறிவிட்டது.

கடந்த ஞாயிறு முன்னிரவு இந்த



விமானம் ஸிம்பாப்வே அதிகாரிகளிடம் சிக்கியது.

விமானம் உடனடியாக அருகில் உள்ள இராணுவத் தளம் ஒன்றுக்கு கொண்டுசெல்லப்பட்டுவிட்டதால் விமான நிலைய ஓடுபாதையில் அதைக் காணமுடியாது என்று மேற்குலகப் பத்திரிகையாளர்களுக்கு அமைச்சர் மொஹாடி தெரிவித்தார்.

எனினும், ஸிம்பாப்வே தொலைக்காட்சி, வாலில் 'N4610' என்ற பெரிய இலக்கம் பொறிக்கப்பட்ட அந்த வெள்ளை நிற போயிங் விமானத்தைத் தனது ஒளிபரப்பில் காட்டியது.

அந்த விமானத்தில் இருந்த பல்வேறு இராணுவத் தளபாடங்களை ஸிம்பாப்வே இராணுவத்தினர் தூககி ஒவ்வொன்றாகக் காட்டுவதையும் அது ஒளிபரப்பியது. எனினும், அவற்றில் எவையும் ஆயுதங்கள் அல்ல. பெரும்பாலும் வோக்கிடோக்கிகள், இராணுவச் சப்பாத்துக்கள், கையடக்கத் தொலைபேசிகள், இராணுவத்தினர் பயன்படுத்தும் உடுப்புகள், அவர்கள் தூக்குவதற்குப் பயன்படுத்தும் மடிப்புப் பைகள் போன்ற வையே காணப்பட்டன.

அமெரிக்க சமஷ்டி வான்பரப்பு நிர்வாக பதிவுகளின்படி 'N4610' என்ற இலக்கத்தையுடைய 'போயிங் 727' விமானம் கன்ஸாஸ், ஒட்டாவாவைத் தளமாகக் கொண்ட டொட்ஸன் விமானக் கம்பனிக்குச் சொந்தமானது எனக் கூறப்படுகின்றது.

ஆனால், அந்த நிறுவனமோ இந்த விமானத்தைத் தான் ஒரு வாரத்துக்கு முன்னர் ஆபிரிக்க நிறுவனமான லோகோ லிமிட்டெட்டுக்கு விற்றுவிட்டதாகத் தெரிவித்துள்ளது.

விமானத்தில் இருந்த கூலிப் படையினர் தற்போது எங்கே உள்ளனர் என்ற தகவல் வெளியிடப்படவில்லை.

இவர்களின் பயணத்தின் நோக்கம் என்ன? அவர்கள் சென்றடைய இருந்த இடம் எது? - போன்ற விடயங்களைக் கண்டறிவதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருவதாக ஸிம்பாப்வே அமைச்சர் மொஹாடி தெரிவித்தார்.

## குவாண்டனாமோவில் சிறையிருந்த 5 பிரிட்டிஷ்காரர் நாடு திரும்புகின்றனர்



லண்டன்,மார்ச்10

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் கியூபாவின் குவான்டனாமோ குடாவில் கடந்த இரண்டு வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஐந்து பிரிட்டிஷ்காரர்கள் பிரிட்டன் திரும்பவிருக்கின்றனர்.

இவர்கள் பிரிட்டன் திரும்பிய பின்பு இவர்களை பிரிட்டனின் பயங்கரவாத எதிர்ப்புப் பொலீஸார் விசாரணை செய்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ஐவரையும் விட மேலும் நான்கு பிரிட்டிஷ்காரர்களும் குவாண்டனாமோ குடாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நால்வரும் ஆப்கானிஸ்தானில் யுத்த பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டவர்கள் என்றும் இவர்கள் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டு வழக்கு விசாரணையை எதிர்நோக்க உள்ளனர் என்றும் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் டேவிட் பிளின்கெட் தெரிவித்தார்.

இதற்கிடையில், பிரிட்டனுக்கு அனுப்பப்படும் ஐவரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒன்பது மணித்தியாலம்வரை தடுத்து வைக்கப்படலாம் என்றும் குடிவரவு அதிகாரிகளும் பொலீஸாரும் அவர்களை விசாரணைக்குட்படுத்தலாம் என்றும் பி.பி.ஸி. செய்தியாளர் டானி ஷோ தெரிவித்தார்.

கியூபாவின் குவாண்டனாமோ குடா அமெரிக்காவுக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-ரி)

# ஈராக்கில் இடைக்கால அரசமைப்பினை இனக்குழுப் பிரதிநிதிகள் அங்கீகரித்தனர்

பக்தாத்,மார்ச்10

ஈராக்கில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடைக்கால அரசமைப்புத் திட்டத்தை இடைக்கால நிர்வாகக் கவுன்ஸில் நேற்றுமுன்தினம் அங்கீகரித்தது.

இடைக்கால நிர்வாகக் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் - ஈராக்கின் பல்வேறு இனப்பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் - இருபத்தியைந்து பிரதிநிதிகளும் இந்த அரசமைப்பை ஏற்று ஒப்பமிட்டுள்ளனர்.

ஈராக்கின் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை தாக்குதல் தொடுத்தது. அதை ஆக்கிரமித்ததையடுத்து அதுவரை காலமும் அங்கு ஆட்சியிலிருந்த சதாம் ஹுசைன் தலைமையிலான ஆட்சி கவிழ்ந்தது.

சட்டரீதியாக ஆட்சிக்கட்டமைப்பு அங்கு இல்லாதொழிந்ததையடுத்து, பல்வேறு இனக்குழுக்களினதும் பிரதிநிதிகளைக்கொண்ட இடைக்கால நிர்வாகக் கவுன்ஸில் ஒன்றை நிறுவி அதன்மூலம் அன்றாட விவகாரங்களை அமெரிக்கா ஆக்கிரமிப்புப்படை கையாண்டு வந்தது.

இந்தநிலையில், எதிர்வரும் ஜூனில் ஈராக்கின் நிர்வாகத்தை ஈராக்கியர்களிடமே கையளிக்கப்போவதாக அமெரிக்கா அறிவித்தது.

அதனால், அதற்கான இடைக்கால அரசமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அந்த அரசின் கீழ் ஈராக்கிற்கான நிரந்தர அரசமைப்பு உருவாக்கப்பட்டு நடத்தப்படும் தேர்தலின் மூலம், ஈராக்கில் இறைமையுள்ள ஜனநாயக அரசு தோற்றுவிக்கப்படும் என்றும் - கூறப்படுகின்றது.

இவ்வளவிற்கும் ஆரம்பமாகவே இடைக்கால அரசமைப்புக்குத் தற்போது ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த இடைக்கால அரசமைப்புக்கு ஒப்புதல் அளிக்கும் ஒப்பந்தத்தில் இடைக்கால நிர்வாகக் கவுன்ஸிலின உறுப்பினர்கள் கடந்த வெள்ளியன்று ஒப்பமிடவிருந்தனர்.

ஆனால், உத்தேச ஒப்பந்தத்தில் ஷியா முஸ்லிம்களுக்குரிய உரிமைகளும் பங்கும் வழங்கப்படவில்லை எனத்தெரிவித்து ஷியா பிரதிநிதிகள் அடம்பிடித்ததால் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வரை ஒத்திவைக்கப்பட்டது.

எனினும், தற்போது மாற்றம் ஏதுமின்றி அந்த அரசமைப்பை ஷியா முஸ்லிம்கள் ஏற்க இணங்கியதையடுத்தே ஒப்பந்தம் சகல தரப்பினராலும் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது.

ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல் பிரீமர், சிவிலியன் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் முன்னிலையில் இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்தானது.

"இது ஈராக் வரலாற்றில் ஒரு மறக்கமுடியாத சம்பவம்" என இடைக்கால நிர்வாகக் கவுன்ஸிலின் தலைவர் முகமது பஹர் அல்-உல்கோம் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த உடன்பாட்டின் மூலம் ஈராக்கியர்களிடம் ஒற்றுமை உருவாகும் என்று தாம் நம்புகின்றார் எனக் கவுன்ஸிலில் இடம்பெற்றுள்ள குர்திஷ் தலைவர் மஸ்ஸூத் பர்சானி தெரிவித்தார்.

இது பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கருத்துத் தெரிவிக்கையில் "இந்த ஒப்பந்தம், ஈராக் மக்களை வன்முறைக் கலாசார வாழ்க்கையிலிருந்து விடுவித்து சுதந்திரமும், சமாதானமும் மிக்க பாதைக்கு இட்டுச்செல்லும் வரலாற்று ரீதியான நடவடிக்கைகளில் ஒரு மைல்கல்" - என்றார்.

இப்போது, உருவாக்கப்பட்டுள்ள இடைக்கால அரசமைப்பைத் தொடர்ந்து 2005இல் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டு புதிய - நிரந்தரமான - அரசமைப்புச் சட்டம் ஒன்று அங்கு உருவாக்கப்படும்.

அதுவரை, இந்த இடைக்கால அரசமைப்புச் சட்டம் நடைமுறையில இருக்கும் என்று கூறப்படுகின்றது. (ம-க)





இனக் குழுவின் அனைத்து உறுப்பினர்களையும், உறுப்பினர் ஒருவர் இடைக்கால அரசமைப்பு சாசனத்தில் கைச்சாத்திடுவதையும் படங்களில் காணலாம்.

### உலக அரங்கில்

## 100 வயதைத் தாண்டியோர் 2 லட்சம் பேர்

பீஜிங்,மார்ச்10

நூறு வயதைத் தொட்டபெரியவர்கள் எண்ணிக்கை உலகளவில் 2 லட்சத்து 10 ஆயிரம் ஆகும். அவர்களில் 17 ஆயிரம் பேர் சீனாவில் வசிக்கிறாகள். சீனத் தலைநகரான பீஜிங்கில் மட்டும் 257 பேர் 'சதம்' போட்டிருக்கிறார்கள்.

உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒருவர் சீனாவில் வாழ்ந்தபோதிலும் வயதில் சதம் எடுத்தவர்கள் எண்ணிக்கை 12 பேருக்கு ஒருவரே சீனாவில் வசிக்கிறார்கள்.

சீன மக்கள் தொகையான 130 கோடியில் 10 சதவீதப் பேர் 60 வயதைத் தாண்டியவர்கள்.

பீஜிங்கைச் சேர்ந்த 103 வயதுப் பெரியவர் பிதேபென், "மாட்டு இறைச்சி உணவுதான் நான் நீண்டகாலம் வாழ்வதற்கு காரணம்" - என்று சொல்கிறார்.

ஒருநாள் மாட்டு இறைச்சி இல்லை என்றாலும் இவரால் பொறுத்துக் கொள்ள முடியாதாம். (ம-க)

# மலேசியத் தேர்தலில் இந்த முறை இஸ்லாமிய ஆதிக்கம் வலுக்கிறது?

இம்மாதம் 21ஆம் திகதி நடைபெறவிருக்கும் மலேசியத் தேர்தலில் இம்முறை இஸ்லாமிய ஆதிக்கம் அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

"தேர்தலில் மத ரீதியான பிரச்சினைகள் எழுந்தாலும் அவற்றை எதிர்கொள்வோம். அந்தச் சவால்களைச் சந்திப்போம். ஒதுக்கித் தள்ளமாட்டோம். மக்களுக்கு உண்மைகளைக் கூறிப் புரியவைப்போம் நாங்கள் மௌனமாக இருந்தால் எதிர்க்கட்சியினர் மதத்தின் பெயரால் ஆட்சியைப் பிடிக்க முற்படுவர்"

- என்று அந்த நாட்டின் பிரதமர் அப்துல்லா கூறியுள்ளார்.

இஸ்லாம் மதத்தில் தீவிர நம்பிக்கை கொண்ட எதிர்க்கட்சியான இஸ்லாம் சி-மலேசியா கட்சியின் தலைவர் நிக் ஆஸிஸ் நிக்கடும் இஸ்லாமிய அடிப்படை வாதத்தைக் கிளப்பி வருகிறார்.

"இஸ்லாம் மதத்தின் பின்னால் அணிவகுத்து நிற்பவர்கள், அல்லாவினால் உருவாக்கப்பட்ட புனித சட்டங்களின் கீழ் வாழ நினைப்பவர்கள் போன்றோர் இஸ்லாமியக் கட்சிகளை ஆதரிக்கவேண்டும். "இஸ்லாம் மதத்தின் மீது பற்றுக்கொண்ட கட்சிகளை ஆதரிப்பவர்கள் சொர்க்கத்தைச் சென்றடைவர். பிற கட்சிகளை ஆதரிப்பவர்கள் நரகத்தைச் சென்றடைவர்" என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போது மத ரீதியாக மக்களை அணுகித் தேர்தலில் வெற்றிபெற எதிர்க்கட்சிகள் துடித்துக்கொண்டிருக்கின்றன என்று கூறப்படுகிறது. (ம-க)

## கோழிப்பண்ணை அதிபர் மனைவியுடன் தற்கொலை

ஜப்பானின் மேற்குப் பகுதியிலுள்ள கியோட்டா நகரம். அங்கு அசடா நோசன் கம்பெனி என்னும் கோழிப் பண்ணையின் அதிபராக இருந்தவர் ஹஜிமு அசடா. 67வயதான இவர் தன் மனைவியுடன் கோழிப்பண்ணையிலேயே தூக்குப்போட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவரது கோழிப்பண்ணையில், பறவைக்காய்சல் நோய் தாக்கி தினம் ஆயிரம் கோழிகள் செத்தன இதை அவர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவில்லை. அத்தோடு, கோழிகளையும், முட்டைகளையும் கப்பலில் ஏற்றுமதி செய்தார். அதன் மூலம் பறவைக் காய்ச்சல் நோய் மற்ற இடங்களுக்கும் பரவியதாகக் கூறப்படுகிறது.

இதனால், அதிகாரிகள் அவர் மீது நடவடிக்கை எடுத்தனர். இதில் மனம் உடைந்த அவர் தற்கொலை செய்வது என முடிவெடுத்தார் எனக் கூறப்படுகிறது. (ம-க)

## 'வோல்வோ' நிறுவனத்தினால்

# பெண்களுக்காகப் பெண்களால் தயாரிக்கப்பட்ட கார் அறிமுகம்

பெண்களுக்காக பெண்களால் தயாரிக்கப்பட்ட காரை வோல்வோ கார் நிறுவனம் தயாரித்துள்ளது. சுவிறஸ்லாந்தில் கண்காட்சி நடைபெற்று வருகின்றது. உலகம் முழுவதும் உள்ள கார் நிறுவனங்கள் தாங்கள் தயாரித்த அதிநவீன கார்களைக் கண்காட்சிக்கு வைத்துள்ளன. உலகப் புகழ்பெற்ற வோல்வோ கார் நிறுவனம் பெண்களுக்கான காரை இந்தக் கண்காட்சியில் வைத்துள்ளது.

எளிதாகக் கார்க் கதவைத் திறககவும், காரிலிருந்து எளிதாக வெளியே வரவும், தேவைப்படாதபோது பின்புற ஆசனத்தை தியேட்டர் ஆசனம் போல மடித்து விட்டு தேவையான பொருள்களை வைத்துக்கொள்ளும் விதத்திலும் இந்தக் கார் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வோல்வோ நிறுவன தட்ட மேலாளர் காமிலா குறிப்பிடுகையில்,

"வெளியே செல்லும்போது எளிதாகக் காரை நிறுத்தவேண்டும்; காரைப் பராமரிப்பது எளிதாக இருக்க வேண்டும்; சந்தைக்குச் சென்று வாங்கிய பொருள்களை காருக்குள் எளிதாக வைக்கவேண்டும்; தாராளமாக உட்காரவேண்டும்; பார்வைக்கு நன்றாக இருக்கவேண்டும் - என்பது போன்ற பெண்களின் பொதுவான ஆறு ஆசைகளைக் கருத்திற்கொண்டு புதிய கார் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் காரை உருவாக்க 120 பேர் கொண்ட குழு கடந்த ஆண்டு அமைக்கப்பட்டது." - என்றார். (ம-க)




# CUSTOM CAB

## உங்களுக்குத் தேவையான விதத்தில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!




Q & E Advertising

பல்வகைச் செயற்பாடுகளுக்கான புதிய TATA வாகனத்தைப் பற்றி விசாரியுங்கள். வேகம், சக்தி, எடைகொள்ளல், இடவசதி, ஆகக்கூடிய எரிபொருள் பயன்பாடு அனைத்தையும் கொண்டது. TATA 207 D1 கரடுமுரடான பயன்பாடுகளுக்கென்றே வடிவமைக்கப்பட்டது என்றாலும் கூடுதல் வசதியானது. 5 ஸ்பீட் கியர் பொக்ஸையும், பவர் ஸ்டியரிங்கையும் கொண்ட TATA 207 D1 எந்தவொரு நெடுஞ்சாலையிலும் அதிவேகமாகச் செல்லக்கூடியது.

இன்றே 207 D1 வாகனத்தை ஓட்டிப்பார்த்து விபரங்களைக் கேட்டறியுங்கள். நாடு முழுவதிலும் சேவை நிலையங்கள், 24 மணிநேரப் பாதையோர உதவிகள், வேலைத்தள வசதிகள் ஆகியவை வருடத்தின் 365 நாட்களிலும் TATA வாகனங்களுக்குக் கிடைக்கின்றன. அத்துடன், எமது கண்கவர் குத்தகைக் கடன் வசதிகள் பற்றியும் கேட்டறிந்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**TATA 207 DI**

**விலை ரூபா. 675,000/- +VAT**

கையிருப்பு உள்ள வரையே சலுகை வழங்கல் செல்லுபடியாகும்.

TATA

டீசல் அன்ட் மோட்டார் எஞ்ஜினியரிங் லிமிடெட், 65 ஜேத்தவன வீதி, கொழும்பு 14. தொலைபேசி: 011 2449797, 011 4607468, 011 4607473 தொலைநகல்: 011 2449080.
அவசர அழைப்பு: சரத் 0777 326784, டில்ஷான் 0777 397242 மின்னஞ்சல்: dimo@dimolanka.com கண்டி: 081 2212735.

dimo





# இன்று எனக்கு, நாளை உங்களுக்கும்..............!

★ நான் பிறந்து வளர்ந்த மண்ணில் இராணுவம்தான் எனக்குப் பாதுகாப்பு தரவேண்டுமானால் - அதை எண்ணித் வெட்கித் தலைகுனிய வேண்டியவர் யார்? நானா?

★ என் மண்ணில் சுதந்திரமாக துண்டுப்பிரசுரம் விநியோகிக்க முடியவில்லை. ஒரு சிலரின் செயலுக்காக எஞ்சிய அனைவரும், அடங்கி வாழ வேண்டுமானால் - அதை எண்ணி தலைகுனிய வேண்டியவர்கள் யார்? நானா?

★ இலட்சியப் போர் நடத்தும் போராளிகளுக்கு ஆதரவு வழங்குவது போல் பாசாங்கு பண்ணி இல்லாததையும், பொல்லாததையும் எழுதி மக்களை ஏமாற்றுபவர்களைப் பற்றி வெட்கித் தலை குனிய வேண்டியவர்கள் யார்? நானா?

★ தமக்கே அவமானம் தேடும் வகையில் அடாவடித்தனம் செய்து, வயதிலும், அனுபவத்திலும் மூத்தவர்களை அவமதிக்கும் வகையில் நடப்பவர்களை எண்ணி வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள் யார்? நானா?

இல்லை.......... இல்லை............ இல்லை............ இல்லை.........

★ நான் பிறந்து வளர்ந்த மண்ணில் சுதந்திரமாக நடமாட, கூட்டமாக நின்று உரையாட, களங்கமற்று சிரித்து வாழ உங்களைப் போல் ஆசைப்படுபவர்களில் ஒருவன்.......................................... **நான்.**

★ சுதந்திரக் காற்றை முற்று முழுதாக சுவாசிக்க விரும்பம் கொண்டிருக்கும் எண்ணற்ற எம் இனத்தினுள் ஒருவன் ............ **நான்.**

★ அன்று தொட்டு இன்றுவரை எம் இனத்தின் போராட்டங்களில் முன்னின்று செயற்பட்டவர்களுள் ஒருவன்.......................... **நான்.**

★ எக்காலத்திலும் எம் இனத்தை காட்டிக் கொடுத்து வாழ்வதை கனவிலும் எண்ணாதவர்களுள் ஒருவன் ........................ **நான்.**

★ பட்டம் பதவிக்காய் அலைந்து திரியாமல் கண்ணியமாக அரசியல் நடத்திய எம் தலைவர்கள் பலரின் வரிசையில் ஒருவன் ...... **நான்.**

★ உள்ளதை உள்ளபடி நேருக்கு நேர் சொல்லி அதனையே செய்யும் மிகச்சிலருள் ஒருவன்.......................... **நான்.**

★ வாய்மைக்கும் நேர்மைக்கும் இலக்கணமாக விளங்கிய தலைவர்கள் வரிசையில் ஒருவன் ...................................... **நான்.**

**இத்தகைய சக்தியோடு, கறைபடியா கரங்களோடு, இனப்பற்றுணர்வோடு உங்கள் வாக்குகள் கேட்கும் எம் அணியினை அமோக வெற்றியடையச் செய்யுங்கள்.**

# வீ. ஆனந்தசங்கரி

(தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி)

**தலைமையிலான**

| சுயேச்சைக் குழு 01 |  | X | 4 |
|---|---|---|---|

**அறிவிப்பு: எக்காரணங்கொண்டும் எனது தலைமையிலான சுயேச்சைக்குழு 01 இத்தேர்தலல் இருந்து விலகிக்கொள்ளாது என்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றேன். வீண் வதந்திகளை தயவுசெய்து நம்பவேண்டாம்.**

உதயன்

## பிரதமரின் போக்கில் மாற்றம் தேவை

இந்தியாவிலிருந்து வெளியாகும் 'அவுட்லுக்' சஞ்சிகைக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பேட்டியளித்திருக்கின்றார். அப்போது இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்புக் குறித்து சில கருத்துக்களை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

"இலங்கை இனப்பிரச்சினை தங்கள் நாட்டையும் பாதிக்கும் என்பதால் அவ்வாறு ஏற்படாமல் இந்தியா உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. இது இந்தியாவால் முடியும்" - என்று பிரதமர் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதுமட்டுமல்ல, இலங்கையும், இந்தியாவும் செய்து கொள்ளவிருக்கும் உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்தும் பிரதமர் பிரஸ்தாபித்துள்ளார்.

"இராணுவப் பயிற்சிகள், உபகரணங்கள் வழங்கல், பாகாப்புச் சேவைகள் தொடர்பில் எதிர்காலத்தில் கூட்டுறவு ஒன்றை ஏற்படுத்துதல், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பல்வேறு விடயங்களைச் சார்ந்த புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல் ஆகியவை இந்த ஒப்பந்தம் மூலம் மேலும் வலுப்படுத்தப்படும்" - என்று இந்தப் பேட்டியல் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பது தொடர்பான முயற்சிகளில் நமது அயல் நாடான இந்தியாவின் பங்களிப்புக் குறித்து இலங்கைத் தமிழர்களுக்கு எச்சரிக்கை உணர்வுடன் கூடிய ஒரு சந்தேகமும் அச்சமும் இருப்பது மறந்து விடக் கூடியதொன்றல்ல.

ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டம் ஆயுத வழியில் முகிழ்த்த காலத்திலேயே அதில் தலையிட்டு, அதற்கு சரணாலயம் தருகின்ற போர்வையில் ஈழத்தமிழர்களைப் பல குழுக்களாகப் பிரித்து பலவீனமடையச் செய்தது தொடக்கம், அமைதிப் படை என்ற பெயரில் தமிழர் தாயகத்துக்குள் புகுந்து அவர்களின் விடுதலைப் போராட்டத்தை அடியோடு நசுக்க முயன்றது வரை இந்தியத் தரப்புச் செய்த 'திருகுதாளங்கள்' பல. அவை தமிழர்களின் மனதினின்றும் இலகுவாக நீங்கிவிடக்கூடியவை அல்ல.

அமைதிப்படை முயற்சியில் கையைச் சுட்டுக் கொண்ட பின்னர் சற்று ஒதுங்கியிருந்த இந்தியா, அண்மைக்காலங்களில் மீண்டும் அளவுக்கு அதிகமாக இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்து வருகின்றது என்பது தமிழ்மக்களின் பொதுவான அபிப்பிராயம்.

ஈழத்தமிழர்களை அவர்களின் ஐக்கியத்தை - பலவீனப்படுத்தும் ஒவ்வொரு சம்பவமும் நிகழும் போதும் இந்தியாதான் அதன் பின்னணியோ என்று ஒவ்வொரு தமிழனும் ஐயுறும் நிலைமைதான் இன்று நிலவுகிறது.

தமிழர்களின் தலைமை, தமது இனத்தின் ஐக்கியத்தைக் கூறு போட விளையும் சக்தி என்று எதையாவது ஒன்றை நேரடியாகப் பெயர் சுட்டிக் குறிப்பிடாமல் பொதுவாக 'ஒரு சக்தி' என்று கூறினால், அது இந்தியாதான் என்று தமிழ் மக்கள் அனைவரும் கருதும் ஒரு 'தகுதியை' இந்தியத் தரப்பு சுவீகரித்துக்கொண்டுள்ளது.

இப்படித் தமிழர் தரப்பிடம் 'நற்சான்று' பெற்றுள்ள இந்தியாவை, தான் அதிகம் அரவணைத்துப் போக முயல்கிறார் பிரதமர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பிரதமர் ரணில் தலைமையிலான அரசுடன் தமிழர் தரப்பு நடத்திய சமாதானப் பேச்சுக்கள் யுத்தநிறுத்தம் தவிர வேறு எந்தப் பலனும் தராமல் விழலுக்கு இறைத்த நீராய் வீணாகியே போயிருக்கின்றன.

இந்த நிலையில், இதுவரை காலமும் 'சர்வதேச வலைப்பின்னல்' என்ற பெயரில் தமிழர் தரப்பின் விடுதலைப் போராட்ட சக்திகளுக்கு எதிராகத் தொடர்ந்து மறைவில் தாம் மேற்கொண்டு வந்த நடவடிக்கைப் போக்கையே மேலும் தொடர பிரதமர் விரும்புகிறார் என்பதையே, இந்தியா மீது அதீத பற்றை வெளிப்படுத்தும் அவரது பேட்டி உணர்த்துகின்றது.

தமழர் விரோதப் போக்கு சக்திகளை ஒன்றிணைத்து அவற்றின் ஆதரவைத் தேடும் பிரதமரின் நாட்டம் தொடருமாயின், தேர்தலின் பின் சமாதான முயற்சிகள் தொடர்பாக அணி மாற்றம் ஒன்றை விரும்பும் நிலைக்குத் தமிழர் தரப்புத் தள்ளப்படும். அதைப் பிரதமர் புரிந்துகொள்வது நல்லது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் நல்லெண்ணம் பிரதமருக்கு இருக்குமானால், அதில் சம்பந்தப்பட்டிருக்கும் மற்றைய தரப்பான தமிழர்களின் மன எண்ணங்களையும் புரிந்துகொள்ள வேண்டும்; ஆகக் குறைந்தது அதற்காக முயல வேண்டும். ஒருபுறம் நட்புக் கரம் நீட்டிக் கொண்டு மறுபுறம் குழிபறிக்கும் சக்திகளையும் கொண்டு வந்து திணிப்பது - தமக்குப் பலம் சேர்ப்பது - நல்லதோர் சூழ்நிலையை ஏற்படுத்தாது என்பதை அவர் உணர்ந்துகொள்வது மிகவும் நல்லது.

# ஒவ்வொரு பெண்ணும் தனக்குள்ள பிரச்சினையை தானே இனங்கண்டு தீர்த்துக் கொள்ள வேண்டும்

## புனர்வாழ்வு நிறுவன நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் தேவானந்த் உரை

யாழ்ப்பாணம்,மார்ச்10

ஒவ்வொரு பெண்ணும் தனக்குள்ள பிரச்சினைகளைத் தானே இனங்கண்டு தீர்த்துக்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டப்பிரிவு நடத்திய மகளிர் தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய அகதிகள் புனர்வாழ்வு நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் தேவானந்த் தெரிவித்தார். இவ்விழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. மகளிர் தினம் தொடர்பான பல்வேறு கருத்துரைகள் இடம்பெற்றன. சிறப்பு நிகழ்வாக 'வரங்கள் சாபங்களாக' என்னும் கவிதா நிகழ்வும் இடம்பெற்றது. பெண்களுக்கான நாடக ஆற்றுகையும் இடம்பெற்றன.

அங்கு தேவானந்த் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

பெண் பிரச்சினைகளை உணர்ந்து தீர்த்துக்கொள்ளாது தனக்குள்ளேயே புழுங்கி அடங்கிப் போகிறாள். இந்நிலைமை அடக்கப்படுதலுக்கு ஏதுவாகின்றது. சிந்தனைகள் அடங்கிப் போவதால் அவள் தன்னைப்பற்றி அறியாது, தனது உரிமைகளை உணராது யாரோ தீர்மானித்த வாழ்வை தான் வகுத்து வாழ்கிறாள்.

பெண்களுக்குள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டப்பிரிவினர் கிராம அபிவிருத்திப் பயனாளிகள் குழுமூலம் பெண்களுக்கான சுயதொழில் முயற்சி போன்ற பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர் - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மகளிர் அபிவிருத்தி நிலையப்பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் கூறியதாவது:-

பெண்களுக்கு சம உரிமை, சட்டம், கல்வி, வாழும் வசதி என்பன தொடர்பாக மீள் சிந்தனை வரவேண்டும். அடங்கி வாழ்தல் அடக்கப்படஏதுவாகும்.

இதிலிருந்து விடுபடப் பெண்ணுக்கு கல்வியறிவு வேண்டும். சுயமான நல்ல முடிவுகளை எடுத்து நல்ல வழி நின்று வாழ வேண்டும். சுதந்திரம் கேட்டுப்பெறுவதல்ல. தானாகப் பெற்றுக் கொள்ளவேண்டும். - என்றார்.

தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி உரையாற்றுகையில்:-

விடுதலை என்பதும் சுதந்திரம் என்பதும் யாரும் கொடுத்துப் பெறும் ஒன்றல்ல. விடுதலை எமக்குள்ளேயே உள்ளது. சுதந்திரத்தை தாமே கொண்டுவரமுடியுமென்பது இதுவரை காலமும் சமுதாயத்தில் இருந்த பெண்களுக்கு விளங்காமலே இருந்தது. இன்று அவர்களைத் தட்டியெழுப்பப் பல கழகங்கள் உள்ளமையினால் பெண்கள் விழிப்படைந்துள்ளனர். எங்களுக்குள்ளேயே ஆழமாகச் சென்று எமக்குள் உள்ள அடக்குமுறை, அடங்கிப்போதல் போன்றவற்றை உணர்ந்து எமக்குள்ளே உள்ள உணர்வுகளின் வெளிப்பாட்டின் மூலம் விடுதலை எனும் புதையல் வெளிவரவேண்டும். முயற்சிகள் எதுவும் செய்யாது சுதந்திரம் கிடைக்காது. சமூகத்தில் போராட்டத்திற்காக வெளிவந்த பெண்களை ஜீரணிக்க வேண்டும் - என்றார்.

### டாக்டர் பவானி

இங்கு உரையாற்றிய மகப்பேற்று நிபுணர் டாக்டர் ஜி.பவானி தெரிவித்ததாவது:-

பாலியல் பிரச்சினைகளை சிறுமியர், கட்டிளமைப்பருவத்தினர், வயதான குடும்பப்பெண்கள் என 3 வகையினர் எதிர்கொள்கின்றார்கள். சிறுமியர்களுக்கு நெருங்கிய உறவினர், வயோதிபர் போன்றவர்களாலேயே இப்படியான துஷ்பிரயோகம் நிகழ்கின்றது. இதனால் இச்சிறுமியர் மனத்தாக்கம், கருமித் தொற்று போன்றவற்றிற்கு உள்ளாகின்றார்கள். எனவே, நாம் சிறுவர்களிடம் அதிக கரிசனையுடனும், பாதுகாப்புடனும் செயற்படவேண்டும்.

இளம் பருவத்தினருக்கு இப்படியான பாலியல் துஷ்பிரயோகங்கள் நிகழ்வது இன்று சாதாரணமாகி விட்டது. எனவே இவர்களுக்கு சுதந்திரத்தைக் கொடுக்கும்போது அதை எவ்வாறு பயன்படுத்தவேண்டும், ஒரு பிரச்சினை வந்தால் எவ்வாறு தடுக்கலாம் என்பன பற்றிய அறிவுரைகளைக் கூறவேண்டும்.

குடும்பப் பெண்கள் கூட தாம் வேலை செய்யும் அலுவலகங்களிலும், வீட்டில் கணவனாலும் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றாள். ஒவ்வொரு பெண்ணும் துணிவுடனும் தன்னம்பிக்கையுடனும் செயற்பட்டால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.

பெண்களிற்கு சமனான துன்புறுத்தல்களையும் மன அழுத்தங்களையும் ஆண்களும் எதிர்கொள்கின்றனர். உதாரணமாக பெண்களால் குற்றம்சாட்டப்படல், சிறுவர்களைத் துன்புறுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம் - என்று கூறினார்.

சட்டத்தரணி லிங்காதுரைராஜா கருத்துத் தெரிவிக்கையில்:-

பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையே சிறுவித்தியாசமே உள்ளது. இது தவிர மற்றையவற்றில் சமமாகத்தான் உள்ளோம். நமக்குரிய குணாதிசயங்களுடன் வாழ்ந்தால் பிரச்சனை வராது. கிடைக்கும் சுதந்திரத்தை நாம் தவறாகப் பயன்படுத்துகிறோம். எமது பெண்மையை மென்மையாக நினைத்து வாழ வேண்டும்.

ஒரு பெண்ணிடம் எதிர்பார்ப்பது கிடைக்காமல் போவதாலேயே ஆண் தவறான வழிக்குச் செல்கின்றான். இரண்டு கைகள் சேர்த்துத் தட்டும்போதுதான் சத்தம் வரும். பெண்கள் தான் சரிவரச் செயற்படாதவிடத்தே பிரச்சினை உண்டாகிறது. கணவரைத் திருத்தியமைக்கும் பொறுப்பும் அதிகாரமும் இருந்தால் "தாபரிப்பு" வழக்குகள் குறைய வாய்ப்புகள் அதிகம்.

போக்குவரத்து அலுவலகம், பாடசாலை, வீடு போன்றவற்றில் நாம் துன்புறுத்தப்படுகின்றோம் எனக் கூறிக்கூறியே மற்றவரை துன்புறுத்துகிறோம். பெண்கள் திடமாகச் செயற்படும் போதும் வீட்டில் தேவைகளை நிறைவு செய்யும் போதும் துன்புறுத்தலில் இருந்து விடுபடமுடியும். பெண்கள் பெண்களாகவும் ஆண்கள் ஆண்களாகவும் இருந்தால் எந்தவித பிரச்சினையும் வராது - எனத் தெரிவித்தார்.

(ஐ-8)






சர்வதேச மகளிர் தினத்தையொட்டி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனப் பெண்கள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு நடத்திய விழாவில் கலந்துகொண்ட பெண்களில் ஒரு பகுதியினரையும் நிகழ்வில் இடம்பெற்ற ஆற்றுகையில் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம். *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# மகளிர் தின விவாதத்தில் குடாநாட்டுக்கு 2ஆம் இடம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட விவாத அரங்கில் யாழ். மாவட்ட அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பு என் பிலடன் தியேட்டரில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் மன்னார் அணி மற்றும் யாழ். மாவட்ட அணியினர் போட்டியிட்டனர்.

'இலஙகையில் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது' என்ற தலைப்பில் 'யாழ் மாவடட அணியும், அளிக்கப்படவில்லை? என்று மன்னார் மாவட்ட அணியினரும் விவாதித்தனர் இதில் மன்னார் மாவட்ட அணிவெற்றி பெற்றது.

யாழ்.மாவட்ட அணியின் சார்பாக எஸ்.ஞானப்பிரியா, ஏ.சிவாஜினி, ஏ.அனுசியா மற்றும் கே.கலைமாணி ஆகியோர் பங்குபற்றினர்.

(ம-5)

**நாளை**

மாசி 28
வியாழக்கிழமை
(11.03.2004)
திதி: பஞ்சமி
இரவு 9.56 வரை.
நட்சத்திரம்: சுவாதி
பகல் 9.10 வரை
சுபநேரம்: 7.52-9.22
ராகுகாலம்:1.52-3.22
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

கபடமற்ற தர்மமே துணை நிற்கும்.

# நலன்புரி நிலையங்களின் சமாசம் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவு

வலி.வடக்கு,மார்ச்10

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பதென இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் தீர்மானித்துள்ளது.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசக் கூட்டம் சி.கணேசன் தலைமையில் தெல்லிப்பழையில் உள்ள தனியார் வீட்டில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக சுமார் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் ஆராயப்பட்டது.

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களும் இடம்பெயர்ந்து வாழும் மக்களும் ஏனைய மக்களும் ஒற்றுமையாகத் தமிழர் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பது எனத் தீர்மானம் எடுத்துள்ளனர்.

பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வசதியாக இளைஞர்கள், யுவதிகளை உள்ளடக்கிய பிரசாரக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

(ம-86)

# தாச்சிச் சங்கமும் ஆதரவு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழர் கூட்டமைப்பை ஆதரிப்பது என யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கம் கடந்த ஞாயிறு இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் தீர்மானித்துள்ளது.

தலைவர் மு.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெ[illegible] இக்கூட்டத்தில் 100இற்கும் மேற்பட்ட தாச்சி வீரர்கள் [illegible]ந்து கொண்டனர். தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் சகல இடங்களிலும் கூட்டமைப்புக்கு ஆதரவு கோரும் பிரசார நிகழ்வை வீடு வீடாகச் சென்று மேற்கொள்வது எனவும் முடிவு எடுக்கப்பட்டது. (ம-75)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள Boxer CT Delux Red விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 230, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (29460)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தஞ்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29264)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

7நாள்கள் வளர்ச்சி அடைந்த நல்ல இன புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பாலா இல. 18, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P.:222-6875. (29471)

## புறொயிலர் குஞ்சுகள்

பகிரா இனத்துக்கு ஈடானதும் தரம் மிக்கதுமான(D.F) பாம் குஞ்சுகள் குறைந்த விலையில்(35/=) பகிரா இன குஞ்சுகளும் அதேநாளில் முன் கூட்டியே பதிவுசெய்து பெற்றுக கொள்ளலாம் பிறிமா பேட்டுக் குஞ்சுகள பதிவு அடிப்படையில்(58/=) இற்குப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.33, விதானையார் இரண்டாவது ஒழுங்கை, சுண்டுக்குளி. T.P.222-3353 (29437)

21.03.2004ஞாயிற்றுக்கிழமை நல்ல இன புறொயிலர் குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம்.முன்கூட்டியே பதிவுசெய்யவும். 100 குஞ்சுகளுக்கு மேல் பெற்றுக்கொள்பவர்களுக்கு நேரில் வந்து விநியோகிக்கப்படும். தொடர்பு: பாலா றக்கா வீதி, சுண்டுக்குளி. T.P.: 222-6875 (29472)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் 40/=, Prima பேட்டுக்குஞ்சுகள் 60/=. 15.03.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். 13.03.2004 முன்பதிவு செய்யவும். பருத்தித்துறை கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), இல.19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை, நல்லூர்.(29263)

## தவறிவிட்டது

க.உதயமூர்த்தி என்பவரின் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் என்பன யாழ்ப்பாணத்திற்கும் நாயன்மார்கட்டுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் லட்சுமி ஸ்ரோர் பல்பொருள் வாணிபம், இல. 347, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (29467)

## திருமண சேவை

நோர்வே பிரஜாவுரிமையுடைய 36வயது, 5'6" உயரம், வெள்ளை நிறம், ஆயிலியம் 2ஆம் பாதம் நன்கு படித்துப் பணியிலுள்ள வசதியுள்ள மணமகனுக்கு 30 வயதுக்குட்பட்ட தகுதியான மணமகள் தேவை. மேலும இந்து, கிறிஸ்தவ மணமக்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளவும். "சிவாலயா" ஸ்ரீவைகுந்த ஆச்சிரமம், 68/15, சட்டநாதர் வீதி, (சமுர்த்தி வங்கியருகில்) நல்லூர். (29455)

## அறிவித்தல்

### சாவகச்சேரி பிரதேசசபை

சாவகச்சேரி பிரதேசசபையின் நிர்வாகப் பிரதேசத்திற்குள் உள்ள சனசமூக நிலையங்களின் சமாசத்துக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 14.03.2004ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் (கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள) கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆகவே தயவு செய்து தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட ஆகக் குறைந்தது 05 பிரதிநிதிகளாயினும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கு.ந.பாலச்சந்திரன்,
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை.

*சாவகச்சேரி பிரதேசசபை,*
*கொடிகாமம்.*
(C/33971) (21-18-16)

வளன்புரம், கொழும்புத்துறை

## புனித சூசையப்பர் ஆலய வருடாந்த பெருவிழா - 2004

**10-03-2004 - 19-03-2004**

புனித சூசையப்பரே! எங்கள் அவசரங்களில்
உம்மண்டை ஓடிவந்தோம்

**10-03-2004** - புதன்கிழமை கொடியேற்றத்துடன் பெருவிழா ஆரம்பமாகி ஆராதனைகள் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் நடைபெறும்.

**18-03-2004** - திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும், பவனியும் ஆசீரும்.

**19-03-2004** - பெருவிழாத் திருப்பலி காலை 6.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். தொடர்ந்து புனிதரின் திருச்சொருபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

*புனிதரின் அருளாசிபெற அனைவரும்*
*அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.*

புனித சூசையப்பர் ஆலயம்
வளன்புரம்.
கொழும்புத்துறை. யாழ்ப்பாணம். (21-16-18)

பங்குத்தந்தையும் இறைமக்களும்
(வளன்புரம்). (29470)


ஈழத்துத் திரையுலகின் புதிய சகாப்தம்

- ஸ்கிறிப் நெற் -

சமாதானச் சுருள்

குறுந்திரைப்பட விழா

போரின் வடுக்கள்....
எம்மண்ணின் உயிர்த் துடிப்பான உணர்வலைகள்
உங்கள் பார்வைக்கு திரைக்காவியங்களாக...

மார்ச் 11 - வவுனியா (றோயல் திரையரங்கு)
மார்ச் 12 - நெல்லியடி (மகாத்மா திரையரங்கு)
மார்ச் 14 - யாழ்ப்பாணம் (கைலாசபதி கலையரங்கு)
மார்ச் 15 - கொழும்பு (பிரிட்டிஷ் கவுன்ஸில்)
மார்ச் 20 - கொழும்பு (தமிழ்ச் சங்கம்)

Reel Peace Short films Made in Partnership with

programme for creative content
UNESCO
Hivos
BRITISH COUNCIL
Commonwealth Media Development Fund

For SCRIPTNET CHARITY
REEL PEACE PROJECT

சுவீஸ் பிரஷன்ஸ் வீடியோ
நவாலி கிழக்கு, நவாலி.

மூர்த்தி கலர் லாப்
பிரதான வீதி,
மானிப்பாய்.

அபினஜா மல்ரி எலக்ரோனிக்ஸ்
யாழ். வீதி, மானிப்பாய்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கொம்பனியின்
வடபகுதி ஏகவிநியோகஸ்தர்
ஆரணி ஓட்டோஸ் ஸ்பெயார்ஸ்
242, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 3711

டிஜிற்றல் மீடியா நெற்வேக்
ரெம்பிள் றோட்,
நல்லூர்.


## தவறிவிட்டது

மூளாய் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த **வன்னியநாதன் ஞானசம்பந்தன்** என்பவரது தே.அ.அ. இல.520273034V, வி.அ.அ 0904000462 மற்றும் காரியாலய அ.அ. (இல.304152). சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியன 08.03.2004 அன்று தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள சிவாஸ் மில்லில் அல்லது வ.ஞானசம்பந்தன் "ஞானவாசம்" மூளாய் சுழிபுரம் என்னும் முகவரிக்கு அல்லது T.P. 0777-110489 இற்கு அறியத்தருமாறு வேண்டுகிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (29473)(40-21-16-18)



## காந்திஜி சனசமூக நிலையம்

### கொக்குவில் மேற்கு, கொக்குவில்

எமது சனசமூக நிலைய 2004 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவு 08.02.2004 அன்று நடைபெற்றது.

அதன் பிரகாரம் -

| | |
|---|---|
| திரு.G.S. ரட்ணேஸ்வரன் | - போஷகர் |
| திரு. ஐயாத்துரை ராதாகிருஷ்ணன் | - தலைவர் |
| திரு. இராசதுரை கருணாகரன் | - செயலாளர் |
| திரு. நல்லையா வரதராசா | - பொருளாளர் |

*ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட 20 பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.*

*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (29475)(12) - **தலைவர்.**

## கண்ணீர் அஞ்சலி

இணுவில் இந்துக் கல்லூரி அதிபர்
திரு.விக்கினராஜா சச்சிதானந்தன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி விக்கினராஜா மங்களம்

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த மனவருத்தமும் வேதனையும் அடைகின்றோம். அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, அவரை இழந்து தவிக்கும குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளரும்
உடுவில் கல்விக் கோட்ட அதிபர் சங்கமும்.

(சி33972)(39-21-16-18)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலம் இராஜரட்ணம்

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த திருமதி கமலம் இராஜரட்ணம் அவர்கள் 07.03.2004 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் சீனிவாசகம் இராஜரட்ணம் (முன்னாள் உத்தியோகத்தர், குடிவரவு குடியகல்வு திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரவணமுத்து - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் ஸ்ரீ கதிர்காமா (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும் ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்) அவர்களின் அன்புச் சிறிய தாயாரும் காலஞ்சென்றவர்களான இராசா (கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்), கனகசுந்தரம், உருக்மணி மற்றும் செல்லம்மா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பகீரதி, குகவதனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சபீதா, மேனன், ஸ்ரீராம், விஷ்வாதிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும்மாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் நண்பகல் 12 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (29469)(39-21-16-18)

தகவல்:
சீ.இராஜரட்ணம் (கணவர்).

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
24
11
1921



அரன் அடியில்
13
03
2001

சரவணையூர்
திருமதி

### பாக்கியம் பரநிருபசிங்கம்

(P.R.P சிங்கம் ஓவசியர்)

திதி: சங்கரஹட சதுர்த்தி 10-03-2004

*ஆண்டுகள் மூன்றும் ஆனதுவோ*
*அம்மா உன்முகம் பார்த்து?*
*அன்புக்கு இலக்கணம் நீ தந்தாய்*
*ஆறுதலுக்கு வழியேதும் தெரியவில்லை!*
*நாள்கள் கடந்து வருடங்கள் நிறைந்து*
*யுகங்கள் கழிந்தாலும் இவ்வுலகினிலே*
*உன்நினைவினிலே என்றும் நாம் வாழ்வோம்*
*எங்கள் அன்புத் தெய்வமே! தாயே!*

*என்றும் நினைவில் வாழும்:*
அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(29451) (26-21-16-18)

தகவல்:
ப. விஜயராஜசிங்கம்,
(மகன் - லண்டன்).

# பக்கவிளைவுகளற்ற சித்த வைத்தியம்

# நிரந்தர சுகத்தைப் பெற்றுத்தரும்

*'நாரிப்பிடிப்பு' மனித உபாதைகளில் ஒன்றே என்ற தலைப்பில் கடந்தவாரம் சுகநலம் பகுதியில் வெளியான கட்டுரையின் இறுதிப்பகுதி இன்று பிரசுரமாகிறது.*

யானை, குதிரை, ஒட்டகம் போன்றவற்றில் மிக வேகமாகச் செல்லல், மிக உயரத்தில் இருந்து வீழ்தல், பாரங்கள் தூக்குதல் என்புகளுக்குப் பக்கத்தில் செல்லும் பாகங்கள் அப்பகுதி என்புகளில் ஏற்பட்ட உடைவு காரணமாக Scintic Nerve தாக்குப்படலாம். மேலும் குளிர்ந்த நீரில் நீராடல், குளிர்காற்றுப் படல், ஈரமான உள்ளங்கிகளை அணிதல் மேலும் கூபகதகட்டிகள் (Pelvic Tumours) ஏற்படல். கூபகத திருவென்பில் ஷயரோகம் ஏற்படல். புரையோடிய புண்கள் உண்டாவதாலும், வேதனை ஏற்படுகின்றது.

பொதுவாக நோக்குமிடத்து சடுதியாக ஒரு ரோகம் ஏற்பட்டு கூடிக்குறைவது போன்று இதுவும் குறைந்து கூடும் வாதத்தின் தன்மையைக் கொண்டிருப்பதனால் தற்காலிகமாக ஏற்படும் சுகத்தைக் கண்டு மகிழ்ச்சி அடையவோ, நடமாடிக்கொள்ளவோ கூடாது இது ஒரு அற்ப சுகமாகும்.

இதன் இலட்சணங்களைப் பார்க்குமிடத்து அவற்றின் தோஷங்களைப் பொறுத்தே ஏற்படுவதாகும்.

I. Sciatic Nerve தாக்கப்படுவதனால் வேதனை இடுப்பிலிருந்து காலின் பின்புறமாகக் குதிக்கால் வரையும் செல்லும் இது ஒருபக்கமோ, இரண்டு பக்கங்களிலோ ஏற்படலாம். இவ்வியாதியை நிச்சயப்படுத்த கொடுகப்படும் மருந்தினால் நோயாளி அடையும் குணத்தினையும் வேறு பரிசோதனையும் செய்யலாம். அதாவது, வைத்தியர் நோயாளியை நேராக நிமிர்ந்து படுக்கையில் வைத்து முழங்கால் மடிக்காது காலை நீட்டிக் கொண்டே உயர்த்தும்பொழுது வேதனை ஏற்படுவதாக நோயாளி கூறி மறுத்துவிடுவார். அப்போது வேதனை, பாதத்தில் இருந்து மேல் நோக்கிச் செல்வதனை அறியலாம். இதனை Lesiques Sign என்பர்.

II. நோயாளி நடக்கும்பொழுது வேதனை அல்லாத பக்கமாகத் தனது பாரத்தைச் சுமத்தி சரிந்து நடப்பார். இதனை Compensatory Scoliosis என அழைக்கப்படும்.

III. இருமும் பொழுதும், தும்மும் பொழுதும் சிரமப்பட்டு மலத்தை வெளியேற்ற முயற்சிக்கும் பொழுதோ முற்கூறிய பாகங்களில் வேதனை உண்டாகும்.

IV. வாதநோயால் பீடிக்கப்பட்டவர் காலை வீசிவீசி நடப்பார்.

V. சயற்றிக் நரம்பு செல்லும் பாதையில் உள்ள தசைகள் மரத்துப்போதல்.

VI. ஊசியால் குத்துவது போன்ற வேதனை.

VII. சோர்வு, உடம்பு பாரமாக இருத்தல், உணவில் விருப்பமின்மை ஏற்படல்.

VIII. பக்கச்சார்பான நடை இதனை (Walk of Vulture)

'காலினிற் கடுத்துச் சோர்ந்து கடினமாய் நடைகொடாது
சூலென உளைந்து குத்தி துண்டித்து விசித்து வாங்கும்
வேலென மிளிரும் தன்மை கண்ணாய வெடுவெடுத்து இழுத்து வீசும்' -

என்பதிலிருந்து அறியலாம். இது நாள்படக்கூடும் தன்மையுள்ளது. 2-3 வருடங்களுக்கு தொடர்ந்து வைத்தியம் செய்தல்வேண்டும். வாதம் பிரகோபம் அடைந்து பிணியியல் தன்மை ஏற்படுகிறது. கபதோஷம் சம்பந்தப்பட்ட இடங்களில் தடை ஏற்படுவதாலும், தாதுக்கள் ஷயமடைந்து அவ்விடத்தை வாதம் ஆக்கிரமித்துக் கொள்வதாலும் இந்நோய் அதிகரிக்கின்றது.

இதற்குச் சிகிச்சை பிரத்தியேகமாக வேதனை, வலி என்பவற்றைக் குறைப்பதற்கு சிகிச்சையளிக்கப்படும். நோயாளியைப் படுக்கையில் அமைதியாகப் படுக்கவைப்பது அவசியம். இதனால், ஒருகுறிப்பிட்ட காலத்தில் தானாகவே சுகம் கிடைக்கும் எனக் கூறுவர். அடுத்து சில சமயங்களில் முள்ளந்தண்டென்பிற்கு இடையே இருக்கும் தட்டு (Disc) சரிப்படுத்த, விசேட உபகரணங்கள் மூலம் படிப்படியாகப் பாரங்களை ஏற்றுவதனாலும் காலை இழுப்பதுண்டு. இதனால், விலகிய தட்டு தன் சுய இடத்தை அடையும். அடுத்து வேதனையைக் குறைப்பதற்கு வெளி, உள் மருந்துப் பிரயோகங்களைக் கையாளவேண்டும். மலச்சிக்கல் ஏற்படாது தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இதற்கு உள் மருந்தாக குடிநீர், அரிஷ்ட ஆசவங்கள், சூரணங்கள், குளிகைகள் என உள்ளெடுக்கலாம். புறமருந்தாக எண்ணெய், பற்று, ஒத்தணம் என வெளிப்பிரயோகமாகப் பாவிக்கலாம்.

(அ) இராசனாசப்தக் குடிநீர்: சித்தரத்தை, சீந்தில், சிறுகாஞ்சோன்றி, சுக்கு, சிற்றாமணக்கு, சிறுநெருஞ்சி, தேவதாரு என்பவற்றை முறைப்படி குடிநீர் செய்து அதாவது சமஎடை எடுத்து 8 பங்கு நீர்விட்டு 2 பங்காக வற்றவைத்து இறக்கி ஆறிய பின் தினமிருவேளை சாப்பாட்டின் முன் 2 மேசைக்கரண்டி வீதம் உள் எடுக்கலாம். இதனைத் தனித்தோ அன்றி சுக்குச் சூரணத்துடனோ, முடக்குச் சூரணத்துடனோ சேர்த்துக் கொடுக்கலாம். காற்தசைகளில் நோவு இருந்தாலும் பாவிக்கலாம்.




(ஆ) ஏரண்டசப்தக்குடிநீர்: ஆமணக்கு, கத்தரி, தேங்காய்ப்பூக்கீரை, நாரத்தை, நெருஞ்சில், கண்டங்கத்தரி, வில்வைவேர், வைரம் இவற்றை குடிநீர் செய்து பெருங்காயச் சூரணம அல்லது இந்துப்பூ சூரணத்துடன் சேர்த்துக் கொடுக்கலாம்.

(இ) நாள்பட்ட நாரிப்பிடிப்பு, விட்டு விட்டு வரும் பிடிப்புகளுக்கும் முற்றாத நிலையில் உள்ள பவள மல்லிகை இலை எடுத்து வெய்யிலில் உலர்த்திப் பொடிசெய்து பக்குவப்படுத்தி வைத்துக்கொண்டு நாள்தோறும் காலை, மாலை 4 மேசைக்கரண்டி வீதம் வெந்நிரில் இட்டு வடித்துக் குடித்துவர நோய் குணமாகும் (நோய் குணமாகும் வரை பாவிக்கவேண்டும்).

(ஈ) மேலும், வெள்ளறுகு பஸ்பம் 40 கிரேயின் தினம் இருவேளை இஞசிச்சாறு அல்லது வெந்நீருடன் கொடுத்துவர சுகமாகும்.

(உ) அரிஷ்டவகை: இவை கடைகளில் இலகுவாக பெறக்கூடியவை முஸ்தகாரிஷ்டம் புனர்னா வாசவம், அஸ்வகந்தாரிஸ்டம் போன்றவற்றைத் தினமிருவேளை 2 மேசைக் கரண்டி வீதம் சாப்பாட்டுக்கு முன் எடுத்தல் வேண்டும்.

(ஊ) சூரணவகை: அமுக்கிராய் சூரணம், அஸ்வகெந்தாசூரணம், முடக்கு சூரணம் இவற்றில் ஏதாவதொன்றை அரைத் தேக்கரண்டி வீதம் மேற்கூறிய குடிநீர் ஆசவ அரிஷ்டங்களில் ஏதாவதொன்றுடனும உள் எடுத்தல் நன்று.

(எ) குளிகை: சந்திரபிரபாவடி, யோகராஜகுக்குலு, வாதராட்சதன் மாத்திரை, வாதகஜேந்திர சிங்கி, வாதரோகக்குளிகை 2 குளிகை தினமிருவேளை எடுத்தல் வேண்டும்.

குளிகை சூரணம் என்பவற்றினை அதில் கூறப்படும் அனுபானங்களுடன் பாவித்தால் சிறந்த பலனைக் கொடுக்கும்.

மேற்கூறிய மூன்று வகையினையும் தொடர்ந்து 2,3 மாதங்களுக்கு முறைப்படி பாவித்துவர வருத்தம் பூரணசுகம் அடைவதைக் காணமுடியும்.

மேலும், நோயின் இலட்சணங்களில் மகாஸ்நாயு (Ssiatic Nerve) நசுக்கப்படுதல், குளிர்ச்சி அடைதல் போன்றவற்றிற்கு நேரடியாக வெளிப்பிரயோகமாக மருந்து இடுதல வேண்டும். அதற்கு தைலவகை எண்ணெய் வகை, பற்று, சூடான ஒத்தனமிடுதல் வேண்டும்.

நாராயணதைலம், மகாசித்தார்த்த தைலம், நிர்க்குண்டியாதி தைலம், தாளங்காய் எண்ணெய், மாவிலங்கம் தைலம் பாவிக்கலாம்.

எணணெய் தேப்த்து அரைமணித்தியாலயத்தின் பின் கம்பளித்துண்டை வெந்நீரில் நனைத்து தாங்கக்கூடிய சூட்டை அந்த இடத்திற்கு பிடித்தல், இதனை ஒத்தனமிடுதல் என்பர். அன்றியும், ஆடாதோடை, உள்ளி, வாதமடக்கி, நொச்சி, மாவிலங்கு, முடக்கொத்தான், ஆமணக்கு, பருத்தி என்பவற்றின் இலைகளையும் உள்ளியையும் எடுத்து உரலில் இட்டு இடித்துப் பொட்டளிகட்டிப் பானையில் வேடுகட்டி அவித்தும் ஒத்தணம் இடலாம்.

இதனால், நோ, வலி, வீக்கம், சூறையும். சுகம் கிடைக்கும் வரை ஒரு நாளைக்கு ஒரு தடவை ஒத்தனமிட்டால் போதுமானதாகும். வீக்கம் இருக்கும் இடத்தில் அளவான சூட்டுடன் வைத்துக்கட்டலாம். சில வைத்தியர்கள் மேற்கூறிய மூலிகைகளில் ஒன்றை மட்டும் இளஞ்சூடாகக் கட்டும்படியும் கூறுவர்.

மூசாந்திரபத்து வசம்பு, குருகு, கரியபவளம், உள்ளி, சுக்கு, களற்சிவித்து, மஞ்சள், பெருங்காயம், சாலியா இவற்றை சமன்எடுத்து தனித்தனி சூறணித்து, வேப்பம் பட்டை மாவிலங்கம்பட்டை, தனித்தனி சூரணித்து பின் ஒன்று சேர்ந்துக் கற்றாளைச் சாற்றில் அரைத்து அடுப்பில் வைத்து எரித்து இறுக்கமான பதத்தில் இறக்கி ஆறவிட்டு சாராயத்தில் சேர்த்துப் பூசவேண்டும்.

மேற்கூறிய சரக்குகளை விநாகிரி சேர்த்து அரைத்து அடுப்பேற்றிக்காய்ச்சி ஆறிய பின் பூசுவதும் வழக்கம்.

டாக்டர்
கலாநிதிதேவி பொன்னையா
பிரதம சித்த வைத்திய அதிகாரி,
யாழ். மாநகர சபை

மக்கள் உடனடியாக சுகம் கிடைக்க வேண்டும் என விரும்புவது வழக்கம். அதற்கு உடன் நிவாரணம் அளிப்பது எமது அலோபதி வைத்தியமே. இதில், விற்றமின் 'பி'கோ மருந்தினை ஊசிமூலம் தசையினுள் செலுத்தியும், நோ வலியைக் குறைப்பதற்குப் பனடோல், இன்டோசிற், புறுபன் எனவும் கொடுக்கப்படும். வெளிப்பிரயோகமாக மின்சாரத் தைலம், கோடரித் தைலம் என்பவற்றை அப்பகுதியின் மேல் பூசிவிடுவது எமது மக்கள் பழக்கத்தில் கொண்டுள்ளனர்.

ஆங்கில வைத்தியமாகிய அலோபதியில் சென்று பக்கவிளைவுகளைப் பெற்றுக் கஷ்ரப்படுவதைவிட பக்கவிளைவற்ற எமது சித்த வைத்தியத்தை மக்கள் மேற்கொள்வார்களானால் நிரந்தர சுகத்தை பெற்றுக் கொள்வர் என்பது நிச்சயம். ●

## கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். வலயக் கல்விப பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடை பெறும் இக்கூட்டத்தில் கல்வி மேம்பாடுகள் தொடர்பாக ஆராயப் படவுள்ளன.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டக் கல்வி வலயங்களில் இருந்து நூறு பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர் என்று யாழ். கல்வி வலய மேம்பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது.

(ம-6)

## விபத்தில் இருவர் காயம்!

யாழ்ப்பாணம்,மார்ச்10

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் இருவர் படுகாயமடைந்தனர்.

கொக்குவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர்களான, கொக்குவிலைச் சேர்ந்த கஜேந்திரன் வேல்ரூபன் (வயது 22), சுழிபுரத்தைச் சேர்ந்த கனகசபாபதி துஷ்யந்தன் (வயது 23) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

அவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஒ-70)

## பாடசாலைத் தவணைகளில் மாற்றங்கள் அறிவிப்பு

வலி.தெற்கு,மார்ச்10

இந்த வருடத்துக்குரிய பாடசாலைத் தவணை விடுமுறைகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை முன்னிட்டு அவ்வாரத்தில் ஆரம்பமாகி நடைபெறவிருந்த ஜி.சீ.ஈ. உயாதரப் பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளன.

இதற்கு அமைய பாடசாலைத் தவணை நாள்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படாத பாடசாலைகளுக்குத் தனியாகவும், பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகளுக்கு வேறாகவும் பாடசாலைத் தவணைகள் அமைகின்றன.

உயர்தரப் பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகளின் இரண்டாம் தவணை விடுமுறைகள் இரண்டு கட்டங்களாகச் செயற்படுத்தப்படவும் உள்ளன.

சிங்கள - தமிழ் பாடசாலைகளின் தவணை விடுமுறைகள் பின்வருமாறு அமைகின்றன.

உயர்தரப் பரீட்சை நிலையமாகப் பயன்படுத்தப்படாத பாடசாலைகளில் முதலாம் தவணை - 05.01.2004 தொடக்கம் 30.03.2004 வரை இரு நாள்களும் உட்படவும்,

இரண்டாம் தவணை: 27.04.2004 தொடக்கம் 06.08.2004 வரை இரு நாள்களும் உட்படவும்,

மூன்றாம் தவணை: 01.09.2004 தொடக்கம் 10.12.2004 வரை இரு நாள்களும் உட்படவும் நடைபெறும்.

உயர்தரப் பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகளில் முதலாம் தவணை - 05.01.2004 தொடக்கம் 30.03.2004 வரை இரு நாள்களும் உட்படவும்,

இரண்டாம் தவணை - முதலாம் கட்டம்: 19.04.2004 தொடக்கம் 30.04.2004 வரை இரு நாள்களும் உட்படவும்,

இரண்டாம் கட்டம் - 03.06.2004 தொடக்கம் 08.08.2004 வரை இரு நாள்களும் உட்படவும்,

மூன்றாம் தவணை: 30.08.2004 தொடக்கம் 10.12.2004 வரை இரு நாள்களும் உட்படவும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-152)

## மினிபஸ்களில் பயணச் சீட்டுக்கள் விரைவில் அறிமுகம்

கரவெட்டி,மார்ச்10

வடமராட்சிக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ்களில் விரைவில் பயணச் சீட்டுக்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி தனியார் மினிபஸ்களில் பயணிப்போருக்குச் சில நடத்துநர்கள் மீதிப்பணம் தருவதில்லை எனப் பலமுறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் -

இதனையடுத்தே, பயணச்சீட்டு நடைமுறை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் பருத்தித்துறை தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் எஸ். புலேந்திரன் தெரிவித்தார். (ஒ-70)

## பஸ்ஸின் முன்பக்கக் கண்ணாடியை கையால் அடித்துநொறுக்கிய நபர்!

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ். பஸ்நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றின் முன்பக்கக் கண்ணாடியைத் தனது கையினால் அடித்து நொறுக்கியபோது காயமடைந்தவர் என்று கூறப்படும் நபர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

புங்குடுதீவுப் பகுதியைச் சேர்ந்த 42 வயதான மேற்படி நபர் மது போதையில் இருந்தார் என்று கூறப்படுகிறது.

யாழ். பஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் கண்ணாடியை உடைத்தபோதே கையில் இவருக்குக் காயம் ஏற்பட்டதாகவும் -

யாழ். போதனா வைத்தியசாலையில் இவருக்குச் சிகிச்சை மேற்கொண்ட மருத்துவருடன் தகராறு செய்தார் என்றும் -

அப்போது வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் தலையிட்டு சமாதானப்படுத்த முயன்றவேளை, பாதுகாப்பு உத்தியோகத்தரையும் அவர் தாக்கிவிட்டு தப்பியோட எத்தனித்தார் என்றும் - கூறப்படுகிறது.

அவ்வேளை மீண்டும் பாதுகாப்பு உத்தியோகத்தரால் மடக்கிப்பிடிக்கப்பட்ட மேற்படி நபர் வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (ஒ-15)

## தவக்காலச் சிந்தனை

### இலட்சியக் கனவுகள் ஏணிப்படிகளே!


**நான் குடிக்கப்போகும் துன்பக்கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?**
*(மத். 20:22)*

**பதின்மூன்றாம் நாள்**

'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' என்பது வள்ளுவர் வாக்கு. யேசுவின் சீடர்கள் யாக்கோபு, யோவான் ஆகியோரின் தாய் தன் மக்கள் இருவரும் ஆண்டவரின் வலப்புறமும் இடப்புறமுமாக அரியணையில் அமரவேண்டும் என விரும்புகிறாள். ஒரு தாயின் இதயக் கனவுகள் தன் மக்கள் சிறப்புப் பெறவேண்டும் என்பது தானே. அதில் தப்பில்லை. இலட்சியக் கனவுகள் ஒருவர் வாழ்வின் முன்னேற்றத்திற்கான உந்துசக்திகளாகும். யேசு கண்ட இறையரசுக் கனவுகள் வெறும் கற்பனைகளும் அல்ல. மேடைப்பேச்சுக்களும் அல்ல. ஆயினும், தியாகப்பலியில் கலந்துதான் விடியலை காணவேண்டும் என்கிறார். மறைசாட்சியரின் குருதியை உரமாக்கி திருச்சபை என்னும் விருட்சம் பாரெங்கும் பரவிப் படர்ந்தது. இறையாட்சியின் காலம் விடிவதற்கு நாம்புரியும் தியாகங்கள் எத்தனை?

- சுவாமி ஜீவா போல் அ.ம.தி.


# சாவகச்சேரி ஆஸ்பத்திரியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படுவது எப்போது?


பலத்த சேதமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியின் ஒரு பகுதி.

செய்திக் கட்டுரை
கொடிகாமம் செய்தியாளர்

சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலை எப்போது அதன் பழைய நிலைக்குத் திரும்பும். இதுவே தென்மராட்சி மக்களது பெரும்வேணவா. மேற்படி வைத்தியசாலை தென்மராட்சியில் உள்ள 60 கிராமங்களுக்கும், பளைப் பிரதேசத்துக்கும் உட்பட்ட அரசினர் ஆங்கில பொது வைத்தியசாலையாக உள்ளது.

மிருசுவில், வரணி, கைதடி ஆகிய பிரதேசங்களில் சிறுசிறுவைத்திய நிலையங்கள் காணப்பட்டாலும், அவை சாதாரண நோய்களுக்கான சிகிச்சை பெறக்கூடிய வைத்திய நிலையங்களாகும். எனவே, தென்மராட்சியில் சகல வசதிகளையும் கொண்ட பொதுவான மையப் பகுதியை நோக்கிய சத்திரசிகிச்சை அளிக்கக்கூடிய நோயாளர் விடுதிகளையும், 100இற்கு மேற்பட்ட வார்ட்டுக்களையும் அம்புலன்ஸ் வண்டிகளையும் கொண்ட அரச ஆதாரவைத்தியசாலையாக இந்த வைத்தியசாலையே விளங்குகின்றது.


பலகை பொருத்தப்பட்ட நிலையில் கட்டில்கள்....

## ஆஸ்பத்திரியின் முன்னைய நிலை

இவ்வைத்தியசாலை சகல வசதிகளையும் ஏழெழேனும்கொண்ட வெளி நோயாளர் பிரிவுகளையும் நோயாளர் விடுதிகளையும் 3இற்கு மேற்பட்ட வைத்திய அதிகாரிகளையும் 50 இற்கும் மேற்பட்ட உதவியாளர்களையும்கொண்டு இயங்கி வந்தது. அத்துடன், இவை நீண்ட தொடர் கட்டடங்களையும், வசதிகள் கொண்ட நீர் வழங்கல் மலசல கூடங்களையும், நலன்புரி சிற்றுண்டிச்சாலைகளையும் கொண்டு காணப்பட்டது.

இவற்றின் வளர்ச்சிக்கும் ஈடற்ற சேவைக்கும் சாவகச்சேரி வர்த்தக சமூகமும், பொதுநிறுவனங்களும், அரச சார்பற்ற அமைப்புக்களும் பெருமளவு பக்கபலமாக இருந்து வந்தன எனில் மிகையில்லை. இதனால், நோயாளர்கள் எந்தவித சிரமங்கள் இன்றி சிகிச்சைபெற்று வந்தனர். அவசர கிசிச்சை பெறவேண்டியவர்கள் மட்டும் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பப்பட்டு வந்தனர்.

## ஆஸ்பத்திரியின் தற்போதைய நிலை


கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் தென்மராட்சிப் பிரதேசம் முற்றாக அழிவுற்றது. இந்த அழிவில் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையும் விட்டு வைக்கப்படவில்லை. எனினும், தற்போதுள்ள சுமுகமான சூழ்நிலைகளால் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கினர். அதன் பிற்பாடு மக்களின் தேவைகளுக்கேற்ப பொதுஇடங்கள், மீளக்குடியமர்த்தப்படும் இடங்கள், பாடசாலைகள், கோயில்கள் என்பனவற்றின் பெரும்பாலான பகுதிகளில் மிதிவெடி அகற்றும் நிறுவனங்களால் தற்போது மிதிவெடிகள் அகற்றப் பட்டு வருகின்றன.

இவை மட்டுமல்லாது மேற்படி இடங்கள் தனியாரினாலும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களாலும் மற்றும் வெளிநாட்டு நிதி உதவி வழங்கும் நிதி நிறுவனங்களினாலும் முன்னையவற்றைவிட நவீன முறையில் புனரமைத்தும் புனரமைக்கப்பட்டும் வருவதையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ஆனால், தென்மராட்சியில் உள்ள அனைவருக்குமே இன்றியமையாத அத்தியாவசியமாக விளங்குகின்ற சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை மட்டுமே சிறிதளவு புனரமைக்கப்பட்டுள்ளது. வைத்தியப் பொறுப்பதிகாரி மற்றும் ஊழியர்களின் பங்களிப்பு இதில் பிரதான இடத்தைப் பெற்றுள்ளது.

தற்போது வைத்தியசாலையின் பின்புறமே பாவனைக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், நோயாளர்கள் டச்சுவீதி வழியாகவே வைத்தியசாலைக்குச் சென்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இங்கு இரு, நோயாளர் தங்கும் விடுதிகள் புனரமைக்கப்பட்டும், பெண்களுக்கான வார்ட்டுக்களே மெத்தையுடனான கட்டில்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. ஆண்களுக்கான வார்ட்டுக்களில் பலகை இடப்பட்ட கட்டில்களே காணப்படுகின்றன. இவையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன.

அத்துடன், தற்போது 2 வைத்திய அதிகாரிகள் மட்டுமே கடமை புரிகின்றனர். இவர்களில் ஒருவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். இதனால், சிகிச்சைபெறுவதற்கு வரும் நோயாளர்கள் மொழிப்பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். இதனால், தமிழ் தெரிந்த வைத்தியரிடம் நோயாளர் செல்ல முண்டியடிப்பதை நாளாந்தம் காணமுடிகிறது.


சேதமடைந்த நிலையில் ஆண் நோயாளர் விடுதி....

இது ஒருபுறமிருக்க கண்டிவீதியின் பக்கமான - வைத்தியசாலையின் முன்பக்கம் புனரமைக்கப்படாது இடிபாடுகளுடன் காணப்படுகிறது. இதற்கு அப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை என்றும் அவற்றை பாரிய நிதி ஒதுக்கீட்டின் மூலமே புனரமைக்கப்பட முடியுமென காரணம் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக கருத்துத் தெரிவித்த பொதுமக்கள் இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையிலும் சாவகச்சேரி வைத்தியசாலை திருப்தியான சேவையாற்றி வருகிறது என்று - இதற்கு அங்கு கடமைபுரியும் ஊழியர்களின் - அதிகாரிகளின் பங்களிப்பு பிரதானமானது என்றும் - கூறப்பட்டது.

எனவே, மக்களின் துயர்துடைக்கின்ற சாவகச்செரி அரசினர் வைத்தியசாலையைப் புனரமைக்கவும் மிதிவெடிகளை அகற்றவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நிறுவனங்களும் முன்வர வேண்டும். ★







## ஒன்பதாவது ஆண்டு நினைவஞ்சலி

12 - 04 - 1934



10 - 03 - 1995

**செல்வி பரமேஸ்வரி கந்தையா**

(இளைப்பாறிய ஆசிரியை, இளவாலை)

*அன்பினைக் கற்றுத் தந்து*
*அன்போடு வாழ்ந்து காட்டி*
*ஆண்டவன் அடி சேர்ந்த*
*அன்புச் சோதரியே!*
*ஆண்டுகள் ஒன்பது என்ன*
*ஓராயிரம் சென்றாலும்*
*ஆறாது எம் துயர்*
*ஆற்றுவார் யார் உளர்?*

374, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(29438)(14-26-16)

மாறாத அன்புடன்:
தம்பி, தங்கைகள்,
குடும்பத்தினர்.



## காணி விற்பனைக்கு

இல.181, குருசோ வீதியில் 7 பரப்பு பாம்கோட் வளவுக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
Dr. அல்பிரட்
அச்சுவேலி.
T.P.: 0777 111710.
(29385) (40-13-31)



## பொதுக் கூட்டம்

யாழ். அலியோன்ஸ் பிரான்சேஸ் பிரெஞ்சு மொழி கற்றலுக்கும் கலாசாரத்தைப் பரிமாறிக்கொள்வதற்கும் தற்காலிக நிர்வாகசபையை நடத்துவதற்குமான பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப்படும்.

காலம்: **12.03.2004 வெள்ளிக்கிழமை**
நேரம்: **பிற்பகல் 2.00மணி**
இடம்: **நூலக கேட்போரகம், யாழ்.பல்கலைக்கழகம்.**

இதனைத் தொடர்ந்து அலியோன்ஸ் பிரான்சேஸ் அமையவுள்ள இடத்தில் *இல.83/1, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில்* மாலை 7.00மணிக்கு ஒரு பிரான்ஸ் திரைப்படமான Horseman on the roof என்பதும் சனிக்கிழமை 13.03.2004 மாலை 7.00மணிக்கு Joan of Arc என்ற (பிரான்ஸ்மொழி) திரைப்படமும் காண்பிக்கப்படும்.

*ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.*

(29430)(26-14-16) - ஏற்பாட்டாளர்.



## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
10
02
1956



இறைவன் அடியில்
10
03
2003

அமரர்
**செல்லத்துரை தர்மரெட்ணம்**
(செல்வம்)

*உயிர்ப்பு உயிரும் நானே - என்னில்*
*விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்*

ஆனதே ஆண்டொன்று ஆறவில்லை - எம் மனது
எம் குடும்பத் தலைவனே! அன்பின் திருவுருவே!
நீரில்லா எம் வாழ்வு பாலைவனம் போலாயிற்றே!
நீங்காத நினைவோடும் நீர்மல்கும் விழியோடும்
ஏங்கித் தவிக்கின்றோம் ஏனையா - எம்மைப் பிரிந்தீர்?

*70/20, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (29302)(38-14-16-26)

*உம் பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள்.

# பொதுத் தேர்தல் கண்காணிப்புப் பணிகள்

**எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக சுதந்திரமான - நியாயமான தேர்தல் தொடர்பான மக்கள் செயற்பாட்டு அமைப்பின் (பவ்ரல்) தலைவர் கிங்ஸ்லி ரொட்றிக்கோ 'லங்காதீப' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

*கேள்வி:* இரண்டு வருட இடைவெளியின் பின்னர் நாட்டில் பொதுத் தேர்தலொன்று இடம்பெறவுள்ளது. இந்த நிலைமையைத் தாங்கள் எவ்வித கண்ணோட்டத்தில் நோக்குகின்றீர்கள்?

*பதில்:* இது ஒரு துரதிஷ்ட நிலையாகும். இவ்விதம் அடிக்கொருதரம் தேர்தல் இடம்பெறும் நாடு உலகில் வேறெங்கும் காணப்படவில்லை. சாதாரணமாக நமது நாட்டில் பொதுத் தேர்தலொன்றை நடத்திமுடிப்பதற்கு 65 கோடி ரூபா பணத்தைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. அதுமட்டுமன்றி, இவ்வருடத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் நடத்த வேண்டியுள்ளது. தற்போது வடமேல் மாகாணசபையின் ஆயுள் காலம் முடிவடைந்துள்ளது. அடுத்த மாத நடுப்பகுதியில் மேலும் ஐந்து மாகாண சபைகளுக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் தென்மாகாண சபைக்கும் தேர்தல்கள் நடத்தப்படவேண்டியுள்ளன. அந்தவகையில், இவ்வருடத்தை நாம் தேர்தல் ஆண்டு எனக்குறிப்பிட இயலும். இதன்படி நம்நாட்டின் பொதுமக்கள் தமது ஏனைய கருமங்களை ஒரு புறம் ஒதுக்கிவைத்து விட்டு இத்தேர்தல்களில் பங்கெடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இத்தகைய நிலை ஏற்பட்டமைக்கான காரணம் எதுவென்பதே பொதுமக்கள் மத்தியில் இன்று எழுந்துள்ள கேள்வியாகும். நாடாளுமன்றத் தேர்தல் நியாயமான முறையில் நடத்தப்பட்டதா? என்பது வேறொரு வகைப் பிரச்சினை. ஆனால், அரசொன்று பதவியேற்று, அமைச்சரவையொன்று உருவாக்கப்பட்டு இரண்டாண்டுகளாக நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. பொதுமக்களுக்குப் பிரச்சினையாகியுள்ளது.

*கேள்வி:* தேர்தல் நடவடிக்கைகள் ஓரளவு சுதந்திரமான முறையில் இடம்பெறுமென நம்புகின்றீர்களா?

*பதில்:* பல தரப்பட்ட துரதிஷ்ட சம்பவங்கள் இடம்பெறக்கூடும். நாட்டில் 52 பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன. அவைகளில் பெரும்பாலானவை மாவட்டமொன்றுக்கு 25பேர் வரையிலான அபேட்சகர்களை தேர்தல் வேட்பாளர்களாக நியமிக்கின்றன. அவர்களில் 10 பேர் வரையில் மட்டுமே பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த அரசியல்கட்சிகள் யாவும் பலதரப்பட்ட கொள்கைகளை முன்வைத்தே தேர்தலில் போட்டியிடுகின்றன.

துரதிஷ்ட வசமாக எதிர்வரும் பொதுத் தேர்தலை 1980ஆம் அல்லது 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் வழக்கிலிருந்த நடைமுறைகளுக்கு அமையவே நடத்த வேண்டியுள்ளது. அரசமைப்புக்கான 17ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழு இதுவரையில் உருவாக்கப்பட வில்லை. தாம் எதிர்க்கட்சியாகச் செயற்பட்ட வேளையில் ஐதேகட்சி தேர்தல் ஆணைக்குழு குறித்து வற்புறுத்தி வந்தபோதிலும், தாம் பதவிக்கு வந்தபின்னர் கடந்த இருவருடகால இடைவெளியில் தேர்தல் ஆணைக்குழுவொன்றை உருவாக்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

*கேள்வி:* தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை அரசு சிபார்சு செய்திருந்ததும் ஜனாதிபதி அவர்களை நியமனம் செய்யவில்லை. அப்படித்தானே?

*பதில்:* ஜனாதிபதி அவ்விதம் தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்காது விட்டால் அதனை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்திருக்கக் கூடாதல்லவா? அது குறித்து அக்கறை கொண்டிருந்தால் அதற்கான ஏனைய முயற்சிகளை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும்.

*கேள்வி:* அரசுக்குச் சொந்தமான வாகனங்களை தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது குறித்துத் தற்போது பிரச்சினை எழுப்பப்படுகிறது. இது குறித்து மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றிக்கூற முடியுமா?

*பதில்:* இவ்விடயம் சம்பந்தமான நடவடிக்கைகளை எம்முடன் இணைந்து செயற்படும் "டிரான்ஸ் பரன்சி இன்ரநஷனல்" என்ற அமைப புக்கையாண்டு வருகிறது. இவ்விடயம் குறித்து எமக்குக் கிடைக்கும் விவரங்களை நாம் அந்த அமைப்பிடம் சமர்ப்பிக்கின்றோம். இது விடயத்தில் அரசசேவை ஆணைக்குழு பங்கேற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென நான் கருதுகிறேன். அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அறிவுறுத்தி இச்செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். பொதுத்தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்குத் தற்போதைய நிலையில் பெருமளவிலான அதிகாரங்கள் கிட்டியுள்ளன. அரசமைப்பின் 17ஆவது திருத்தத்துக்கமைய தேர்தல் ஆணையாளரால் இவ்வித செயற்பாடுகளுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

அண்மையில் வழங்கப்பட்டதொரு நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம், ஊழல் இடம்பெற்றதாகத் தீர்மானிக்கப்படும் வாக்களிப்பு நிலையமொன்றின் வாக்களிப்பை இரத்துச் செய்வதற்கும், இரு வாரங்களுக்குள் மீள்வாக்களிப்பொன்றை நடத்தவும் தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வாக்களிப்பு நிலையமொன்றில் பலவந்தமாக வாக்களிக்க வைப்பதோ, அல்லது கள்ளவாக்குச் செலுத்தும் நடவடிக்கையோ இடம்பெற்றால் அந்நிலையத்தில் வாக்களிப்பைத் தேர்தல் ஆணையாளர் இரத்துச் செய்யமுடியும்.

*கேள்வி:* தேர்தல் தினத்தன்று இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாகவே மேற்கூறிய தனது அதிகாரங்களைப் பாவித்துத் தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை மேற்கொள்ள முடியும். தேர்தல் பிரசாரங்களின்போது இடம்பெறும் சட்ட மீறல்கள் மற்றும் அரச வாகனங்களைத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல் ஆகியன தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும்?

பதில்: இவை தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களே பொறுப்பேற்க வேண்டும். அவ்விதம் அவர்கள் பொறுப்பேற்கத் தவறினால் அவர்களுக்கெதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய ஒழுங்குமுறை உருவாக்கப்படல் வேண்டும்.

இவ்விடயத்தில் தேர்தல் ஆணையாளர் அரசசேவை ஆணைக்குழு ஊடாக சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்களுக்குக் கட்டளையிட வேண்டுமென நான் கருதுகிறேன். 2001ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர் இலக்கத்தகடுகளற்ற முப்பது முதல் நாற்பது வரையிலான அரசுக்குச் சொந்தமான வாகனங்கள் வீதியோரங்களில் கைவிடப்பட்டிருந்த நிலையில் பொலீஸாரினால் மீட்கப்பட்டன. அமைச்சின் செயலாளர்கள் அறியாமல் இவ்வாகனங்களை எடுத்துச்செல்லப்பட்டிருக்க முடியாது. இவ்வித சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கக்கூடிய விதத்தில் வழிவகைகள் வகுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இப்போது சுதந்திரமாகச் செயற்படத்தக்க பொலீஸ்ஆணைக்குழு இயங்கி வருகிறது. புதிய பொலீஸ்மா அதிபர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் சிறப்பாகச் செயற்படும் நிலையில் கடமையாற்றி வருகிறார். தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டுப் பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பிரதிப் பொலீஸ்மா அதிபர் காமினி நவரத்ன தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேறகொள்ளவும், மற்றொரு பிரதிப்பொலீஸ்மா அதிபரான ஜயந்த விக்கிரமரத்ன தேர்தல் வன்செயல்களைக் கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும் பணிக்கப்பட்டுள்ளனர்.

*கேள்வி:* அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களைச் சரியான வகையில் இயங்க வைப்பது மற்றொரு - பிரச்சினையாகவுள்ளது. அதுதொடர்பாக மேற்கொள்ளப்படக் கூடிய நடவடிக்கைகள் எவையென நீங்கள் கருதுகின்றீர்கள்?

*பதில்:* அரச ஊடகங்களைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் அரசுக்குச் சார்பாகப் பயன்படுத்துவது பதவி யிலுள்ள எந்தவொரு அரசும் மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையே



கிங்ஸ்லி ரொட்றிக்கோ

யாகும். தமக்குச் சார்பாகச் செயற்படக்கூடிய தலைவரொருவரைக் குறிப்பிட்ட ஊடகத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமித்துத் தேர்தலில் தமக்குச் சார்பாகக் குறிப்பிட்ட ஊடகத்தைச் செயற்படவைப்பது சாதாரணமாக இடம்பெறுவதுதான்.

இந்தத் தடவை ஊடகங்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காகப் பல தரப்பட்ட அமைப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பொதுமக்களின் வரியைப் பயன்படுத்திச் செயற்படும் காரணத்தால் அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஊடகங்கள் விசேட கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. எனவே, அவ்வித ஊடகங்கள் பக்கச் சார்பாக தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது பாரதூரமான விடயமாகும். மற்றொருபுறம் தனியார் ஊடகங்களாயினும் அவை வழமைக்கு மாறாகக குறிப்பிட்டதொரு அரசியல் கட்சிக்குச் சார்பாகச் செயற்பட்டால் அதுவும் பாரதூரமான விடயமாகும்

*கேள்வி:* இவ்வித செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவையெனக் கூறமுடியுமா?

பதில்: அரச ஊடகமொன்று இவ்விதம் பக்கச்சார்பாகச் செயற்படவில்லையாயின் அதற்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உண்டு. ஆனால், தனியார் ஊடகங்களின் இவ்வித செயற்பாடுகளுக்கெதிராகத் தேர்தல் ஆணையாளரால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளமுடியாது.

*கேள்வி:* அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள்கூடத் தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தல்களைக் கணக்கெடுக்காது செயற்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டல்லவா?

*பதில்:* அவ்வித சந்தர்ப்பங்களும் ஏற்பட்டது உண்மையே. ஆனால், இம்முறை அவ்வித நடவடிக்கைகள் இடம்பெற அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வித நடவடிக்கை இடம்பெற்றால் அதற்கெதிராக தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கான அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

*கேள்வி:* ஆனால், அவ்வித சந்தர்ப்பம் ஒன்று உருவாகும் பட்சத்தில் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்து வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் சட்டதிட்டங்கள் நிறைவேற்றப்படவில்லையே?

பதில்: இதுவே இவ்விடயத்திலுள்ளதொரு குறைபாடாகும் தற்போது இதற்கான ஆலோசனைகள் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலுள்ளன. ஆயினும், எதிர்பாராதவகையில் பொதுத்தேர்தல் நடாத்தப்பட வேண்டி ஏற்பட்டுள்ளமையால் அந்த நடவடிக்கைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. தற்போதைய தெரிவுக் குழுவுக்கும் முன்னைய தெரிவுக் குழுக்களுக்கும் ஏற்பட்ட நிலைமையே ஏற்படக்கூடும்.

சட்டவிதிகள் நிறைவேற்றப்படவில்லையெனத் தாங்கள் தெரிவிப்பது சரியானதே. ஆயினும் தற்போது நடைமுறையிலுள்ள சட்ட விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள இயலும். இது தொடர்பாகப் பொதுமக்களும் தீமானிக்கக் கூடுமென்பது மற்றொரு காரணமாகும். ஊடகமொன்று பக்கச்சார்பாகச் செயற்படுமிடத்து அவ்வூடகம் வெளிப்படுத்தும் செய்திகளுக்குக்காது கொடுக்காது பொதுமக்கள் அதனைப் புறக்கணித்துவிட முடியும்.

*கேள்வி:* இத்தடவை கண்காணிப்பாளர்கள் வாக்குச் சாவடிகளுள் சென்று தமது கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு முதற்தடவையாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் இடம்பெறும் பொதுத்தேர்தலில் 9,500இற்கு மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. இவ்வாறான சகலவாக்குச் சாவடிகளிலும் கண்காணிப்பாளர்களை நியமித்து கண்காணிப்பு மேற்கொள்ள நீங்கள் தயாரா?

*பதில்:* தற்போது நாம் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். இது நாம் கண்காணிப்

## வியெஸ்ரி

புப் பணிகளில் ஈடுபடும் 18ஆவது தேர்தலாகும். கடந்த 15 ஆண்டுகளாக இவ்வித கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்ட அனுபவம் கொண்ட பத்தாயிரம் வரையிலான தேர்தல் கண்காணிப்புப் பணியாளர்களை எமது அமைப்புக் கொண்டுள்ளது. இது தவிர மேலும் பத்தாயிரம் வரையிலான புதிய கண்காணிப் பாளர்கள் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர். இவ்விதம் வாக்குச் சாவடிகளில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளக் கூடிய வகையில் அவர்களை இம்மாத நடுப்பகுதிக்குள் பயிற்றுவித்து முடித்து விடலாமென நாம் நம்புகின்றோம்.

*கேள்வி:* இவற்றுக்கு மேலதிகமாக எவ்வித கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளீர்கள்?

*பதில்:* இவற்றிற்கு மேலதிகமாக நாம் நடமாடும் கண்காணிப்பாளர்கள் என்றதொரு பிரிவை உருவாக்கவுள்ளோம். இதற்கென அனுப வம் வாய்ந்த குடிமக்கள், சமயத்தலைவர்கள் மற்றும் புத்திஜீவிகளின் உதவியை நாடியுள்ளோம். தற்போது நாம் குடிமக்கள் குழுவொன்றை உருவாக்கித் தயார்படுத்தி வருகின்றோம். இதன் மூலம் தேர்தல் வன்முறைகளைக் கணக்கெடுப்பதைவிட, அவ்வித வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாது தடுப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வது குறித்தே கவனஞ்செலுத்தவுள்ளோம். இவ்விதம் தேர்தல் வன்முறைகள் இடம்பெறாவண்ணம் மத்தியஸ்தம் வகிக்கக்கூடிய திறமையுடையவர்களை ஒன்று திரட்டுவதே இக்குழுவை உருவாக்கிய தற்கால நோக்கமாகும்.

*கேள்வி:* இது திடீர்ப் பொதுத் தேர்தலாகும். எனவே, இக்குறுகிய கால இடைவெளிக்குள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான கண்காணிப்பாளர்களை ஒன்றுதிரட்டக்கூடிய வசதி தங்களுக்கு உள்ளதா?

*பதில்:* உண்மையில் இடம்பெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களை எதிர்பார்த்தே நாம் இப்பயிற்சி நெறிகளை ஒழுங்குசெய்தோம். இப்பயிற்சி நெறிகள் மூன்று மாதங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. எனவே, எமது பணி இலகு படுத்தப்பட்டுவிட்டது. அப்பயிற்சி நெறிகளை மேற்கொண்டுள்ளோரையே நாம் எதிர்வரும் பொதுத்தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவுள்ளோம். சகல மாகாண சபைகளும் கலைக்கப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதநடுப்பகுதியில் தேர்தல்கள் நடத்தப்படக் கூடுமென நாம் எதிர்பார்த்தோம். அவ்வித எதிர்பார்ப்புடன் நாம் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தமையால் திடீரென நடைபெறவுள்ள இப்பொதுத் தேர்தலில் கண்காணிப்புப் பணிகளை ஒழுங்கு செய்வது எமக்குச் சிரமமாக அமைய வில்லை.

*கேள்வி:* தங்களது இப்பணியைச் சரிவர நிறைவேற்றப் பெருந்தொகை நிதி அவசியப்படுமல்லவா?

*பதில்:* 1999ஆம் ஆண்டுவரை எமது 'பவ்ரல்' அமைப்பிடம் நிதிவசதி இருக்கவில்லை. வடமேல் மாகாணசபைத் தேர்தலின் பின்னர் பலதரப்பட்ட உதவி வழங்கும் நிறுவனங்கள் எமக்கு நிதி உதவிய ளிக்க ஆரம்பித்தன. இந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்கான கணக்கு விவரங்கள் எம்மால் தெளிவான வகையில் பேணப்பட்டு வருகின்றன. தேவையான சமயத்தில் எந்தவொரு நபரும் அவ்விவரங்களைப் பரிசோதித்துப் பார்க்க முடியும். அதன் பொருட்டு கணக்கீட்டுக் கிளையொன்றும் தனியாகப் பேணப்பட்டு வருகின்றது. எமக்கு உதவி வழங்கும் அமைப்பொன்றைச் சேர்ந்த நபரொருவரே இவ்நிதிப்பிரிவின் நிர்வாக ஆலோசகராகக் கடமையாற்றி வருகின்றார்.

இவ்விடயத்தில் நிதிவசதி பிரச்சினைக்குரியதொன்றாக அமையவில்லை. கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் இருபதாயிரம் பேரும் தாமாக முன்வந்து கடமையாற்றும் வகையிலேயே செயற்படுகின்றனர். ஆனால், எமது இப்பணியில் வேறு பல நடவடிக்கைகளுக்கு நிதி தேவைப்படுகிறது. வாகன வசதி, உணவு வசதி, பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் பிரசார நடவடிக்கைகள் போன்ற பல நடவடிக்கைகளை நிறைவேற்ற நிதி வசதி அவசியமாகவுள்ளது. இவ்வித சகல நடவடிக்கைகளுக்குமாக எமக்கு ஒரு கோடி ரூபா வரையிலான நிதி செலவாகுமென நம்புகிறேன்.

வெளிநாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களை இப்பணியில் இணைப்பதற்கு ஒவ்வொருவருக்கும் ஒன்றரை லட்சம் ரூபா நிதி செலவிட நேரும். இதனையே பாரதூரமான செலவெனக் கருதுகின்றேன்.

*கேள்வி:* உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் எத்தனைபேரை இத்தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக பயன்படுத்தவுள்ளீர்கள்?

*பதில்:* உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை இப்பணிக்கான பயிற்சிகளில் ஈடுபடுத்தி வருகின்றோம். இவர்களில் ஆகக் குறைந்தது 15,000 பேர்களையாவது தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த முடியுமென எண்ணுகிறேன். வெளிநாடுகளைச் சேர்ந்த சுமார் 15 தேர்தல் கண்காணிப்பாளர்கள் தற்போது நமது நாட்டில் தங்கியுள்ளனர். அவர்களில் சகல தேர்தல் நடவடிக்கைகளையும கண்காணிப்பர். அவர்கள் மட்டுமன்றி, மேலும் 85 வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்களை வரவழைக்க முயற்சித்து வருகின்றோம். இவர்களில் ஐம்பது பேர்வரையிலானவர்களை நேரடியாக வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கவும், ஏனையோரைத் தற்போது இந்நாட்டில் தங்கியிருந்து பல தரப்பட்ட தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களில் இக்கண்காணிப்புப் பணியில் ஈடுபட ஆர்வம் காட்டுபவர்களிலிருந்து தெரிவுசெய்து கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தவுள்ளோம்.

*கேள்வி:* இவ்வித தங்களது நடவடிக்கைகள் மூலம் முன்னர் இந்நாட்டில் இடம்பெற்ற பொதுத்தேர்தல்களைவிட இம்முறை நியாயமானதும், சுதந்திரமானதுமாக அமையக்கூடிய வகையில் பொதுத்தேர்தலை நடத்த முடியுமென நம்புகிறீர்களா?

*பதில்:* எமது இத்தகைய நடவடிக்கைகளால் மட்டும் பொதுத்தேர்தல் சுதந்திரமானதும் நியாயமானதுமான வகையில் நடத்தப்படுமெனக் கூற இயலாது. இந்நாட்டிலுள்ள சமூகங்கள் தற்போதுகூட அத்தகைய தகுதி கொண்டிருப்பதாக என்னால் கருதமுடியவில்லை.

இந்த வேளையில் நாட்டில் பொதுமக்கள் தேர்தல் ஆணையாளரின் செயற்பாடுகளை வெற்றிகரமாக்கும் வகையில் நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்க முன் வரவேண்டியது அவசியமாகும். தேர்தல் ஆணையாளர் தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றப் பொது மக்கள் இடையூறு ஏற்படுத்தாது ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான சகல ஆட்சேபனைகளையும் தேர்தல் ஆணையாளருக்குத் தெரிவித்து அவர் மூலம் தேவையானவற்றை நிறை வேற்றிக் கொள்ள முயலவேண்டும். அந்தவகையில் செயற்படுவதன் மூலம் தேர்தலில் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் ஊழல்கள் என்பவற்றைத் தவிர்ப்பதற்குப் பொதுமக்கள் ஆர்வம்காட்ட வேண்டியது அவசியமாகும். ★

# மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள நிகழ்வு போராளிகளைப் புடம்போட வைத்துள்ளது

## மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

"மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள நிகழ்வானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருக்கும் போராளிகளை மீண்டும் ஒருதடவை புடம்போட வைத்துள்ளது."

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி மேற்கண்டவாறு கூறினார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற உடுவில கோட்டப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடனான "இன்றைய அரசியல் நிலையும் தமிழ்மக்களும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தமிழினி மேலும் கூறியதாவது:-

விடுதலைப் போராட்டத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பல எதிரிகள் இருக்கின்றார்கள். விடுதலைப் புலிகளின் கட்டுக்கோப்பையும் ஸ்திர நிலையையும் பலவீனப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மேற்படி சம்பவம் இடம்பெற்றிருந்தாலும் அது எமது அமைப்புக்கு எந்தவிதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தமாட்டாது.

விடுதலைப் போராட்டம் இரத்தம் சிந்தி வளர்க்கப்பட்டது. எவரும் தமது சுயநலத்துக்காக எதையும் அறுவடை செய்துகொண்டோ, பயன்படுத்திவிட்டோ சென்றுவிடமுடியாது. விடுதலைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்களின் ஆன்மா கலந்திருக்கிறது; மாவீரருடைய இரத்தம் கலந்திருக்கின்றது. எனவே, எமது விடுதலைப் போராட்டத்தில் இதுபோன்ற நடவடிக்கைகள் ஒரு பின்னடைவையும் ஏற்படுத்தமாட்டாது. பதிலுக்கு, விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்டத்தில் இது ஒரு பாரிய வளர்ச்சியாகவே மாறும். இந்தக் காலகட்டத்தில்தான் நாம் எம்மை சரியான முறையில் தயார்செய்து கொள்ள வேண்டும்.

### தேர்தலும்-தமிழ்மக்களும்

எதிர்வரும் தேர்தலை ஒரு சாதாரண அரசியல் நடவடிக்கையாகப் பார்க்காமல் - சலுகைகளுக்கான நடவடிக்கையாக பார்க்காமல் - கொளகைக்கான தேர்தலாகக் கருதி, எமது விடுதலைக்கான நல்லதொரு தீர்ப்பை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

தமிழ்மக்கள் மீது போட்டி போட்டுக் கொண்டு சண்டை நடத்திய தென் இலங்கை அரசியல் கட்சிகள் இன்று போட்டி போட்டுக்கொண்டு சமாதானம பேச முன்வருகின்றார்கள். சர்வதேச சமூகம் இவர்களின் சமாதான முயற்சியில் கூடிய கவனம் செலுத்தி அவதானித்துக் கொண்டிருக்கின்றது. இவற்றுக்கெல்லாம் எவை அடிப்படையாக அமைகின்றன.

விடுதலைப் புலிகள் இதுவரை காலமும் தேர்தல்களை எதிர்த்து வந்திருக்கிறார்கள்; குழப்பி வந்திருக்கிறார்கள். லெப்ரினன்ட் சங்கர்கூட தேர்தல் குழப்பத்தில் காயப்பட்டு அதனைக் குணப்படுத்த தமிழகம் கொண்டு செல்லப்பட்டார். இலங்கையில் நடைபெறும் தேர்தல்கள் தமிழ் மக்களின் வாழ்க்கையில் எந்தவிதமான மாற்றங்களையும் கொண்டு வரமாட்டாது என்றே நாம் தேர்தலை எதிர்த்தோம்.

### சமாதான சூழலும் தேர்தலும்

இன்று ஒரு சமாதான சூழ்நிலை நிலவுகின்றது. இச்சூழ்நிலையைப் பயன படுத்தி தமது அரசியல் லாபத்துக்காக மக்களைப் பயன்படுத்த எவரையும் அனுமதிக்கக்கூடாது என்ற காரணத்தால் தேர்தலை குழப்ப நாம் விரும்பவில்லை.

சமாதானச் சூழ்நிலையில் நாம் எதிர்கொண்ட முக்கியமான விடயங்களில இம்முறை தேர்தலும் ஒன்று. இந்தத் தேர்தல வழமையாக வந்துபோகும அரசியல் நடவடிக்கையாகப் பார்க்காது எமது போராட்டத்தினுடைய அரசியல் நிலைப்பாட்டை எப்படி மாற்றி அமைக்கலாம் - போராட்ட வளர்ச்சிக்கு எப்படி பயன்படுத்தலாம் - என்பதை அவதானிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. வழமையான காலத்தை விட இந்தமுறை இந்தச் சமாதானச் சூழல் ஒரு வித்தியாசமான சூழலாக இருக்கின்றது.

### சர்வதேச சமூகத்தின் பார்வை

வழக்கத்துக்கு மாறாக, இலங்கையில் சமாதானம் நிலைபெற வேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் அதிக அக்கறைகாட்டி வருகின்றது. ஏனெனில், இலங்கையை ஒரு சமாதான பூங்காவாக மாற்றவேண்டிய ஒரு தேவை அதற்கு இருக்கின்றது. இந்தப் பூங்காவிற்கு பின்னால்தான் அவற்றின் நன்மைகள், அரசியல் பொருளாதார நிலைகள் காணப்படுகின்றன.

தென்னாசியப் பிராந்தியத்திலே தமது பொருள்களுக்கான ஒரு சந்தையை ஏற்படுத்தவும் வாணிபம் செய்யவும் அவர்களுக்கு ஒரு தளம் தேவைப்படுகிறது. அந்தத்தளம் சரியான ஒரு பௌதிக முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கவேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை பல்வேறு சூழ்நிலைகள் பலமான ஒரு தளமாக கொள்ளக்கூடியதாக அமையவில்லை. கப்பல் போக்குவரத்தின் கேந்திர நிலையமாக இலங்கை விளங்குவது சர்வதேச சமூகத்தின் கண்களுக்கு ஏற்ற ஒரு தளமாகத் தெரிகின்றது. இலங்கையில் உள்ள இரண்டு இனங்களுக்கிடையிலும் நடைபெற்று வரும் யுத்தத்தை சமாதானப்படுத்தும் பணியில் இறங்குவதன் மூலம் இலங்கையை தங்கள் தளமாக வைததுக்கொண்டு தென்னாசியப் பிராந்தியத்திலே ஒரு வலுவான சக்தியாக மாற்றம்பெற உலகவல்லரசுகள் எண்ணுகின்றன.

இவர்களின் எண்ணங்களுக்கு வலுவூட்டுவனவாக இலங்கையில் எழுந்துள்ள இனப்பிரச்சினை அமைகின்றன.

### தமிழர் பிரச்சினையும் - போராட்டமும்

இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்களக் கட்சிகள் சாத்வீக முறையில் நடைபெற்று வந்த தமிழர்களின் உரிமைப் போராட்டங்களை ஆயுதமுனையில் அடக்கி ஒடுக்கினர். அதன் பயனாக 1977ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற கூடடத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தனி அரசு தான் தீர்க்கமான முடிவு என மக்கள் முடிவெடுத்தனர்.

மக்களின் இந்த முடிவை செயற்படுத்தும் நோக்கமாக ஆரம்பிக்கப் பட்டதே விடுதலைப்போராட்டம் - ஆயுதப் போராட்டம்.

சமாதானம் பேசி ரணில் விக்கிரமசிங்க வந்தார். அவருடன் சமாதான உடன்படிக்கை செய்து போரை நிறுத்தினோம். சமாதானம் ஏற்பட முன் எமது மக்களை இயல்பு வாழ்கைக்கு கொண்டுவர வேண்டும். மக்களின் அன்றாட பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று கேட்டோம். இவற்றுக்கு இலங்கையின் அரசமைப்புத் தடையாக உள்ளது. இந்தவித அரசமைப்பை வைத்துக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது எனக் கூறி இடைக்கால நிர்வாக வரைவொன்றைத் தயாரித்து வழங்கினோம்.

புலிகளை ஓரம் கட்டிவிட்டு அரசியலை கையாள முடியாது என்பதைச் சர்வதேச சமூகம் இப்போது புரிந்து கொண்டுள்ளது. தென் இலங்கை அரசியல் தலைமைகள் இடைக்கால நிர்வாக வரைபையிட்டு சரியான முடிவை எடுக்கமுடியாத நிலையில், தவிர்க்க முடியாத நிலையில் புலிகளுடன் பேச வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் தேர்தல் அறிவிப்பும் வந்தது.

### தேர்தலும் மக்களும்

இத்தேர்தலை வழமையான தேர்தலாகக் கருதாது தமிழ் மக்களின் ஒரு கருத்துக் கணிப்பாகக் கொள்ள வேண்டும். இது வரை காலமும் தமிழ் மக்கள் கொடுத்த அர்ப்பணிப்புகள், தியாகங்கள், இழப்புக்கள், தேவைகள என்பவற்றையும் நிறைவு செய்யக்கூடிய தான ஒரு தீர்ப்பாக இத்தேர்தலை பயன்படுத்தி எமது நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்துக்குச் சொல்ல வேண்டும்.

விடுதலைப் புலிகளை எப்படி ஓரங்கட்டிவிட்டு இலங்கை அரசியலை கையாள முடியாமல் போனதோ அதேபோல மக்கள் தரப்போகும் தேர்தல் தீர்ப்பையும் ஓரங்கட்டிவிட்டு சமாதானப் பேச்சில் ஒரு முடிவுக்குப் போக முடியாது என்பதைத் தேர்தல் மூலம் வெளிக்காட்டவேண்டும்.

சாதாரண சலுகைகளுக்கான தேர்தலாக இதனைக் கொள்ளக்கூடாது. ஒரு போராட்ட வடிவமாக இத்தேர்தலை பார்ப்போம். இத்தேர்தலை சாதாரண சலுகைகளுக்காக அல்லாமல் கொள்கைகளை முன்வைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இத் தேர்தலில் போட்டி இடுகின்றனர். எனவே, கொள்கைக்காகப் போராடும் அவ் அமைப்பை ஏற்று அதற்கு பக்கபலமாக தேர்தலில் நிற்க விடுதலைப் புலிகள் தீர்மானித்துள்ளார்கள் - என அவர் கூறினார்.

**தொகுப்பு: வி.பி.சர்மா**
**வலி.தெற்கு செய்தியாளர்**


**Dialog GSM**

**டயலொக்**
கையடக்க GSM
தொலைபேசி அட்டைகளை
மொத்தமாகவும,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**Sri Murugan**
Tele Communication
& Agency Post Office,
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P. :021 222 5392
FAX :222 3214.

எந்நேரமும்
உன்னுடன்...!

(C/33362)(38-12-19-21)



**The Vembadi Girls' High School**
**Old Girls' Association**
**ANNUAL GENERAL MEETING**

Date: **13 March 2004 Saturday**
Venue: **Mabel Thambiah Hall**

**Agenda**

3.00 p.m. Hoisting the School Flag
Lighting the oil Lamp
Welcome address by the President
Address by the Executive Patron
Address by the Chief Guest
Secretary's Report
Treasurer's Report
Vote of Thanks
Members introducing themselves
Election of the Office Bearers
Suggestions
Entertainment -Students, VGHS
School Hymn

**All are welcome**
Dear members, please consider this as the individual invitation

(C-33962) - EXECUTIVE COMMITTEE


## கண்ணீர் அஞ்சலி

**சின்னத்தம்பி கந்தசாமி**

*(துன்னாலை வடக்கு, கரவெட்டி)*

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்

**திரு.க.சிவனொளிபாதம்** அவர்களின் அன்புத் தந்தையார் **சின்னத்தம்பி கந்தசாமி** அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரமடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
நலன்புரிச்சங்க உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

*பிரதேச செயலகம்,*
*வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.*

(26-19-21-16) (29432)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1920 | 2003 |
| 04 | 02 |
| 20 | 20 |

**அமரர் சிவக்கொழுந்து அழகப்பெருமாள்**

திதி:சங்கடஹர சதுர்த்தி

புனித வாழ்வினில் புண்ணிய சீலராய்த் திகழ்ந்து!
உலகினில் மனிதரில் மாணிக்கமாய்
மாண்புடன் வாழ்ந்தீரே!

*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
-குடும்பத்தினர்.

(29440)(21-1916)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 1975 | 2003 |
| 09 | 03 |
| 16 | 10 |

மேஜர் கந்தன்

**தேவராசா வசீகரன்**

(புளியங்கூடல் - ஊர்காவற்றுறை)

*உன் உறவுகளை விட்டு தாயகத்தை*
*மீட்டிட தளராத உறதியுடன் போரிட்ட கந்தா!*
*ஆண்டு ஒன்று ஆகியும் – என்றும் மறவாத உன் நினைவோடு*
*நாம் இங்கே வாழ்கின்றோம்.*

இந்நாளில் வீரச்சாவடைந்த சகல மாவீரர்களையும் நினைவுகூருகின்றோம்.

*புளியங்கூடல்.* - சின்னக்கா, அத்தான், பிள்ளைகள்.

(29353)(40-19-16-21)

## ஈ.பி.டி.பியினர் விரட்டப்பட்டனர்

சுழிபுரம்,மார்ச்10

சுழிபுரம் மேற்குப் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ஈ.பி.டி.பி அமைப்பினர் அங்கிருந்து விரட்டப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வாகனம் ஒன்றில் வந்து துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்தவர்களே அப்பகுதிக்கு வந்த குழுவினரால் விரட்டப்பட்டனா. அவர்கள் கொண்டுவந்த தேர்தல் பிரசுரங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. (ஐ-86)

## வேட்பாளருக்கு வெளிநாட்டு நிதி உதவி

வடமராட்சி,மார்ச்10

பொதுத் தேர்தலில் போட்டியிடும் யாழ். மாவட்ட வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு தேர்தல் பிரசாரத்துக்கென வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளனர். (ஐ-173)

# கூட்டமைப்பின் 9 உறுப்பினர்களும் குடாநாட்டில் தெரிவாக வேண்டும்

## இது ஒரு வரலாற்றுக் கடமை என்கிறார் கஜேந்திரகுமார்

வடமராட்சி,மார்ச்10

யாழ். தேர்தல் மாவட்டத்தின் தேர்தல் முடிவுகளைச் சர்வதேசமும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதால், இம் மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஒன்பது பேரும் தெரிவுசெய்யப்படவேண்டும். இது ஒரு வரலாற்றுக் கடமையாகும் என்று யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறினார்.

பருத்தித்துறை முனையில் வின்சன் டி போல் தலைமையில் நடைபெற்ற தேர்தல் கலந்துரையாடலில் அவர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் எதிர்பார்க்கும் வெற்றியை ஈட்டும். அதேபோல யாழ். மாவட்டத்திலும் எதிர்பார்க்கும் வெற்றியை நாம் ஈட்டவேண்டும்.

தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட எமக்குக் கிடைத்த இச்சந்தர்ப்பத்தை முற்றுமுழுதாக நாமனைவரும் பயன்படுத்தி, அதில் வெற்றி காண்பதில் அனைவரும் முனைப்புடன் செயறபட வேண்டும்.

தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்துச் செல்ல இம்முறை காலஅவகாசம் போதாது. பிரசாரத்தை எதிர்பாராமல் அனைத்து மக்களும் இந்த வரலாற்றுக் கடமையைச் சரிவர நிறைவேற்றத் தயாராக இருக்கவேண்டும் - என்றார்.



மற்றொரு வேட்பாளரான சி.வி.கே.சிவஞானமும் உரையாற்றினார். (ம-173)

## பிரசாரம்

பருத்தித்துறை, நெல்லியடிப் பகுதிகளில் ஈ.பி.டி.பியினர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

சிறிய ரக ஹைஏஸ் வான் ஒன்றில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு அதில் வேட்பாளர்களும் கூடவே சென்று பிரசாரங்களைச் செய்து வருகின்றனர்.

பிரசாரங்களில் ஈடுபடும் ஈ.பி.டி.பியினருக்குப் பொலீஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். (ம-173)

## கூட்டமைப்பு வேட்பாளர்களின் கலந்துரையாடல்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் வடமராட்சிப் பகுதியில் தத் தம் ஆதரவாளர்கள் மத்தியில் கலந்துரையாடல்களை நடத்திவருகின்றனர்.

வேட்பாளர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் இக்கலந்துரையாடல்களை நடத்திவருகிறார்கள். (ஐ-173)

# யாழ். முஸ்லிம்களின் அபிலாஷைகளை தமிழ்க் கூட்டமைப்பு நிறைவு செய்யும்

## யாழ். நகர பள்ளிவாசல் தலைவர் நம்பிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்10

முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் பூர்த்திசெய்யப்படும் என தமிழ்க் கூட்டமைப்பு உறுதி அளித்துள்ளதால் யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் தமிழ்க் கூட்டமைப்புக்கு தமது ஆதரவினை வழங்குவார்கள்.

- இவ்வாறு யாழ். நகர பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் எம்.எம். றாகிப் உதயனுக்குத் தெரிவித்தார்.

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒரே மொழி பேசும் சகோதரர்கள் போன்று வாழ்ந்து வருபவர்கள். சில இடர்கள் காரணமாக யாழ்ப்பாண மண்ணில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேறி இருந்தாலும் போர் நிறுத்தம் ஊடான சமாதான சூழலில் நாங்கள் மகிழ்வுடன் மீண்டும் யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர்ந்து உள்ளோம்.

எங்கள் உரிமைகள், அபிலாஷைகளை தமிழ்க்கூட்டமைப்பு நிறைவு செய்யும் என்ற நம்பிக்கையில் தமிழ்க் கூட்டமைப்புடன் கைகோர்த்துச் செயற்படவுள்ளோம்.

எமது செயற்பாடுகள் அனைத்தும் தமிழ்த் தேசியத் தலைமையை வலுப்படுத்துவதாக அமையும் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ-ரி)

# கூட்டமைப்பின் அலுவலக உதவியாளர் ஊர்காவற்றுறையில் மிரட்டப்பட்டார்

யாழ்ப்பாணம்,மார்ச்10

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊர்காவற்றுறைப் பிரதேச பரப்புரைச் செயலகத்தின் உதவியாளரான கஜன் என்பவர் ஈ.பி.டி.பி. அமைப்பினரால் மிரட்டப்பட்டார் என்று முறையிடப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் மாலை வீதியில் வைத்து கஜன் என்பவரை வழிமறித்த ஊர்காவற்றுறைப் பிரதேச ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் எனக் கூறப்படும் பஸ்ரின் என்பவர், அவரை தகாத வார்த்தைகளால் ஏசியதுடன் வலுக்கட்டாயமாக அவரைப் புகைப்படம் எடுத்தார் என்று முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரசியல்துறை தலைமையகத்திலும் ஊர்காவற்றுறை பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி)

# பாதுகாப்பு உறுதி செய்யப்படாத பகுதிகளில் வாக்களிப்பு இல்லை

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட பாதுகாப்பு உறுதிசெய்யப்படாத நாட்டின் எந்தவொரு வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்களிப்பு இடம்பெறுவதைக் கைவிடுவது எனத் தீர்மானித்துள்ளதாகத் தேர்தல் திணைக்களம தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் உள்ள வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பாக, விசேட பாதுகாப்பு ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துவதற்கும அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

ஏதாவதொரு வாக்களிப்பு நிலையத்தின் பாதுகாப்புத் தொடர்பாக பாரதூரமான நிலைமை உருவானால் அந்த வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க உரிமை பெற்றுள்ள வாக்காளர்களுக்கு வேறு வசதியான வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க வாய்ப்பளிக்கப்படுமெனவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை தேர்தல் இடம்பெறவுள்ள, ஏப்ரல் 2ஆம் திகதியன்று அல்லது அதை அண்மித்த தினங்களில் ஏதாவதொரு வாக்களிப்பு நிலையத்தில் பாதுகாப்பு சீர்குலைந்துள்ளதாகத் தெரியவரின் அந்த நிலையத்தின் வாக்களிப்பை இடை நிறுத்துவதற்கும் தகுந்த மாற்றுவழிகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென உதவித் தேர்தல் ஆணையாளர் கே.சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் -

வாக்களிப்பு நிலையங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக, பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவின் பணிப்புரைகளுக்கமைய, அச்செயற்பாடுகள் தொடர்பான பிரதிப பொலீஸ்மா அதிபர்கள் நிலைமைகளை ஆராய்ந்து வருவதாகவும் -

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்புத் தொடர்பாக விசேட பாதுகாப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும் -

பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ)




# சுயநிர்ணய உரிமையை ஒருமித்து வெளிப்படுத்த உகந்த ஒரே தேர்தல் இது!

## கூட்டமைப்பு வேட்பாளர் சூ. சிறில் கூறுகிறார்

அரியாலை,மார்ச்10

தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயப்பாட்டை - சுயநிர்ணய உரிமையை ஒருமித்த குரலில் வெளிப்படுத்த இந்தத் தேர்தல்தான் அருமையான சந்தர்ப்பம். இது வெறும் அரசியல் அல்ல. ஒட்டுமொத்த தமிழர்களின் வாழ்வோடு சம்பந்தப்பட்ட தேர்தல்.


- இப்படிக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான சொலமன் சூ.சிறில்

யாழ். கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.வரதராசா தலைமையில் நடைபெற்ற அரசியல் களம் என்னும் ஆய்வரங்கில் வேட்பாளர் சிறில் கலந்துகொண்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்-

ஸ்ரீலங்கா நாடாளுமன்றமானது எமது தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை மீட்டுத்தரும் என்று நாம் எண்ணவில்லை, அதற்கான உத்தரவாதத்தையும் நாம் தரப்போவதில்லை.

ஆனால், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்துக்குச் செல்வதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கான மக்கள் ஆதரவை வெளிப்படுத்த முடியும். அத்துடன் ஐ.நா. பிரகடனங்களில் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடு உண்டு. இந்த சுயநிர்ணய அடிப்படையில்தான் எனது தேர்தல பிரகடனமும் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. இதை மக்கள் மனப்பூர்வமாக ஏற்று வாக்களிக்கும்போதுதான் உலக நாடுகளும் எமது போராட்டத்தின் நியாயப்பாட்டை அங்கீகரிக்கும் எனவே சாதனை படைப்போம் அது சரித்திரமாகட்டும் - என்றார். (ஐ-17)



# தமிழ்க் கூட்டமைப்பை வலுப்படுத்தி ஒற்றுமையை ஓங்கச் செய்வோம்!

## காரைநகர் பிரசாரக் கூட்டத்தில் செம்மணன்

நாங்கள் எல்லோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும். அதனூடாக ஒட்டுமொத்த தமிழினத்தின் வெற்றியை, ஒருமைப்பாட்டை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

- இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் காரைநகர் சிவகாமி அம்மன் ஆலய முன்றிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1948ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை எங்களுடைய மக்களின் உரிமைகளை நாடாளுமன்றம் ஊடாகப் பெற்றதில்லை. மாறாக எங்களுடைய இராணுவ ரீதியான பலத்தின் மூலம் பெற்ற அங்கீகாரமே இன்று உலகில் ஒவ்வொரு தமிழனையும் தலைநிமிர்ந்து நிற்க வைத்துள்ளது. இன்றைய காலகட்டம் நாங்கள் விரும்பாமலேயே தேர்தலைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்கிவிட்டது. சர்வதேச ரீதியான ஓர் அங்கீகாரத்தைப் பெறுகின்ற ஒரு தேர்தல் களமாக இன்றைய தேர்தல் களம் அமைய இருக்கின்றது. அந்த வகையில் தமிழருடைய ஒற்றுமையையும், தமிழருடைய ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டுகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பை நாங்கள் ஆதரிக்கின்றோம். அதற்கு ஆதரவு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் நாங்கள் எல்லோரும் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுதத வேண்டும் - என்றார் செம்மணன்.

கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர்களான மாவை சேனாதிராசா, ந. சிறிகாந்தா, எஸ்.கஜேந்திரன் உட்பட பலர் அங்கு உரையாற்றினர்.(ஐ-73)

# தேர்தலைக் கண்காணிக்க 20ஆயிரம் பேர் கடமையில்

## 'பவ்ரல்' அமைப்பு நடவடிக்கை

கொழும்பு,மார்ச்10

ஏப்ரல் 2ஆம் திகதியன்று இடம்பெறவுள்ள தேர்தலின்போது, தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 'பவ்ரல்' அமைப்பு (சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தல் தொடர்பான மக்கள் செயற்பாட்டு அமைப்பு) தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் சுமார் 100 சர்வதேச கண்காணிப்பாளர்களையும் சுமார் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்களையும் ஈடுபடுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தக் கண்காணிப்பாளர்களுக்குப் பட்டறைகள் மூலம் கண்காணிப்புப் பயிற்சிகளை அளிக்க 'பவ்ரல்' அமைப்பு ஆயத்தங்களை மேற்கொணடுள்ளது. இதுவரை அவ்வமைப்பு 40 பயிற்சிப் பட்டறைகளை நடத்தி முடித்துள்ளது. இத்தகைய 450 பட்டறைகளை நடத்தவும் அது திட்டமிட்டுள்ளது.

வன்முறையற்ற சமாதானப்படை (Non violent Peace Force)யைச் சேர்ந்த 14 கண்காணிப்பாளர்களும் தேர்தல் வன்செயல்கள் தொடர்பான கண்காணிப்பு நிலையத்தின் (CMEV) 40 கண்காணிப்பாளர்களும், ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த 50 கண்காணிப்பாளர்களும், பொதுநலவாய நாடுகளின் செயலகத்தைச் சேர்ந்த 15 கண்காணிப்பாளர்களும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற கொள்ளுமுகமாக இங்கு வரவுள்ளனர்.

'பவ்ரல்' அமைப்பின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சர்வதேச கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் தேர்தல் ஆணைக்குழுவைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்களும் தேர்தல் ஆணையாளரின் அழைப்பின்பேரில் இங்கு வரவுள்ளனர். (ம)

### வடக்கு - கிழக்குப் பகுதிகளில்

# இடம்பெயர்ந்த 34 ஆயிரம் பேரே தேர்தலில் வாக்களிக்க விண்ணப்பம்

கொழும்பு,மார்ச்10

வடக்கு - கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ள 2 லட்சத்து 60 ஆயிரம் பேரில் 34ஆயிரம் பேர் மட்டுமே எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்கப் பதிவு செய்துள்ளனர்.

வாக்களிப்பது தொடர்பாக தம்மைப்பதிவு செய்துகொள்வதற்கு அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் மார்ச் முதலாம் திகதியுடன் முடிவடைந்தது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் புள்ளி விவரங்களுக்கமைய இடம்பெயர்ந்துள்ள மக்களில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளோரின் எண்ணிக்கை 2 லட்சத்து 60 ஆயிரமாகும். தேர்தல் ஆணையாளரின் புள்ளி விவரங்களின்படி அந்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 28 ஆயிரமாகும்.

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர். புத்தளம், அனுராதபுரம், கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் தமது வாக்குகளை அளிக்க அவர்கள் தகுதி பெற்றுள்ளார்களெனவும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் மணற்காட்டைப் புகுந்த இடமாகவும் கொண்ட*

**திரு.மத்தியாஸ் சூசைதாஸ்**

அவர்கள் 08.03.2004 அன்று நீதிபதி திருமதி எஸ்.நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.
இவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*தும்பளை,*
*பருத்தித்துறை.* (29482) (24-12-19)

**ம.மரியரட்ணம் குடும்பத்தினர்.**

---

**இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை**

*ஸ்ரீ வீரகாளி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்*



**மணிசாமி** அவர்கள்

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!
**N.A.லொட்ஜ், (ராஜா தியேட்டர் அருகில்)**
றூம் நம்பர் 10, புதிய ஆனந்தா நகைமாடம் மேல்மாடி,
நியூலலிதா ஜுவல்லறி, இல.185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை.)

(29425)(24-12-19)

---

# பொன்விழாப் பரிசில் வழங்கல்



யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் உயர்திரு. க.தேவராஜா அவர்களின் 53 ஆவது அகவையையொட்டி நடைபெறும் பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வு

தலைவர்: **அ.பஞ்சலிங்கம்** (முன்னாள் அதிபர் யா.இ.க.)
இடம்: **இணுவில் பொது நூலகக் கருத்தரங்கு மண்டபம்**
காலம்: இன்று (10.03.2004) புதன் மாலை 3.30 மணி
வாழ்த்துரை: **திரு.இ.சிவபாதசேகரம்**
(அதிபர், யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்)

பரிசில் வழங்கல்: விழா நாயகர்

* பல்கலைக்கழக மாணவர்களுக்கு
* இணுவில் பொதுநூலக பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் 45 மாணவர்களுக்கு (இசுறு உதான) பாலர் கணக்கு ஆரம்பித்துப் புத்தகம் வழங்கல்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

இணுவில்.
(29474)(40-19-12-24)

**தேவா**
**பொன்விழாக் குழு.**

---


# பிள்ளையார் இன் காடின் றெஸ்றோறன்ட்
# பிள்ளையார் கொட்டேல் றெஸ்றோறன்ட்
# PILALIAR INN GARDEN RESTAURANT / HOTEL RESTAURANT

பிள்ளையார் இன் காடின் றெஸ்றோறன்ட் / பிள்ளையார் கொட்டேல் றெஸ்றோறன்ட் உங்களை அன்புடன் வரவேற்கிறது. உங்களது காலைச் சாப்பாடுகள், விருந்துகள், நீங்கள் விரும்பிய காலை, மதிய, இரவுச் சாப்பாடுகள், சிற்றுண்டிகள், வெளியே எடுத்துச்செல்லப் பார்சல்கள், குரக்கன் பிட்டு, கடலுணவுகளாகிய இறால், கணவாய், நண்டு முதலியனவும் சமையல் வல்லுநரால் செய்து வழங்கப்படும். காலை 7 மணிமுதல் திறந்திருக்கும்.

குளிர்ந்த பியர், கொக்ரெயில்ஸ் முதலியவை. அனுபவம் வாய்ந்த கொழும்பு ஒபரோய் ஹோட்டல், பாதுகாப்பு அமைச்சு ஓமானில் வேலைசெய்த வல்லுநரால் செய்துகொடுக்கப்படும்.

எங்களிடம் குளிரூட்டப்பட்ட இணைந்த குளியலறைகளுடன் கூடிய அறைகள், குடும்ப அறைகள் (Family Suites) விசாலமான வாகனத் தரிப்பிடமும், குளிரூட்டப்பட்ட வாகனங்களும், Expo Ariation, Lion Air முதலானவற்றின் பிரயாணச் சீட்டுக்களுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்:

**பிள்ளையார் இன்**
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(29478)(24-12-19)

Tel.: 021 - 222 5595
Tel.: 021 - 222 2829
Fax: 021 - 222 5595
Email: piyarinn @ sltnet.lk
Web site: www.Pillaiyar inn. com.


---

# கண்ணீர் அஞ்சலி

திருமதி **நடராசா நாகரெத்தினம்மா**

எமது பிரிவின் சிறந்த தொண்டராக யாழ். மாவட்டக் கிளையினால் தெரிவு செய்யப்பட்டவரும் நிர்வாக சபை உறுப்பினரும் யா/வட்டு மத்திய கல்லூரி அதிபருமாகிய **திரு.ந.சபாரத்தினசிங்கி** அவர்களின் அன்புத் தாயார் 07.03.2004 இல் இறைபதம் எய்தியமையையிட்டு மனம் வருந்துவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*மாவடி,*
*வட்டுக்கோட்டை.* (29480) (19-12-24)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்.
வலி.மேற்குப் பிரிவு.

---

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வலி.மேற்கு,மார்ச்10

காலையடி, பண்டத்தரிப்பு மக்களிடையே கலாசார சீரழிவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கருத்தரங்கொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5மணியளவில் காலையடி தெற்கு ஞானவைரவர் ஆலய முன்றிலில் சமூகசேவையாளர் பொ.சூரசங்காரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலையடிக் கிராமத்தில் நிலவும் கலாசார சீரழிவு, சட்டவிரோத மதுபானங்களின் விற்பனை, போதைப் பொருள்களின் பாவனை ஆகியவற்றை ஒழிப்பது தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ், கிராம அலுவலர்கள் திருமதி தி.சிவபாக்கியநாதன், சீ.ஜீவராசா ஆகியோர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர். (ம-175)

## மெய்வன்மைப் போட்டிகள்

வலி.கிழக்கு,மார்ச்10

கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சீ.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்துகொள்வார். (ம-180-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்10

கொடிகாமம் அரசினர் வித்தியாலத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சோ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ம-6)

## முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்10

நல்லூர் முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் அவசர கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் முன்பள்ளி ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லோ.யோகராஜா கேட்டுள்ளார். (ம-ரி)

## விளையாட்டு வினையானது

தென்மராட்சி,மார்ச்10

பந்தயம் கட்டி நண்பகல் வேளையில் உயரமான புளிய மரத்தில் ஏறியவர் தவறிவீழ்ந்து இடுப்புப் பகுதியில் காயமடைந்தார்.

சாவகச்சேரி பெருங்குளம் சந்திப் பகுதியில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் இப்பகுதியைச் சேர்ந்த ஐயாத்துரை சிறிதரன் (வயது 35) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக அவர் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-117)

## திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள்

வலி.தெற்கு,மார்ச்10

உடுவில் கல்விக்கோட்ட மட்டப் பாடசாலைகளில் 4ஆம், 5ஆம் தர மாணவர்களிடையே திருக்குறள் மனனப் போட்டிகள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் விவரம் வருமாறு:-

☆ அபூர்வசிங்கம் தர்சிகரூபன் - இணுவில் மத்திய கல்லூரி.
☆ கனகரத்தினம் கயவாணி - ஏழாலை புனித இசிதோர் வித்தியாலயம்.
☆ அமிர்தலிங்கம் பிரசன் - ஏழாலை சைவ மகாஜனா வித்தியாசாலை.
☆ கனகரத்தினம் அபிராமி - ஏழாலை புனித இசிதோர் வித்தியாலயம்.
☆ யோகேஸ்வரன் நிதூஷியா - ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை. (ம-152)

---

# வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம்

**யாழ். சென்றல்** **சென்.ஜோண்ஸ்**

## 100ஆவது ஆண்டு போட்டிகள்

**மார்ச் 18, 19, 20ஆம் திகதிகள் (3நாள்கள்)**

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள மேற்படி போட்டிகளின்போது
1. சிற்றுண்டிக் கடைகள்
2. விளம்பரப் பதாகைகள்

அமைக்க விரும்புபவர்கள் அதற்கான விண்ணப்பத்தை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டுத்துறை முதல்வரிடம் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்து அதற்கான அனுமதிச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர், சென். ஜோண்ஸ் கல்லூரி.
அதிபர், யாழ். மத்திய கல்லூரி.
யாழ்ப்பாணம்.

(சி-33976) (26-19-12-24)

---

# ஓவ்செற் இயந்திர இயக்குநர் பயிற்சியாளர்

ஓவ்செற் இயந்திர இயக்குநர் பயிற்சியாளர்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

18 முதல் 30 வயது எல்லைக்குட்பட்டவர்களாகவும் கல்விப் பொதுத் தராதரச் சாதாரணதரப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களாகவும் இருக்கவேண்டும்.

இயந்திர வேலைகளில் ஆர்வமும் ஈடுபாடும் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கல்விச் சான்றிதழ்களுடனும் உறவினர் அல்லாத இருவரிடம் இருந்து அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ்களுடனும் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப இறுதிநாள்: 14.03.2004**
**உதயன் மனிதவள சேவை,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

# வெறுவெளி

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரங்கக் குழுவின்**

## நூல் வெளியீட்டு விழா

ஜெயரஞ்சினி ஞானதாஸின்
**"ஈழத்துத் தமிழ் அரங்கில் பெண்"**



இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்.
காலம்: இன்று (10.03.2004) புதன் பி.ப 3.00மணி

தலைமை:
**செல்வி க.துகாரதி**
(வெறுவெளி அரங்கக் குழு)

(29476) (19-12-24)

---

# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ்

(சென்.ஹென்றியரசர் பாடசாலை முன்னாள் ஆசிரியரும், யாழ். சென். ஜேம்ஸ் பாடசாலை முன்னாள் அதிபரும்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கடற்கரை வீதி, பாஷையூரை வசிப்பிடமாகவும் தற்பொழுது லண்டனில் வசித்துவந்தவருமாகிய ஸ்ரனிஸ்லாஸ் கடந்த (07.03.2004) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பர்நாந்துப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அக்னேஸ் ஆகியோரின் அன்பு மகனும் பிரான்சிஸ் அம்மாவின் அன்புக் கணவரும் அன்ரோ (லண்டன்), றாஜி (லண்டன்), வக்ஸ்சலா (லண்டன்), ரூபன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் யோண்பிள்ளை, புஷ்பம், அருட்தந்தை அருளானந்தம் (நோர்வே), ஜேம்ஸ் (நோர்வே), றோஸ்மலர் (நோர்வே), லில்லி (நோர்வே), யசிந்தா (லண்டன்), பிளசம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (10.03.2004) புதன்கிழமை லண்டனில் நடைபெறும்.

அவரின் ஆன்ம சாந்திக்காக இரங்கல் திருப்பலி (12.03.2004) வெள்ளிக்கிழமை காலை 6.30 (பு.நே.) மணிக்கு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42, Manorway,
Mitcham, CR 41EE,
London.

*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
ஆ.இம்மனுவேல்
(மைத்துனர்).

(29479) (24-12-19)

# சண்முகலிங்கத்தின் 'நாடக வழக்கு' நூல் மாணவருக்கு மட்டுமல்ல பார்ப்போருக்கும் உதவும்

## வெளியீட்டு விழாவில் துரை எங்கரசு

கோண்டாவில்,மார்ச்10

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'நாடக வழக்கு' நூலானது நாடகங்களைப் பயில்கின்ற, நடிக்கின்ற, எழுதுகினறவர்களுக்கு மட்டுமல்லாது நாடகத்தைப் பார்ப்பவர்களுக்கும் உதவும்.

- இவ்வாறு தெரிவித்தார் இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரை எங்கரசு அவர்கள்.

கடந்த ஞாயிறன்று இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற 'நாடக வழக்கு' நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரையை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குழந்தை ம.சண்முகலிங்கம் இந்த நூலுக்கு மிகவும் பொருத்தப்பாடுடையவர். அவர் வெறுமனே எழுத்தாளனாகவோ, நடடிகனாகவோ, நெறியாளனாகவோ அல்லாமல் எல்லாம் தெரிந்தவராக இருக்கின்ற பண்பு அவரை இந்த நூலை எழுதத் தூண்டியிருக்கும்.

அவரது எழுத்துருக்கள், மொழி நடைகள், நாடக அமைப்புகள் பெரும் சிறப்பைக் கொடுத்திருக்கின்றன. அதனால், இந்த நூல் பெறுமதிமிக்க ஒரு நூலாகத் தோற்றம் பெற்றிருக்கிறது.

வாழ்த்துரையை வழங்கிய செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அங்கு கூறுகையில், நாடகத்துறையை யாழ். பல்கலைக்கழகத்தில் அரியாசனத்தில் சரியாசனம் இருத்திய பெருமை குழந்தை ம.சண்முகலிங்கத்தைச் சாரும்.

நாடகத்துறையைச் சார்ந்தவர்களைப் பல்கலைக்கழகத்திலே அறிஞர்கள், கல்விமான்கள் வரிசையிலே இருத்த வேண்டுமென்று தன் வாழ்விலே வெற்றிகண்டவரும் இவர்தான். அவர் ஒதுங்கினாலும் வரலாறு அதைச் சொல்லும் - என்றார். (ம-49)

# தேர்தல் அலுவலர்களுக்கு நாளை முதல் பயிற்சி வகுப்பு

அஞ்சல் வாக்களிப்பை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மற்றும் தேர்தல் கடமையில் பணியாற்றும் ஏனைய அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளைமுதல் நடைபெறவுள்ளன.

அஞ்சல் மூல வாக்களிப்புக்களில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கும் -

தேர்தல் பணிகளில் நேரடியாகத் தொடர்புடைய அலுவலர்களுக்கு எதிர்வரும் 12ஆம் திகதி காலை 10 மணிக்கும் -

அதேதினம் பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கும் -

எதிர்வரும் 16ஆம் திகதி காலை 10 மணிக்கு போட்டியிடும் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் ஆகியோருக்கும் -

18ஆம், 19ஆம் திகதிகளில் காலை 10மணிக்கு சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்குமான பயிற்சி வகுப்புக்கள் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இதேவேளை - கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் காலை 10 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்குமாக இரு பிரிவுகளாக பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

யாழ்.இந்துக்கல்லூரி, இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வேலணை சரஸ்வதி வித்தியாலயம், வட.இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகியவற்றில் இடம்பெறவுள்ளன. (ம-5)

## வலி.மேற்கு விளையாட்டுக் கழகத் தலைவர், செயலாளருக்கு!

வலி.மேற்கு,மார்ச்10

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை இம்மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணியளவில் பிரதேச செயலகத்துக்குத் தவறாது சமுகம் அளிக்குமாறு விளையாட்டு உத்தியோகத்தர் த.சந்திரமதி அறிவித்துள்ளார். (ம-175)

# தெற்கில் இருந்துவரும் ஐஸ் கட்டிகளால் உள்ளூரில் உற்பத்தி பாதிப்படைகிறது

கரவெட்டி,மார்ச்10

தென்பகுதியில் இருந்து தருவிக்கப்படும் ஐஸ் கட்டிகளினால் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் ஐஸ் கட்டிகள் விற்பனை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளதென யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களின் நன்மை கருதியே யாழ். குடாநாட்டில் ஐஸ் கட்டித் தொழிற்சாலைகளை பல சிரமங்களின் மத்தியில் ஆரம்பித்தோம். ஆனால், தற்போது மீன் ஏற்றுமதியாளர்கள் தென்னிலங்கை ஐஸ் கட்டிகளைத் தருவிப்பதால் எமது ஐஸ் கட்டி உற்பத்தி வீழ்ச்சியடைந்து வருகின்றது. இது நீடிக்குமானால் மிக விரைவில் எமது ஐஸ் கட்டித் தொழிற்சாலைகள் மூடவேண்டி ஏற்படலாம். மீண்டும் ஓர் இக்கட்டான நிலை ஏற்படின் எமது மீன்கள் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்படும் - என்றார் அவர். (ம-70)

அஞ்சல்மூல வாக்களிப்பு

# 426 பேரின் விண்ணப்பங்கள் யாழ்.குடாநாட்டில் நிராகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்10

யாழ். மாவட்டத்திலிருந்து அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தவர்களில் 426 பேரின் விண்ணப்பங்கள் யாழ்.தேர்தல் திணைக்களத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக யாழ்.மாவட்டத்திலிருந்து 4ஆயிரத்து 482 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவற்றில் இருந்தே 426 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தவறான தகவல்களை வழங்கியமை, போதிய தகவல்கள் வழங்காமை, உரிய அலுவலர்களால் உறுதிப்படுத்தப்படாமை மற்றும் இருதடவைகள் விண்ணப்பித்துள்ளமை போன்ற பல்வேறுபட்ட காரணங்களினாலே இவ்விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.நடராசா தெரிவித்தார்.

இதேவேளை -

கடந்த தேர்தலின்போது தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்தவர்ளைவிட நடைபெறவுள்ள தேர்தலுக்கு சுமார் இரு மடங்கானோர் விண்ணப்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் இருந்து 2,498பேர் தபால் மூலவாக்களிப்புக்கு விண்ணப்பித்திருந்தனர். ஆனால், எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு 4,482பேர் விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-5)

# சட்டவிரோத மின்பாவனை சிறுப்பிட்டி மேற்கில் அதிகரிப்பு!

கைதடி,மார்ச்10

சிறுப்பிட்டி மேற்குப் பகுதியில் அண்மைக்காலமாக சட்டவிரோத மின்பாவனை அதிகரித்திருப்பதாக அப்பகுதி மக்களால் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றது.

அங்குள்ள சிலர் நாளாந்தம் இரவு வேளைகளில் ஒவ்வொரு மின்கம்பத்திலும் குறைந்தது பத்துக்கும் மேற்பட்ட வயர்களைப் பொருத்தி சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்று வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. இதனால், சட்டரீதியாக மின்சாரம் பெறுவோருக்கு வலுக்குறைந்த மின்சாரமே கிடைக்கின்றது. திருட்டுத்தனமாக மின்சாரம் பெறுவோரில் பலர் அதனைப் பயன்படுத்தி மிகப்பாரிய வேலைகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

மேலும் இப்படியான பாதுகாப்பற்ற மின்பாவனையால் ஏற்படும் கவனக்குறைவினால் உயிரிழப்புக்களும் ஏற்பட வாய்ப்புண்டு எனவும் பொது மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சம்பந்தப்பட்டோர் இவ்விடயத்தில் கவனமெடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-75)

# குடாநாட்டு மக்கள் தமது மருத்துவ அறிவை வளர்த்துக் கொள்ள உதவும் கண்காட்சி

இருபத்தியோராம் நூற்றாண்டில் உலகம் எட்டமுடியாத எண்ணற்ற பல சாதனைகளையும் விஞ்சி நிற்கின்றது. 'சார்ஸ்', பறவைக்காய்ச்சல் (Bird Fulu) என இடையிடையே மின்னல் வேக அதிரடித் தாக்குதல்களுக்கு மத்தியில் புதிய பரிணாமத்துடன் விஞ்ஞானம் வளர்ச்சி அடைகிறது.

'கொலம்பியா' விண்கல விபத்து போன்ற எதிர்பாராத பாரிய விளைவுகளை சந்தித்தாலும் சுதாகரித்துக் கொண்டு செவ்வாயில் விண்கலங்களை வெற்றிகரமாகத் தரையிறக்கி, அங்கு மனித வாழ்க்கைக்குச் சாதகமான சூழ்நிலை நிலவுகின்றதா? என்பது பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும் சில வருடங்களில் செவ்வாய்க் கிரகத்தில் சென்று குடியேறுவதற்காக விஸா பெறுவதற்கு எம்மவர்கள் போட்டி போடப்போகின்றார்கள். இது ஒருபுறம் இருக்க மறுபுறத்தில் போதியளவு அறிவூட்டப்படாத நிலையில், தொற்றுநோய்த் தாக்கம், சமுதாய கலாசாரச் சீர்கேடுகள் என்பவற்றின் முனகல்கள் கேட்கின்றன.

இவை தொடர்பான விழிப்புணர்வையும், அறிவையும் யாழ்.குடாநாட்டு மக்கள் பெற்றுக்கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதுதான் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மருத்துவக் கண்காட்சி.

### மருத்துவக் கண்காட்சியின் பயன்

இலங்கைக் கல்வி முறையைப் பொறுத்தவரையில் மிகச் சொற்ப அளவான மாணவர்களே பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றார்கள். சமுதாயத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையான மக்களே தமது உடற்கட்டமைப்பைப் பற்றி சொற்ப அளவில் அறிந்துள்ளார்கள். ஏனையோருக்கு அறிய ஆவலாக இருந்தாலும் கூட சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. இரண்டு தசாப்தங்களாக யுத்தத்தின் கோரப் பசிக்கு இலக்காகி சமுதாயத்தின் அடிப்படைக்கட்டமைப்பே தகர்ந்து போயுள்ள யாழ். குடாநாட்டில் மருத்துவக் கண்காட்சி ஒன்றை நடத்துவதென்பது மிகவும் கஷ்டமான விடயம்.

போர்மேகங்கள் கலைந்து சமாதான ஒளிக்கீற்றுத் தோன்றியுள்ள இக்காலப் பகுதியில் யாழ்பல்கலைகழக மருத்துவபீடத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சித் திட்டத்தில் கண்காட்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கிராமப் புறத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தனது உடற்கட்டமைப்புப் பற்றியும் அவற்றின் ஒழுங்கமைப்புப் பற்றியும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இதனூடாக ஒவ்வொருவரும் இதுவரை தம்மைப்பற்றி அறிய முடியாத பல விடயங்களை அறியக்கூடியதாக இருக்கும்.

### பொருத்தமான முதலுதவி

எமது உடலில் உள்ள ஒவ்வோர் அமைப்பும் என்ன தொழிலைப் புரிகின்றது என்று கூட அறியாத பலரும் எமது சமுதாயத்தில் காணப்படுகின்றனர். திடீரென ஒருவருக்கு ஆபத்து ஏற்பட்டால் அல்லது குறிதத ஒரு பகுதி செயலிழந்துவிட்டால் உடனடியாக முதலுதவி வழங்கப்பட முடியாத நிலை காணப்படுகின்றது. காரணம் அவருக்கு அது தொடர்பான ஆரம்ப அறிவு கூடக் காணப்படமுடியாத நிலையாகும். இந்தக் கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் இவற்றைப் பற்றிய அறிவைப் பெற முடியும்.

மிக நுட்பமான முறையில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது உடலை போதிய ஆளணிவளம், பொருள்வளம், திறமை என்பன இன்றி எடுத்துக் கூறுவது என்பது இலகுவான காரியம் அல்ல. இவ்வாறான மருத்துவக் கண்காட்சிகளை ஒழுங்கமைப்பதன் மூலமே இத்தகைய அறிவினை மக்கள் பெற்றுக்கொள்ள வழி சமைக்கக் கூடியதாக இருக்கும்.

### தொற்றுநோய் பரவலிலிருந்து விடுதலை பெறுதல்

தினமும் பல உயிர்களை விடுதலைக்காக இழந்துகொண்டிருந்த எமது சமூகம் அது குறைந்துபோக மறுபுறத்தில் தொற்றுநோய்களுக்கு ஆளாகி அதிலும் கூடுதலாக உயிர்களை இழந்து கொண்டிருக்கிறது.

திடீரென மிகவேகமாகப் பரவுகின்ற தொற்றுநோய்கள் சொற்ப நாள்களில் மிகப்பெருமளவு உயிர்களைப் பலி எடுக்கிறது. அண்மைக் காலங்களில் உலக நாடுகளில் 'சார்ஸ்', பறவைக்காய்ச்சல் என்பன பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

எமது சமூகத்தில் கூட நெருப்புக் காய்ச்சல், கொலரா போன்ற கொடிய தொற்றுநோய்களினால் பெருமளவிலானோர் பாதிக்கப்படுகின்றனர்.

மக்கள், இத்தொற்று நோய்கள் எவ்வாறு பரவுகின்றன? எவ்வாறு இவற்றினைக் கட்டுப்படுத்தலாம் என்பது பற்றி போதிய விளக்கம் இன்றிக் காணப்படுகின்றனர். இதனால் தொற்றுநோய்கள் பரவுவதை கட்டுப்படுத்துவது சிரமமான காரியமாக உள்ளது. இவ்வாறான பிரச்சினைகளை இலகுவாகக் கையாள, மக்கள் அது தொடர்பான அறிவைப்பெற மருத்துவக் கண்காட்சிகள் நடத்தப்படவேண்டியது அவசியமாகும்.

### போதைப் பொருளுக்கு அடிமையாகாது இருத்தல்

போதைப்பொருளுக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை அண்மைக் காலங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது. சிகரெட்டை வாயில் வைத்து போத்தல் பிடிப்பவனே ஆண்மையை நிலை நாட்டுகின்றான் என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் ஆழமாக நம் இளைஞர்களில் வேரூன்றியுள்ளது. அவர்கள் போதைப் பொருள்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி பெரும்பாலும் அறிந்திருப்பதில்லை.

போதைப் பொருள்கள் பாவிப்பவர்கள் உடல்ரீதியாகப் பாதிக்கப்படுவது மட்டுமன்றி சமூகத்தில் ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் காரணகர்த்தாக்களாக விளங்குகின்றார்கள்.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் கூட போதைப் பொருள்களின் பாவனை அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால், வளமான எதிர்காலச் சந்ததி வளமிழந்துபோகும் நிலை காணப்படுகின்றது. இதுபற்றி போதிய விளக்கமளித்து அவர்களை ஆரம்பத்திலேயே திசைதிருப்பி வழிப்படுத்த சிறந்த களமாக இந்த மருத்துவக் கண்காட்சி விளங்குகின்றது.

### நோயற்ற வாழ்வு

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது முதுமொழி. நோய் நொடியின்றி வாழ்வதற்கு நாம் தினமும் நிறையுணவை உண்ணவேண்டும். நிறையுணவில் அடங்கியுள்ள பொருள்கள் பற்றியும். அவை எந்த எந்த அளவுகளில் உள்ளடக்க வேண்டும் என்பது பற்றியும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மருத்துவக் கண்காட்சி ஒரு சிறந்த வழியாக இருக்கும்.

### சமுதாயச் சீரழிவுகளை தடுத்தல்

மலர்கின்ற யௌவனப் பராயத்தில் அறியப்படவேண்டிய பல விடயங்களை அறிவதற்கு இளைஞர்களுககு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இவ்விடயங்களை தமது பிள்ளைகளுக்கு அறிவதற்கு பெரும்பாலான பெற்றோர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இவை தொடர்பாக வெளிவிடப்படுகின்ற கையேடுகளை எமது சமூகத்தில் பெறுவது கடினம். அவ்வாறு பெற்றாலும் அதை பொது நூல்நிலையங்களிலோ அல்லது பாடசாலை நூல்நிலையங்களிலோ பார்க்கமுடியாது.

இது பற்றி பூரண அறிவைப் பெறமுடியாமையால்தான் கற்பழிப்பு, கருக்கலைப்பு, பாலியல் வல்லுறவு போன்ற கீழ்த்தரமான செயல்கள் நடைபெறுகின்றன. இவற்றினைப் பற்றி விரிவாக எடுத்துக்கூறி, இதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளை மக்களுக்கு நன்கு விளக்குவதன் மூலம் இவ்வாறான தீயசெயல்களை நிறுத்த முடியும். சமூகச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்த பாலியல் கல்வி தொடர்பான ஓரளவு விளக்கங்களையாவது மருத்துவக் கண்காட்சியின் மூலம் சமூகத்துக்கு எடுத்துக் கூறமுடியும்.

ஒரு மனிதன் தனது வாழ்க்கையைத் திறம்படத் திருப்தியாக மேற்கொள்வதற்கு மருத்துவ ரீதியிலான அடிப்படை அறிவுகளையாவது பெற்றிருக்க வேண்டும். மருத்துவக் கண்காட்சிக்கூடாக தமது மருத்துவ அறிவு வளததைப் பெருக்கி, எதிர்காலத்தை ஒளிமயமாக்க விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மருத்துவக் கண்காட்சி. இக்கண்காட்சி இன்றுடன் நிறைவடைவதால் அதனை இன்னும் பார்க்காதவர்கள் இன்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்குச் செல்லுங்கள். ★

வே.சுதாகரன்
27ஆம் அணி, மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்

யாழ். பல்கலை. மருத்துவபீடத்தின்
வெள்ளிவிழாவையொட்டி
மாபெரும் மருத்துவக் கண்காட்சி

ஊடக அனுசரணை:- உதயன்



சிவமயம்

இந்தியப் பரம்பரை ஜோதிடர் P.T.R. அவர்கள் யாழ். புண்ணியபூமிக்கு மூன்றாவது முறையாக வருகை தந்துள்ளார்.

**திரு. P.T.R.**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா, காதலில் தோல்வியா, தீராத வியாதியா, உயர்கல்வியில் தடங்கலா, கடன் தொல்லையா?, தொழில்முன்னேற்றத் தடங்கலா?, புதிய தொழில் தொடங்கவேண்டுமா?, குழந்தைப்பாக்கியம் இல்லையா?, வெளிநாடு செல்லத் தடையா?
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.
இடம்: பாலாஜி இன் விடுதி
292, கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டி சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

(29488)(14-16-18)


## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை சங்கீத ஆசிரியர்
திரு.கா.பரமேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சிவபாக்கியம் கார்த்திகேசு

அவர்களின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருடன் நாமும் துயர்பகிர்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்: திரு.த.திருநாவுக்கரசு
ஆசிரியர்கள்: திரு.மா.சிவனேசன்
திருமதி ச.தட்சணாமூர்த்தி
திருமதி கோ.சந்திரகுமார்.

யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை. (29487)(21-16-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபரின் பெரிய தாயார்

### அருட்சகோதரி லெற்றீசியா

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் எம் அதிபர், அருட்சகோதரிகள், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆன்மஇளைப் பாற்றுக்காக நாம் இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்,

(29489)(39-16-18-14)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியரான திரு.செல்வநாயகம்
அவர்களின் அன்பு மனைவியான

### திருமதி மங்களேஸ்வரராணி

அவர்களின் மறைவினால் நாம் மிகுந்த மனவருத்தம் அடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்,
'கௌரி அழகுமாடம்',
316, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

(29491)(39-16-18-14)

## சுகாதாரத் தொண்டர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள்

யாழ்.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவில் தொண்டர்களாகப் பணிபுரிவோருக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவுகளில் கடமையாற்றும் தொண்டர்களுக்கு 2ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசி, மீன்ரின், தேங்காய் எண்ணெய் ஆகியவை வழங்கப்படவுள்ளன. இதற்கென ஐந்து லொறிகளில் உணவுப் பொருள்கள் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன.

இப்பொருள்கள் நேற்று முன்தினம தொடக்கம் யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் யாழ்ப்பாணம், மானிப்பாய், கோப்பாய், சாவகச்சேரி, தெல்லிப்பழை, தீவகம், பருத்தித்துறை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## யாழ். ஆயர் பங்குகளுக்கு விஜயம் செய்கிறார்

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தவக்காலத்தை முன்னிட்டு மக்கள் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகிறார்.

எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் தீவகப் பகுதி ஆலயங்களுக்கும் 20ஆம், 21ஆம் திகதிகளில் பருததித்துறை பங்கு ஆலயங்களுக்கும் 27ஆம் 28ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதிகளுக்கும் சென்று விசேட வழிபாடுகளை நடத்தி மக்கள் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளனர். (ம-8-30)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கும் விவசாயக் குழுக் கூட்டம் காலை 11.30 மணிக்கும பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேசசெயலர் சீ.ஏ.மோகன்றாஸ தலைமையில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். குறிப்பாக, திணைக்களங்களின் அதிகாரிகள் பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றி ஆராயப்படவுள்ளதால் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-175)

## மதுப்பாவனையை விலக்கிய குடும்பத் தலைவர்களுக்கு உதவி

தென்மராட்சி,மார்ச்9

யாழ்.மாவட்டத்தில் மதுப்பாவனையை விலக்கிய குடும்பத் தலைவர்களுக்கு சியுடெக் நிறுவனத்தினர் புனர்வாழ்வு உதவிகளை வழங்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மதுபாவனையை விலக்கியவர்களுக்கும் அவரது கும்பத்தினருக்கும் யாழ்மத்திய வீதியில் உள்ள நிறுவன மதுபோதை தவிர்பு பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவினர் மாதாந்தம் மது போதை தவிர்ப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கினை நடத்தி வருகின்றனர். இதில் மதுப்பாவனையை விலக்கிய குடும்பத் தலைவர்களை கலந்து கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (ம-117)

## வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம்

*சென்றல்* *சென்ஜோன்ஸ்*

**100ஆவது ஆண்டு போட்டிகள்**
**மார்ச் 18, 19, 20ஆம் திகதிகள் (3நாள்கள்)**

மேற்படி விழாவின் ஆரம்பநாள் அன்று நடைபெறும் கௌரவிப்பு நிகழ்வில் இரு பாடசாலைகளினதும் கடந்த காலங்களின்

- ★ விளையாட்டுத்துறை முதல்வர்கள்
- ★ துடுப்பாட்ட பொறுப்பாசிரியர்கள்
- ★ துடுப்பாட்ட அணித்தலைவர்கள்
- ★ துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்கள்

கௌரவிக்கப்படவுள்ளனர். மேற்படி பதவிகளில் கடமையாற்றியவர்கள் தங்கள் பெயர், விவரங்களை தங்கள் பாடசாலைகளின் விளையாட்டுத்துறை முதல்வர்களிடம் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் தெரிவித்து தங்கள் வருகையை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தனிப்பட்ட அழைப்புக்கள் வழங்க முடியாதுள்ளதால் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதிபர்கள்
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். யாழ்.பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(சி-33975) (26-14-16-18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வநாயகம் மங்களேஸ்வரராணி



(ஆசிரியை, பண்ணாகம் அ.மி.த.க. பாடசாலை, யாழ் மாவட்ட ச.நீ.)

வேலணையைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பு, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வநாயகம் மங்களேஸ்வரராணி அவர்கள் நேற்று (09.03.2004) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களாகிய ஆறுமுகம்-அன்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும் செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் மகேஸ்வரி (உபதபாலதிபர்-வேலணை), நடேசன் (இ.மி.ச., சுன்னாகம்), செல்வரத்தினம் (ஜேர்மனி), செல்வனேஸ்வரி, புஸ்பகாந்தி (சுவிஸ்), செல்வத்தவம் (லண்டன்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் சிற்றம்பலம், காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் இராசமணி, அப்புத்துரை, புஸ்பதேவி, ஈஸ்வரி, ஞானாம்பாள், குலநாயகி, வரதராசா, (சுவிஸ்), சிவநேசன் (லண்டன்), உமா (ஜேர்மனி), சிவரங்கராஜா, காலஞ்சென்ற சண்முகவடிவேல் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2004) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைவாணிவீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.*

தகவல்: ஆ.செல்வநாயகம்(கணவர்)

(29490)(40-14-16-18)

### திருமதி ஜெகதீசன் உமாதேவி

தெல்லிப்பழை, கிளவ் லேனைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீசன் உமாதேவி 05.03.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெகதீசனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் - சீதாதேவி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வயிரமுத்தப்பா - பரமேஸ்வரி (மூளாய்) தம்பதிகளின் அன்பு மருமகளும் ஆனந்தன், ஜெயந்தன், ஜெயராமன், சுனித்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும் கதிர்காமசேகரன், மணிமேகலாதேவி, ரவீந்திரன், மேனகாதேவி, ரவிச்சந்திரன், உசாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பவளம், தில்லைநடராஜா, சற்குணநாதன், இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 15-03-2004 திங்கட் கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"இராஜவாசா"
நாவலடி,
கோப்பாய் மத்தி.
T.P.: 021 - 2227294

தகவல்: உசாதேவி தேவநாதன் (சகோதரி).

(29481)(21-16-14-18)

### திருமதி கனகராசா மகாலக்ஷ்மி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகராசா மகாலக்ஷ்மி (வவா) அவர்கள் நேற்று (09.03.2004) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சி.கனகராசாவின் அன்பு மனைவியும் சின்னத்துரை நாகேஸ்வரியின் அன்பு மருமகளும் காசிப்பிள்ளை இரத்தினம்மாவின் அன்பு மகளும் ஜெயராஜ், ஜெசிந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலசுப்பிரமணியம், கமலாதேவி, சிவபாதசுந்தரம், மகேந்திரராசா, மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் யோகநாதன், சிவநாதன், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் உமாதேவி, காலஞ்சென்ற சண்முகராசா, சுந்தரகாந்தா, மனோன்மணி, தியாகராஜா, பத்மகுமார், திருமதி சிவநாதன், இராஜேந்திரன், கமலநாதன், கனகலிங்கம், செல்வராணி, ஆனந்தராணி, சாந்தமலர், சாந்தரூபி, செல்லக்குமாரி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-03-2004) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோண்டாவில் ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
*நாகபூஷணி அம்மன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

தகவல்: சி.கனகராசா (கணவர்).

(29486)(21-14-16-18)


Jayoda ஜயோதா ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல 6106567 முதல் 6119988 வரை
சீட்டிழுப்பு இல.13 திகதி 08-03-2004

வெற்றி எண்கள் **8 6 4 7 4 0** சுப்பர் எண் **5**

**சுப்பர் ஜக்பொட் பரிசு 14,641,325/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் பெற்றோர் | வெற்றி தொகை | பரிசுத் | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 14,641,325/- | - |
| இடது பக்கத்திலிருந்து முதல் 6 எண்கள் | - 01 | 1,000,000/- | 1,000,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 600,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 119 | 5,000/- | 595,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,175 | 500/- | 587,500/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 11,766 | 50/- | 588,300/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 1 எண் | 116,585 | 10/- | 1,165,850/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 14 | 5,000/- | 70,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 114 | 1,000/- | 114,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,177 | 100/- | 117,700/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 11,660 | 20/- | 233,200/- |
| மொத்தம் | 142,623 | | 5,071,550/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.5,071,550/-

**இந்த வியாழக்கிழமைக்கான**
**சுப்பர் ஜக்பொட் ரூ.14,968,450/-**

தொடர் இல. 7082665க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 மார்ச் 11ம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விற்பேர்கஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6115556-1-26
6109886-4-68
6114846-5-52
6106890-0-10
6117261-9-63

# பிரதேச வாதம் என்பது தமிழ் இனத்தை குறுகத் தறிக்கும் ஒரு நச்சுக் கோடரி!

## திருகோணமலைச் சமூகம் அறிக்கை

திருகோணமலை மார்ச்,10

பிரதேச வாதம் என்பது தமிழ் இனத்தைக் குறுகத் தறிக்கும் ஒரு நச்சுக் கோடரி.

திருகோணமலை வாழ், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், பல் கலைக்கழக மாணவர்கள், சகலதரப்பு உத்தியோகத்தர்கள், வர்த்தகசமூகத்தினர் மற்றும் பொது மக்கள் ஆகியோரால் வெளியிடப்பட்டதாக குறிப்பிட்டு நேற்று வெளியான அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு என்பது தமிழ் பேசும் இனங்களின் தாயகம், தாயகத்தைப் பிரதேசத்தின பேராலோ, மதத்தின் பேராலோ, குறுகத் தறிக்க முயல்கின்றமை ஒரு பச்சைத் துரோகம் ஆகும் இந்தப் பச்சைத்துரோ கத்தை புரியும் ஒருவராக, விடுதலைக் காக சிந்தப்பட்ட விடுதலைப் போராளிகளின் குருதியின் பேரால் விலை கூறிவிற்கும் ஒருவராக மாறியுள்ளா அந்நிய விடுதலை விரோத சக்திகளுக்கு விலை போன ஒருவர். யார் இவர் என்று பேர் சொல்லி அறியவேண்டிய தேவை இல்லை. விடுதலைக்காக ஏந்தப்பட்ட கருவிகளை சொந்தத் தமிழ் மக்களுக்கு எதிராக இவர் திருப்பியுள்ளார். உண்மையில் மறுவளமாகச் சொல்வதானால் தனக்கு எதிராகத் திரும்பியுளளார்.

மட்டக்களப்பு , அம்பாறை மாவட்டங்களிலிருந்து திருகோணமலை, வன்னி, யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் மக்களை வெளியேறுமாறு கோரிக்கை வேறு அவர் பேரால் விடப்பட்டுள்ளது. தொலைபேசியூடாக அனாமதேய மிரட்டல்கள் வேறு விடப்பட்டுள்ளன. மிகமோசமான உட்பகையைத் தூண்டி தமிழ்ப் பிரதேசங்களுக்கிடையே பகைமையை மூட்டி அந்தத தீயிலே தனது சுயலாபம் ஈட்டிக் குளிர்காய முனைகின்றதான ஒரு செயலுக்கு , தமிழ் பேசும் மக்களே! யாரும் மனதாலும் துணைபோகாமல் இருங்கள்.

நாள்தோறும் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஊடாக வெளிவரும செய்திகள் மட்டக்களப்பில் இருந்து வெளிமாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் கல்வியியலாளர்களை, தொழில புரிபவர்களை, மாணவர்களை, உத்தியோகத்தர்களை வெளியேறிவிடுமாறு மிரட்டப்படுவதாகக் கூறுகின்றன. உண்மையில் இது மட்டக்களப்பு , அம்பாறை மாவட்டங்களில் கல்விசார் பின்னடைவுகளையும் எமது விடுதலைப் பாதையில் பாரதூரமான பின்னடைவுகளையும் ஏற்படுத்தும்.

தமிழ் தேசியப் போராட்டத்தில் இதுவரையும் கிழக்கு வாழ் தமிழ் மக்கள், போராளிகள் செய்த மகத்தான தியாகங்கள், பங்களிப்புகள் என்கின்ற பவித்திரமான முகத்திலே கறையைப் பூசும் செயலாகவே இது அமைகின்றது.

எமது விடுதலைப் போராட்டத்திற்கு மட்டுமல்ல கடந்த இரண்டரை வருடகாலத்திற்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சமாதான முயற்சிகளை, தமிழ் மக்களைக் கொண்டே சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட சதி முயற்சியின் ஓர் அங்கமாகவும் நாம் இதனைக் கருதவேண்டும்.

கடந்த காலங்களில் சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்ட சீர்குலைவுகளுக்கு விடுதலைப் புலிகளே அதாவது, தமிழ்த்தரப்பினரே காரணம் என்கின்ற பொய்யான குற்றச்சாட்டுக்களை நிரூபித்து நிற்கும் ஒரு முயற்சியாகவும் இது அமைந்துவிடும்.

தமிழ் - மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தின் ஒட்டு மொத்தமான குரலை பிளந்தெறியும் - தமிழ் மக்களின் ஆதரவின்றி அரசமைக்க முடியாத சூழ்நிலையைத் தடுப்பதற்குத் துணைபுரியும் துரோகச் செயலாகவும் இது அமைகின்றது.

பேச்சுக்களில் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகளே என்ற கொள்கைகளை முன்வைத்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழக் கூட்டமைப்பிலும் வடக்கு - கிழக்கு என்ற பிரிவினை வாதத்தை முன் வைத்து அதன் வலுவையும் ஒற்றுமையையும் சீர்குலைக்கும் சதிமுயற்சியாகவும் இது அமைகிறது.

வடக்கு - கிழக்கை துண்டாட விரும்பும் ஒரு தீயசக்தியாக மட்டும் இதனை இணங்கான வேண்டாம்.

சமாதானத்திற்கும், சமூகங்களிற்கிடையிலான நல்லிணக்கத்திற்கும் எதிரான, உள்ளக, வெளியக சக்திகளில் கூட்டுச் சதிகளுக்கு உடந்தையாகத் தொழிற்படும் ஓர் ஊடுருவல் சக்தியின் கருவியாக இதனை இணங்கான வேண்டும். வடக்கு - கிழக்கு சமூகங்களையும் ஒட்டுமொத்த சமாதானத்தையும் கூறுபோட முனையும் ஒரு நச்சுக் கோடரியாக இனம் கண்டு அதன் தீய நோக்கங்களிற்கு இரையாகாது இருக்குமாறு எமது உறவுகளை வேண்டிநிற்கின்றோம்.

எங்கள் மனங்களில் பிரதேச வாதம் எனும் நச்சுவிதை இன்னமும் ஒட்டியிருந்தால் அதனை 'கிள்ளி' எறிவோமாக. எந்த சுயநலமான நோக்கங்களிற்காகவும் சிறிதளவேனும் பிரதேசவாதத்தைப் பயன்படுத்தும் கேவலமான செயல்களைக் கைவிடுவோமாக. பிரதேசவாதம் என்கின்ற கோடரிக்காம்புகள் ஏந்தி நிற்கின்ற கொடிய கருவியாக இப்போக்கை இனம் கண்டு அதனை வீசி எறிவோமாக.

பல்கலைக்கழக சமூகத்தினர்களே! கல்வியியளார்களே! புத்திஜீவிகளே! எமக்கு முன்னால் ஒரு மாபெரும் கடமை உள்ளது. தேசிய விடுதலையை ஊறுபடுத்தும் பிரதேசவாதம் போன்ற குறுகிய வாதங்களில் இருந்து எமது இளைய பரம்பரையினர்களை மீட்டெடுக்கவும் நல்நெறிப்படுத்தவும் முனைந்து/முயலுதல் வேண்டும். கல்வியியலாளர்கள் மட்டுமில்லாது சமாதானச்சூழலை விரும்பும் சகல நேசசக்திகளும் சமாதானத்திற்கு எதிரான சக்திகளின் சதி முயற்சிகளை கண்டித்து குரலெழுப்புவோமாக.

ஒன்றிணைந்த வடக்கு- கிழக்கிற்குள் நாம் அனைவரும் இணைந்து செயற்பட்டு நமது தேசியத்தை ஒரு கொடியின் கீழ் வென்றெடுப்போமாக என்றுள்ளது.

(ஒ-290)

## சட்டவிரோதப் பயணத்துக்கு உதவும் படகு உரிமையாளர்கள் கைது!

கொழும்பு, மார்ச்10

சட்டவிரோதமாக இத்தாலிக்கு ஆள்களை ஏற்றிச்செல்லும் படகுகளின் சொந்தக்காரர்கள் சிலரை பொலீஸார் கைதுசெய்துள்ளனர். அண்மையில் 294 பேர் சட்டவிரோதமாகப் படகுகளில் இத்தாலிக்குச் சென்றுகொண்டிருந்தவேளை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையிலிருந்து கிடைத்த தகவ லின் அடிப்படையிலேயே படகுச் சொந்தக்காரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலீஸ் பிரிவின் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ரி.எஸ். அமரதுங்கா தெரிவித்துள்ளார். (ஒ-4-ரி)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 10 - 12 - 1927



இறப்பு 30 - 01 - 2004

### அமரர் மயிலு பொன்னையா

நெஞ்சமெல்லாம் நிறைந்துவிட்ட தெய்வமே!
வஞ்சனை இல்லாமல் வாழவைத்த தெய்வமே!
சொல்லுக்குள் சொல்லைச் சுருக்கி வைத்த சோதியமே!
சொல்லொணாச் சுடர் ஒளியே! -ஐயா!
ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தும்
ஐயா! என்றழைக்க நீங்கள் இல்லையே!
விழி கசிந்து நாமிருக்க விண்நோக்கிப் போனதேன்?
பதைபதைத்து நாம் கதற பார்க்காமல் போனதேன்?
ஐயா எம் உயிர் உள்ளவரை நாம் சிறகொடிந்த பறவைகள்தான.

*பாரதி வீதி,*
*கோண்டாவில் மேற்கு.* (29498)(40-11-31-36) - குடும்பத்தினர்.


வீடு விற்பனைக்கு

நாயன்மார்க்கட்டு, செம்மணி பிரதான வீதியில் 6 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
077 6127628
077 6256237

ராஜா யாழ்ப்பாணம்



சிம்பு, சோனியா அகர்வால், நாசர் நடிப்பில்
கோவில் (ரீல்ஸ்)
காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பி.ப.)

நிரஞ்சனாஸ் சங்கானை



ரஜனி, ஸ்ரீபிரியா நடித்த
பில்லா
(ரீல்ஸ்) காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
BLOOD SPORT - 2 கராட்டிப் படம்

லிபேட்டி அச்சுவேலி



பார்த்தீபன், விக்கினேஸ், விஜலக்ஸ்மி, செந்தில் நடித்த
சூரி (ரீல்ஸ்)
காட்சிநேரம்: 3.00, 7.00 (பி.நே.)
(C-33521)

நாகம்ஸ் சுன்னாகம்

டொல்பி ஒலிநயத்துடன்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக



சரத்குமார், லைலா, வடிவேலு நடித்த
கம்பீரம்
தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பி.நே.) (C/33520) (12)


உ

### யாழ்ப்பாணம் கந்தர்மடம்
### செட்டியந்தாழ்வு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்

*சுவஸ்திஸ்ரீ நிகழும் சுபானு வருஷம் மாசிமாதம் 10.03.2004 புதன்கிழமை காலை 6.00 மணிமுதல் 8.00மணிவரை குருவாசம் புதிதாக அமைக்கப்பெற்ற இல்லம் (கிரகப்பிரவேஷம்) நடைபெறும். ஆகவே, இவ்வைபவத்தில் அடியார்கள், உபயகாரர்கள், அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வைரவப் பெருமானின் ஆசியுடன் அழைக்கின்றோம்.*

ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர்
சிவப்பிரம்மஸ்ரீ நாகேந்திர பாலசுப்பிரமணியகுருக்கள்,
(29501)(37-11-31-36) கந்தர்மடம.

## மரண அறிவித்தல்கள்

### குரும்பசிட்டி க. விஸ்வநாதன்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் நீர்கொழும்பு (பியூட்டி ஹவுஸ், முகுந்தாஸ்) பிரபலவர்த்தகர் க.விஸ்வநாதன் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் கஜமுகன் (சுவிஸ்), முகுந்தன் (நோர்வே), இரமணன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2004) புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(29497)(39-11-31-36) சி.தயாபரன், குரும்பசிட்டி.

### திருமதி மேரி நோசலின் நகுலேஸ் (றோசி)



நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை என்னும் முகவரியைப் பிறப்பிடமாகவும் கனடா, மொன்றியல் நகரை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி மேரி நோசலின் நகுலேஸ் அவர்கள் 08.03.2004 திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் (கனடா நேரம்) கனடாவில் காலமானார்.

அன்னார் கந்தர்மடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லப்பா நகுலேஸ் அவர்களின் அருமை மனைவியும், தர்மசீலன் (கனடா), ரூபி அஞ்சலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இலக்கினேஸ்வரி (கனடா), சர்வேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற திருமதி கபிரியேல் திரேசம்மா, அருளப்பு (ஓய்வுபெற்ற மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்) ஆகியோரின் இளைய சகோதரியும் யேசுதாசன் சாள்ஸ், பாஸ்கரன், டோமினிக், மரியராஜேஸ்வரி (ஆசிரியை, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), அருட்திரு. க.அருள்நேசன் (பங்குத்தந்தை, மிருசுவில்), மேரிசந்திரபூபதி ஆகியோரின் சிறியதாயாரும் சந்திரபாபு, ராஜேந்திரபாபு, கஸ்தூரி ரவீந்திரபாபு, சுரேந்திரபாபு ஆகியோரின் மாமியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மசீலன் (தாசன்) கனடா,
அருட்திரு. க.அருள்நேசன்
பங்குத்தந்தை,
புனித நிக்கொலஸ் ஆலயம், மிருசுவில்.

*T.P:001-514-2737511 (கனடா).*
(29499)(36-11-31)

### திருமதி நடராசா செல்லம்மா



காரைநகர், சல்லையைச் சேர்ந்த நடராசா செல்லம்மா (சந்தனம் செல்லம்மா) 09.03.2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் கந்தப்பு - சந்தனம் தம்பதிகளின் அன்பு மகளும் கந்தையா நடராசாவின் அன்பு மனைவியும் குமரசாமி(கனடா), பரமேஸ்வரி, சிவகுஞ்சரி, அன்னலட்சுமி, கிஸ்ணராஜா (கனடா), பவானி ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்தவதனா (கனடா), சிவலிங்கம், ஜெயராசா, ஜெகநாதன், கௌசல்யா (கனடா), உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் கிஷாந், கஜேந் நிலக்ஷன், சிவனேஸ்வரி, புவனேஸ்வரி ரவீந்திரன், பரணீதரன், சிவனேசன், விநோதினி, டிஜீவன், காயத்திரி, ரிஷிகேசன், தாட்சாயினி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
*சல்லை, காரைநகர்.* (29502)(37-11-13-36) குமாரசாமி (மகன்).

## வருடாந்த உற்சவத்தையொட்டி

# இன்று மதியம் தொடக்கம் பாலைதீவு செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்10

பாலைதீவுத் தேவாலயத் திருவிழாவுக்கு இன்று மதியம் முதல் குருநகர் இறங்குதுறையில் இருந்து பக்தர்கள் புறப்பட்டுச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று பலாலி இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த தேவாலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறுகிறது. இதனையொட்டி இன்று மதியம் முதல் பக்தர்கள் பாலைதீவு செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

நாளை முதல் உற்சவதினம் வரை தினமும் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை பக்தர்கள் பாலைதீவுக்குச் சென்று திரும்பலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

பாலைதீவு செல்கின்ற பக்தர்களுக்கு விண்ணப்பப்படிவம் ஒன்று வழங்கப்படும் என்றும் - அதனைப் பூர்த்திசெய்து அதன் பிரதி ஒன்றையும் இணைந்து வழங்கி பயண அனுமதியைப்பெற முடியும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-க)

## தேர்தலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இக்குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்தினர். தமிழ்ச்செல்வனுடன் புலித்தேவனும் சந்திப்பின்போது உடனிருந்தார். இப்பேச்சு 1.30 மணிவரை நீடித்தது.

பிரிட்டிஷ் தூதுவர் செய்தியாளர்களிடம் இச்சந்திப்பு குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத் தேர்தல் நீதியாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதற்குப் போதிய ஒத்துழைப்பு வழங்க புலிகள் முன்வந்துள்ளனர். பொதுத்தேர்தல் முடிந்தவுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் புலிகள் இணக்கம் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாண நிலைமை மற்றும வடக்கு-கிழக்கு மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவது ஆகியவை குறித்தும் இப்பேச்சின் போது புலிகள் விளக்கினர்.

- இவ்வாறு எவன்ஸ் கூறினார். (க)

## கொல்லப்பட்டார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை.

*கேள்வி:-* கருணாவின் செயற்பாடுகள் குறித்து...?

*பதில்:-* அவர் ஒரு தனிமனிதனாக இயங்கிக் கொண்டிருக்கின்றார். எமது அமைப்புக்கும், எமது தலைமைக்கும் மதிப்புக் கொடுக்காமல் தனிப்பட்ட முறையில் செயலாற்றுகிறார். அதை வைத்துக்கொண்டு குழப்பமான விடயங்களில் ஈடுபடுகிறார். இதன் மூலம் எமது அமைப்புக்கு களங்கம் ஏற்படுத்துகிறார். அவர் தனிநபராக இயங்குவதாகவே கருதுகிறேன் - என்றார். (ஒ-க-3)

# கஞ்சா கடத்தியவர் விபத்தால் பிடிபட்டார்!

யாழ்ப்பாணம்,மார்ச்10

மோட்டார் சைக்கிளில் கஞ்சா கடத்தியவர் என்று கூறப்படும் நபர் விபத்தில் சிக்கியதால் பொலீஸாரிடம் பிடிபட்டார். இவர் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் சைக்கிளில் வந்த வேறு நபர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆயினும், சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார்.

கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் திருநகர் இராசலிங்கம் வீதியைச் சேர்ந்த யோசப் ஜோன்சன் (வயது 39) என்பவரே மரணமானவராவார். இவருடன் சைக்கிளில் சென்ற இவரது மகன் காயத்துடன் உயிர்த்தப்பினார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிடப் பொலீஸார் முயற்சித்தனர். ஆனால், அவர் தப்பிச்செல்லவே, அவரை பொலீஸார் விரட்டிச் சென்றனர். அந்தச் சமயத்தில் மோட்டார்ச் சைக்கிளில் சென்றவர் யாழ். மடத்தடிப் பகுதியில் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இந்த விபத்தை அடுத்து பொலீஸார் மோட்டார் சைக்கிளில் சென்றவரை சோதனையிட்டபோது அவர் கஞ்சா கடத்தியமை தெரியவந்தது.

இந்த விபத்தில் சைக்கிளில் வந்தவரும் அவரது மகனும், கஞ்சாகடத்திய நபரும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு சிகிச்சை பயனளிக்காது சைக்கிளில் வந்தநபர் மரணமானார். (ஒ-7-15)

# வாக்காளருக்கு அசௌ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றி அவர்கள் உள் நுழைய அனுமதிக்கப்படுவர் என்றும் -

அந்தப்பகுதியில் உள்ள சோதனைச்சாவடிகளில் பொலீஸாரே கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் - வடக்குக் கட்டளைத் தளபதி வாக்குறுதி வழங்கியுள்ளார்.

வலிகாமத்தில் உயர்பாதுகாப்பு வலய எல்லையிலிருந்து 600மீற்றர் தூரத்திற்கு முன்பாக 650 வீடுகள் உள்ளன. அவற்றில் எவரும் மீளக்குடியமர முன்வரவில்லை. அந்த வீடுகளின் உரிமையாளர்கள் எவ்வித தயக்கமும் இன்றி மீளக்குடியமர முடியும் என்றும் கட்டளைத்தளபதி தெரிவித்தார்.

இது தொடர்பாக இராணுவத் தளபதி மேலும் தெரிவிக்கையில் -

600 மீற்றர் பிரதேசத்தில் முதல் 300 மீற்றர் தூரத்துக்குள் உள்ளவர்கள் தமது காணிக்கான உறுதியைப படையினரிடம் காட்டி உறுதிப்படுத்திய பின்னர் அப்பிரதேசத்தில் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர். படிப்படியாக எஞ்சியுள்ள பகுதிகளிலும் மீளக்குடியமர மக்கள் அனுமதிக்கப்படுவர். அத்தோடு, அதன்பின்னர் உயர் பாதுகாப்பு வலயத்தினை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்.குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தொடர்பான விவரங்களை வழங்குமாறு பல நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால், எவரும் அதனை இதுவரை வழங்கமுன்வரவில்லை.

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனவர்களில் 176 பேர் தொடர்பாக எதுவித தகவலையும் பெறமுக்கொள்ள முடியவில்லை. ஒரே ஒருவர் மட்டும் தற்போது கண்டியில் வசித்துவருகிறார் என்ற தகவல் எனக்குக் கிடைத்துள்ளது.

காணாமற்போனவர்களுக்கு மரணச் சான்றிதழையும், நஷ்டஈடாக 50ஆயிரம் ரூபாவையும் பெற்றுக் கொடுப்பதற்கு தன்னால் நடவடிக்கை எடுக்க முடியும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் என்னிடம் தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாட்டில் மனித உரிமைகளைப் பேணுவது குறித்து படையினருக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் பயிற்சி அளிக்க விரும்பினால் தாராளமாகப் பயிற்சி அளிக்கலாம் எனக் கட்டளைத் தளபதி கூறினார். - என்று பேராசிரியர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் படைத்தரப்பில வடக்குப் பகுதிக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, மேஜர் ஜெனரல் ரி.ஆர்.சில்வா மற்றும் கேணல் ரணதுர ஆகியோரும் உப குழுசார்பில் அதன் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பேராசிரியர் வ.ஆறுமுகம், சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், மனித உரிமைகள ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் ஆர்பி.சந்திரசேகரா மற்றும் செயற்றிட்ட அதிகாரி செல்வி வேழினி வல்லிபுரம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-5)

## வன்னியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுளளது. வடபகுதி வர்த்தகர்களின் வியாபார நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

அரச திணைக்களங்களில் ஊழியர் வரவு குறைந்தே காணப்பட்டது. பாடசாலைகளும் சீராக இயங்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ்., வன்னிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரை அவர் சந்தித்துப் பேசுவார்.

இன்று மாலை கிளிநொச்சி நோக்கிப் புறப்படும் அவர், நாளை கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க)


## அவசர கலந்துரையாடல்

விடயம் : மீள் பரீட்சை தொடர்பானது
திகதி : 11.03.2004 வியாழன் காலை 10.00 மணி.
இடம் : யாழ். பல்கலைக்கழகம்.

கலை, முகாமைத்துவ, வணிக பீட மாணவர்களை (98A, 98BAD, 98C) கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.
- மாணவர்கள்.
(29434)(31-11-14)

## பணியாளர்கள் தேவை

கொத்துரொட்டி தயாரிக்கவும் சிற்றுண்டிகள் தயாரிக்கவும் உணவு பரிமாறவும் அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். உடனே தொடர்புகொள்ளவும்.

செ. பிரேமராஜன்,
ஜெனிகுளிரகம்,
பிரதான வீதி, அச்சுவேலி
(வீடியோ கலாமினிக்கு அருகில்).
T.P.: 0777 246920.
(சி-33973)(31-11-14)

## ஒரு வருட உத்தரவாதத்துடன்

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
IBM, COMPAQ, DELL
(Used Computer)
15000/- மட்டுமே
மிகக் குறைந்த விலையில்
உங்கள் தேவையை நிறைவு செய்யக்கூடிய ஒரு கணனியை தெரிவு செய்ய



STP Your Partner in IT solution
73, Palaly Road, Kantharmadam, T.P:021-222-2674


## மரண அறிவித்தல்கள்



### தவராசா செல்வரத்தினம்

வட்டு. செம்பாட்டான் தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மூளாய், வேரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய தவராசா செல்வரத்தினம் அவர்கள் நேற்று (09.03.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தவராசா - பூரணம் அவர்களின் பாசமிகு மகனும் மகிழ்ராசா, காலஞ்சென்ற நாகராஜா மற்றும் நந்தினி, சிவரஞ்சினி ஆகியோரின் சகோதரனும் பிரபாகரனின் மைத்துனரும் கமலாதேவியின் அன்புக் கணவரும் சசிதரன், சுசிதரன், வனஜா, வினுஜா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (10.03.2004) புதன்கிழமை பிறபகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நவாலி வழுக்கையாறு 'இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*வேரம்,*
*மூளாய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-33978)(37-11-14)



### சோமசுந்தரம் நடராசா

கலட்டி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நடராசா அவர்கள் நேற்று (09.03.2004) இரவு காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*21/2, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், ந.குலசிங்கம் (மகன்).

(29504)(31-14-11)









இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.